பக்கங்கள்: இருபது

# உதயன்

Registered as a Newspaper


விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 24 ஞாயிற்றுக்கிழமை (07.06.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 193

# இலங்கைப் போர்க் குற்றம் குறித்து சர்வதேச விசாரணை மிக அவசியம்

## பாதுகாப்புச் சபை உறுப்பினர்களுடனான சந்திப்பில் ஐ.நா. செயலாளர் நாயகம் வலியுறுத்து



ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை உறுப்பினர்களுடன்

நியூயோர்க், ஜூன் 07

இலங்கையில் நடைபெற்று முடிந்த போரின் போது போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுதால் அரசாங்கத்தினதும் விடுதலைப்புலிகளினதும் இராணுவ நடவடிக்கை குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இந்த விசாரணை சர்வதேச ஒத்துழைப்புடனும் இலங்கை அரசின் முழுமையான ஆதரவுடனும் நடத்தப்பட வேண்டியது அவசியம்.

இவ்வாறு வலியுறுத்திக் கூறியுள்ளார் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ - மூன்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மூடிய மண்டபத்தில் நடத்திய விசேட சந்திப்பின் போது செயலாளர் நாயகம் இதனைத் தெரிவித்தார்.

போர்க் குற்றங்கள் பற்றிய விசாரணை எவ்வாறு நடத்தப்படவேண்டும் என்று விவரிப்பதற்கு மறுத்த அவர் -

விசாரணை அர்த்தமுள்ளதாக அமைய வேண்டும். ஐ.நா. சபை உறுப்பினர்கள் அதனை ஆதரிக்க வேண்டும். அது பக்கச் சார்பற்றதாகவும் உரிய இலக்கும் நோக்கும் கொண்டதாகவும் இருக்க வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

நடந்தவற்றுக்குப் பதில் சொல்லவேண்டும் என்ற சர்வதேசத்தின் கோரிக்கையை இலங்கை அரசு (20 ஆம் பக்கம் பார்க்க)

## "வணங்காமண்" கொண்டு வந்த பொருள்களை இறக்குவதற்கு அனுமதி

கொழும்பு, ஜூன் 7

புலம்பெயர்ந்த மக்கள் வழங்கிய உதவிப் பொருள்களுடன் கொழும்பு வந்துள்ள 'கப்டன் அலி' (வணங்காமண்) கப்பலில் இருந்து பொருள்களை இறக்க அனுமதிப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சுத் (20 ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்த, கோத்தபாய, சரத்பொன்சேகாவை கொலை செய்யப் புலிகள் சதி முயற்சியாம்

### உயர்மட்ட இராணுவ அதிகாரிகளுக்கும் தொடர்பு

கொழும்பு, ஜூன் 7

உயர் மட்ட இராணுவ அதிகாரிகளின் உதவியுடன் ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர், இராணுவத் தளபதி ஆகியோரை கொலை செய்வதற்கு புலிகள் அமைப்பு செய்திருந்த சதிமுயற்சி அம்பலத்திற்கு வந்துள்ளதாம்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தற்போது தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வரும் இராணுவ லெப்டினண்ட் கேணல் ஒருவர் மூலம் இந்த திடுக்கிடும் தகவல்கள், அம்பலத்துக்கு வந்துள்ளன என்று சிங்கள வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. தற்போது வெளிநாட்டில் இருக்கும் இராணுவத்தின் மேஜர் ஜெனரல் ஒருவரை உடனடியாக இலங்கைக்கு கொண்டு வந்து மேலதிக விசாரணைகளை (20 ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் வாகன அணி ஏ-9 வீதியூடாக குடாநாட்டுக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 7

கொழும்பில் இருந்து ஏ - 9 பாதை ஊடாக தனியார் வர்த்தகர்களின் 120 லொறிகள் கொண்ட வாகனத் தொடரணி எதிர்வரும் 11 ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்து சேரவுள்ளது. (20 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் குழுவினர் இந்தியப் பிரதமரை இவ்வாரம் சந்திப்பர்

புதுடில்லி, ஜூன் 07

இந்தியா சென்றுள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இந்த வாரம் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தவிருப்பதாக நம்பத் தகுந்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## அரச சார்பற்ற நிறுவனங்களின் கட்டுப்பாடு பாதுகாப்பு அமைச்சுக்கு

### சமூக சேவைகள் அமைச்சிடம் இருந்து மாறும்

கொழும்பு, ஜூன் 7

சகல அரசசார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகளும் பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படவுள்ளன.

இதுவரை காலமும் சமூக சேவைகள் அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வந்த சகல (20 ஆம் பக்கம் பார்க்க)

## மயிலிட்டி ஆயுதக்கிடங்கில் நேற்றுக் காலை தீவிபத்து

கொழும்பு, ஜூன் 07

மயிலிட்டிப்பகுதியில் உள்ள படையினரின் ஆயுதக்கிடங்கில் நேற்று காலை திடீர் தீ விபத்து ஏற்பட்டது.

தீ கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டதாகவும் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் இராணுவப் (20 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் சகல தனியார் நிலங்களும் அரசுடைமையாகும்

### வெளியார் அபகரிப்பதைத் தடுப்பதே நோக்கமாம்

கொழும்பு, ஜூன் 07

முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் உள்ள சகல நிலப் பகுதிகளும், அரச நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்படவுள்ளதாக அறியப்படுகின்றது. மேற்படி மூன்று மாவட்டங்களிலும் வாழ்ந்த மக்கள் அகதிகளாக்கப்பட்டு, அநாதரவான நிலையில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர். இவர்கள் அவரவர் சொந்த இடங்களில் மீளக் குடியேற்றப்படும் வரை (20 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைத் தீர்வின் ஒரு பிரதான அம்சமாக 36 உறுப்பினர்களைக் கொண்ட செனட்சபை யோசனை?

கொழும்பு, ஜூன் 07

இனப்பிரச்சினைக்குரிய தீர்வு யோசனையின் பிரதான அம்சங்களில் ஒன்றாக, 36 உறுப்பினர்களைக் கொண்ட செனட் சபை (மூதவை) ஒன்றை நிறுவுவதற்கான யோசனை சேர்க்கப்பட உள்ளதாக அரசின் உயர்மட்டத்திலிருந்து தகவல்கள் கிடைத்துள்ளனவாம்.

இது குறித்து கொழும்பிலிருந்து வெளிவரும் பிரபல சிங்கள வார இதழில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அரசமைப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தத்தினைப் பயன்படுத்தி மூதவையை நிறுவும் யோசனைகளைச் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் உள்ள ஒன்பது மாகாணங்களில் இருந்தும் தலா நான்கு பேர் வீதம் மொத்தம் 36 பேரைத் தெரிவு செய்ய வகை செய்யப்படும் என்றும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்ததாக சிங்களப் பத்திரிகைச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான தகவல் இந்தியாவுக்கு தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

(20 ஆம் பக்கம் பார்க்க)

**நாளை**

ஜி.சி.ஈ உயர்தர மாணவர்களுக்கான 2 பக்கங்கள் கொண்ட இலவச மாதிரிவினாத்தாள்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

## யாழ் மக்களுக்கு மகிழ்ச்சியான அறிவித்தல்

பிடாரி கோயிலடி, ஆனைக்கோட்டையில் இயங்கிய செல்வம் சமுத்திரவள தொழில கம் மீண்டும் யாழில் ஆரம்பமாக இருக்கின் றது.

இத் தொழிற்சாலையில் முன்பு வேலை செய்தவர்கள் மற்றும் வேலை செய்ய விரும்புவர்கள் கீழுள்ள தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

எம்மிடம் தற்போது சில புதிய படகுகள் (சிநோர் 19 அடி) விற்பனைக்கு இருக்கிறது. தேவையானோர் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு இல - 0112546547
0778947824

## பாராட்டி வாழ்த்துகின்றேன்



**திருமதி ரூபினி வரதலிங்கம்**
(மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்)

அர்ப்பணிப்பு, ஆளுமை, இரக்கசிந்தை,
தலுடன்
பல - உயர்வான முடிவெடுத்து ஊருக்கு நன்மை
செய்தீர்
எவருமற்ற ஏழைகட்கு ஐயமறுத்தாதரித்தீர்
ஒப்புதல் தலைவியாக ஒரணியில் வழி நடத்தி
பலர் விடிவிற்கு வித்திட்ட வித்தகியே நீடு வாழி

வலி.தென் மேற்கு. **முதியவன்.**

## திருமண சேவை

மணமக்களே! www.thaalee.com என்கிற Website இல் பல்லாயிரக் கணக்கான மணமக்களுடைய முழுமையான விவரங்கள், ஜாதகங்கள், புகைப்படங்கள் உள்ளன. நீங்களாகவே உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொண்டு எம்மை நாடினால் நாங்கள் ஆவன செய்வோம். உங்களுடைய விவரங்களையும் நீங்களாகவே பதிவு செய்து கொள்ள முடியும். மேலதிக விவரங்களுக்கு தொ.பே.: 2523127, 2520619. Address: 45/1, மாதம்பிட்டிய வீதி, கொழும்பு - 15.

## PC POWER UNIT

356 B,Kasthuriyar Road,Jaffna.
Tel : 021 222 8816 / 0775290521

| | |
|---|---|
| **Casing** | CD Rom BBNQ-1500 |
| Handle Casing-3900 | CD Rom Sony - 1900 |
| Imtex -3750 | (1 Year Warranty) |
| (1 Year Warranty) | **UPS** |
| Mother Board | Jonnson - 4750 |
| Intel DG3L -8200 | Intex - 5400 |
| Roxcon -6000 | HPC -6600 |
| Asus P5GC-MX-6500 | (1 Year Warranty) |
| (1 Year Warranty) | |
| **Monitor** | **Printer** |
| 15" CRT LG-10500 | HP D1460 - 4600 |
| 15" LCD LG-13900 | Woofer |
| 17" LCD LG-15500 | 2.1 Milro Lab -3400 |
| 19" LCD LG-18750 | Accessories |
| (1 Year Warranty) | Optical Mouse (mini USB)-390 |
| **DVD Writter** | Optical Mouse Intex -550 |
| LG Sata (Bulk)-3200 | Power Supply - 2000 |
| LG Sata -3300 | (Warranty) |
| LG SDB -3500 | |

060 221 0582
021 222 8816

### சமுர்த்தி மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

யாழ்ப்பாணம், ஜூன் 7

கடந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்திபெற்ற தென்மாரட்சி பிரதேச சமுர்த்தி நன்மை பெறும் மாணவர்களுக்கு சமுர்த்தி புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

தற்போது க.பொ.த. உயர்தரம் கற்கும் மாணவர்களில் சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் இத் திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டு மாதாந்தம் 500 ரூபா வீதம் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி சமுர்த்தி சங்கத்தினர் பிரதேசத்தைச் சேர்ந்த 20 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கிவருவதுகுறிப்பிடத்தக்கது.(1-207)

## மணப்பெண் தேவை

சுண்டுக்குளி இந்து கௌரவகுலம், 32 வயது, பூரட்டாதி நட்சத்திரம், Electrical & Electronice Engineer,UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 7இல் செவ்வாய் உள்ளது.மூன்று சுற்றுக்கிரகபாவம் 56. இது ஒரு திருமணசேவை (www. thaalee. com).
Profile Number 6072.
போன் - 2523127

ஆவரங்கால், துன்னாலை, இந்து கௌரவ குலம், 30 வயது, அத்த நட்சத்திரம், Director ஆக இருக்கும். Phd in Chemical Engineering, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண்தேவை. 8இல் செவ்வாய் உள்ளது. மூன்று சுற்றுக்கிரகபாவம். இது ஒரு திருமணசேவை (www. thaalee. com).
Profile Number 5873.
போன் -2523127

கொக்குவில் - மாதகல், இந்து கௌரவ குலம், 34 வயது, பூர நட்சத்திரம், Accountant, UK-PR மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 8 இல் செவ்வாய் உள்ளது.மூன்று சுற்றுக்கிரகபாவம் 42.
இது ஒரு திருமணசேவை (www. thaalee. com).
Profile Number 5887.
போன் -2520619

Jaffna Hindu கௌரவ குலம், 29 வயது, ஆயிலிய நட்சத்திரம், M.Sc, Engineer ஆக இருக்கும். UK Citizen அழகான மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 4 இல் செவ்வாய் உள்ளது. மூன்று சுற்றுக்கிரகபாவம் 43 .
இது ஒரு திருமணசேவை (www. thaalee. com).
Profile Number 6028.
போன் -2520619

## 31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்

மலர்வு 08 ★ 11 ★ 1938



உதிர்வு 08 ★ 05 ★ 2009

**திருமதி ஆதிபுவனேஸ்வரி செல்வராசா**
(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாசாலை)

கடந்த 08.05.2009 வெள்ளிக்கிழமை சித்திரா பௌர்ணமி தினத்தன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி ஆதிபுவனேஸ்வரி செல்வராசா அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து துயர் பகிர்ந்தோருக்கும் உள்நாடு வெளிநாடுகளிலிருந்து மலர்வளையம் வைத்து அஞ்சலித்தோருக்கும், பத்திரிகைகள் மூலம் கண்ணீர் அஞ்சலி தெரிவித்தோருக்கும், உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்தோருக்கும் மற்றும் பல வழிகளில் நாடி வந்து உதவி புரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (07.06.2009) ஞாயிற்றுக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*(இதைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்)*

*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.* **குடும்பத்தினர்.**

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

(07.06.2009)





நயினாதீவைச் சேர்ந்தவர்களும் தற்போது லண்டனில் வசிப்பவர்களுமான திரு.திருமதி கமலானந்தன் - சிவதர்சினி தம்பதியினரின் செல்வப்புதல்வி

**செல்வி அபினயா**

இன்று (07.06.2009) ஞாயிற்றுக்கிழமை தனது முதலாவது பிறந்தநாளை லண்டனில் வெகுவிமரிசையாக கொண்டாடுகின்றார்.

இவரை மாமன் சி.றஜிந்தன் மற்றும் அனைத்து உற்றார், உறவினர்களும் நயினை அம்பாளின் அருள் துணையுடன் பல்கலையும் பெற்று நீடூழிகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

நயினை, யாழ், கொழும்பு, உற்றார் உறவினர்கள்.

### கரப்பந்தாட்ட செய்முறைப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினரால் நடத்தப்படும் மத்தியஸ்தர்களை தெரிவு செய்வதற்கான செயல்முறைப் பரீட்சை இன்று காலை 9 மணி முதல் புத்தூர் நடராஜ ராமலிங்க வித்தியாசாலையில்இடம்பெறவுள்ளது.


### அதிபர்பதவிகளுக்கு விண்ணப்பிக்க அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 7

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயம், அல்லாரை அ.த.க. பாடசாலை ஆகியவற்றில் வெற்றிடமாக உள்ள அதிபர் பதவிக்கு தகைமையுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வலயக் கல்வி அலுவலகத்தில் உரிய விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட அதிபர், கோட்டக் கல்வி அலுவலர் ஆகியோர் ஊடாக சமர்ப்பிக்க வேண்டுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-207)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



இன்று (07.06.2009) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் தனது முதலாவது பிறந்ததினத்தை கொண்டாடும் கமலானந்தன் - சிவதர்சினி தம்பதிகளின் ஏகபுதல்வி

**அபினயா**



பல்திறனும் பெற்று பல்லாண்டு
காலம் வாழ நயினை ஸ்ரீ நாகபூஷணி
அம்பாள் துணையுடன்
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
மாமாமார், மாமிமார்.
*நயினாதீவு -03*

## மரண அறிவித்தல்

**சங்ரோ அரியரட்ணம் அரியதேவா**
(ஓய்வுபெற்ற ஆசிரியர், கைதடி விக்னேஸ்வராக் கல்லூரி)

சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொழும்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட A.S.அரியதேவா (ஓய்வுபெற்ற ஆசிரியர், கைதடி விக்னேஸ்வராக் கல்லூரி) நேற்று (06.06.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ஜோயின் (ஓய்வுபெற்ற ஆசிரியை,சாவகச்சேரி றிபேக் கல்லூரி) அன்புக் கணவரும் சஞ்சியா, சனா, வனி, எட்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதாபோதகர், ஜீவா, ஞானகரன் ஆகியோரின் அருமை மாமனாரும் ஜோயல், நொயல், யூலியா, கெவீறன், டேரியஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 31/5, ரஜமாவத்தை, இரத்மலானையில் உள்ள அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (08.06.2009) திங்கட்கிழமை பி.ப. 3 மணியளவில் நல்லடக்க ஆராதனை நடைபெற்று கல்கிசை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
0777514919 மனைவி, பிள்ளைகள்.


## கூரியர் சேவை


இலங்கையின் சகல இடங்கள் மற்றும் உலகின் சகல நாடுகளுக்குமான கடிதங்கள், பொதிகள், CD மற்றும் ஆவணங்கள் போன்றன

விரைவாக ✷ பாதுகாப்பாக ✷ குறைந்த கட்டணத்தில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்

ARRUL GLOBAL EXPRESS இல. 01, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். T.P : 021 2226113


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகச் சீரழிவாக உருவெடுக்கும் இளைஞர்களின் அட்டகாசங்கள்; தடுக்கவேண்டிய பொறுப்பு பெற்றோரினதும் சமூகத்தினதும் கடமை!!!



அது குடாநாட்டின் ஆறு வலயங்களில் ஒன்றிலுள்ள முக்கியமான ஊர். ஊரின் மையப் பகுதியில் அமைந்துள்ள சந்தியில் இரண்டு மாதங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட 'ரியூப்' ஒட்டும் கடையில் இளைஞர்கள் சிலர் கதிரைகளில் குந்தியிருக்கிறார்கள். அவர்கள் அனைவரதும் கண்கள் வீதியையே உற்றுப்பார்த்தபடி இருக்கின்றன. காய்ந்துபோய் கிடந்த அவர்களது விழிகள் திடீரென பிரகாசமடைந்தன. வீதியால் பாடசாலை மாணவிகளும், ஒருசில இளம் பெண்களும் வந்து கொண்டிருந்தார்கள். அவ்வளவுதான் தாமதம்! இதற்குத்தான் இத்தனை நேரமும் காத்திருந்தவர்கள் போல தமது திருவிளையாடல்களை இளைஞர்கள் நிகழ்த்தத் தொடங்கினர்.

பெண்களை வர்ணிக்கும் வார்த்தைகளில் ஆரம்பித்து கடைசியில் அவர்களை இழிவுபடுத்தும் தகாத வார்த்தைகளோடு கூடிய தமது 'நக்கலடிக்கும்' அல்லது 'கடலை போடும்' படலத்தை ஆரம்பிக்கின்றனர். சீழ்க்கை ஒலிகளும், எக்காளச் சிரிப்புகளும் பக்க வாத்தியங்களாக அவர்களின் இந்தச் செயற்பாட்டுக்கு அணி செய்யத் தொடங்குகின்றன. இளைஞர்களின் வார்த்தைகள் தந்த வலியாலும், அவமானத்தாலும் முகம் கன்றி அழுகை பீறிட அவ்விடத்தை விட்டு வேகவேகமாக மாணவிகளும், பெண்களும் அகல முயல்கின்றனர்.



ஆனாலும் இளைஞர்கள் விடுவதாய் இல்லை. 'பல்ஸர்' களும், 'ஹீரோ கொண்டா'க்களும் இளைஞர்களைச் சுமந்த படி உறுமிக் கொண்டு மாணவிகளையும் பெண்களையும் பின்தொடர்ந்தன. சில இளைஞர்கள் தமது செல்போன்களில் மாணவிகளை படம் பிடிக்கவும் தவறவில்லை. ஏற்கனவே இவர்களின் செய்கைகளால் பாதிக்கப்பட்ட முன் அனுபவத்தால் தமது பெற்றோருடன் பாடசாலைக்குச் சென்ற மாணவிகளையும்கூட அவர்களது கேலிப்பேச்சுக்கள் குறிவைத்துத் தாக்கின. அவர்களது அநாகரிகமான வார்த்தைகளைப் பொறுக்கமுடியாத சில பெற்றோர் தட்டிக் கேட்கும் தோரணையில் இளைஞர்களின் செய்கையை நிறுத்தக்கோரினர். ஆனால் பெற்றோரின் கோரிக்கை இளைஞர்களின் செவிகளில் விழவேயில்லை. ''நாங்கள் யார் என்று தெரியுமா? வெட்டுக் குத்துக்காரர்.

- ஒளண்யன் -

தொலைத்து விடுவோம்'' என்று மிரட்டும் தொனியில் இளைஞர்கள் பதில் சொல்ல, சப்தநாடியும் ஒடுங்கியவர்களாக அவர்களின் கேலிப்பேச்சுக்களைச் சகித்தவாறு பெற்றோருடன் பெண்கள் தமது விதியை நொந்து கொண்டு பயணத்தைத் தொடர்ந்தனர்.

மேலே சொல்லப்பட்ட உண்மைச் சம்பவமானது ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்கிற ரீதியிலான உதாரணம் மாத்திரமே. இதுபோன்ற சம்பவங்கள் இன்னமும் தினந்தோறும் குடாநாட்டில் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. அதிலும் அண்மைக் காலமாக இளைஞர்களின் அட்டகாசம் எல்லைமீறிப் போயுள்ளதாக பெற்றோர் பலர் கவலை தெரிவிக் கின்றனர்.

வன்னியிலிருந்து எமது உடன் பிறப்புகள் தாங்கொணாத் துயரங்களைச் சுமந்து, தமது உயிரை மட்டுமே கையில் ஏந்திக் கொண்டு இப்போது வவுனியா, யாழ்ப்பாணம் பகுதிகளில் உள்ள நலன்புரி நிலையங்களில் வாடிவதங்கிக் கொண்டிருக்கையில் அதைப்பற்றிய எவ்வித பிரக்ஞையும் அற்று சினிமாவில் வரும் வில்லத்தனங்களை எமது குடாநாட்டு இளைஞர்கள் தொடர்ந்தும் பல இடங்களில் நிகழ்த்திவருவது

## கற்பனையுலகில் மூழ்கித் தவறான வழியில் இளைஞர் சமூகம் செல்வதைத் தொடரவிடலாமா?

பொதுமக்கள் பலரின் அதிருப்தியைக் கிளறியுள்ளது. இளங்கன்று பயமறியாது என்று சொல்வார்கள்.

இளமைப்பருவம் என்பது வாழ்வியலில் மிகக்குறுகிய காலமே அனுபவிக்கக்கூடிய தொன்றாகும். அக்காலத்தில் மன எழுச்சிகளும் உணர்ச்சிக் குவியல்களும் இளைஞரிடத்தே மிக அதிகமாகவே மேலெழும். இதன்போது அவர்கள் தமது நண்பர்கள் புடைசூழ அமர்ந்திருந்து, நவநாகரிகங்களை உள்வாங்கி, சமூகத்தின் முன் தம்முடைய வீரதீரப் பிரதாபங்களை நிரூபிக்க விரும்புவர். பெற்றோரும் தம்முடைய பிள்ளைகளின் ஆசைகளை நிறைவேற்ற தமது தலையையும் அடகு வைப்பர். கேட்டவுடன் புதிய உடைகள், கணனி, மோட்டார் சைக்கிள், கைத்தொலைபேசி என்பவற்றை வாங்கிக் கொடுத்து விடுகிறார்கள். அது தவிர இளைஞர்களின் கைச்செலவுக்கென தினமும் ஒருதொகைப்பணத்தையும் கேட்டுக்கேள்வியின்றி வழங்குகிறார்கள். இவையெல்லாம் மற்றைய பிள்ளைகள் அனுபவிப்பதை தமது பிள்ளைகளும் அனுபவிக்க வேண்டும் என்ற பெற்றோரின் மனதில் இயல்பாகவே உள்ள ஆசையின் வெளிப்பாடுகள்தான். ஆனால் அதனைச் சரியான முறையில் தமது பிள்ளைகள் பயன்படுத்து கிறார்களா? என்பதை அவர்கள் தொடர்ச்சியாகக் கண்காணிக்காமல் இருந்து விடுகிறார்கள். இதுதான் எல்லாப்பிரச்சினைகளுக்கும் மூலகாரணமாகி விடுகின்றது. மூக்கணாங் கயிறு இல்லாத மாடு போல தறிகட்டு தம்பாட்டுக்கு இளைஞர்கள் செயற் படுவதற்கு பெற்றோரின் மெத்தனப் போக்கே காரணம் எனலாம். ஏனெனில் அவர்கள் தமது பிள்ளைகளை சரியான முறையில் சில விட்டுக்கொடுப் புகளோடு நெறிப்படுத்தி, இளைஞர்களுக்கு - தம் பிள்ளைகளுக்கு - அத்தியாவசியமான பொருள்களை மட்டும் வாங்கிக் கொடுப்பதன் ஊடாக இளைஞர்கள் சமூகம் சமச்சீரைக் குழப்பும் செயற்பாடுகளில் ஈடுபடுவதைக் குறைக்கமுடியும்.


ஆயினும் முழுப்பழியையும் பெற்றோர்மீதே சுமத்திவிட முடியாது. தமக்கான எல்லாத்தேவைகளையும் கேட்டவுடனேயே தம்பெற்றோர் நிறைவேற்றுவது ஏன் என்பதை இளைஞர்கள் சிந்திக்க வேண்டும். அத்தோடு தமது குடும்பத்தின் நிலை, எதிர்காலத் தேவைகள், சமூக மதிப்பு, இளைஞர் களிடம் காலம் கோரி நிற்கின்ற கடமைகள் என்பவற்றையெல்லாம் அவர்கள் எண்ணிச் செயற்படுவார்கள் ஆயின் இத்தகைய இழிசெயல்களைச் செய்ய ஒருபோதும் விரும்ப மாட்டார்கள். ஆனால் துரதிஷ்ட வசமாக குடாநாட்டின் பெரும்பாலான இளைஞர்கள் அவ்வாறில்லை.

இன்றைய இளைஞர்களைப் பொறுத்த வரையும் தம்முடைய இளமைப் பருவத்தில் பொருளாதாரக் கஷ்டங்களை எதிர்கொள்வது என்பது அரிதாகவே உள்ளது. வீட்டின் பொருளாதார நிலை மிகவும் கீழ்நிலையில் இருந்தாலும் அதனை வெளிக்காட்டாது அவர்களுக்கான எல்லாத் தேவைகளும் பூர்த்தியாக்கப் படுகின்றன. வீட்டு வேலைகளைக்கூட இளைஞர்களைச் செய்யவிடாமல் பெற்றோரே செய்கின்றனர். இவையெல்லாம் ஒன்றுதிரண்டு நண்பர்களோடு இளைஞர்களை ஒவ்வொரு ஊரின் சந்தியிலும் 'பஜாரடிக்க' வைக்கின்றது. அந்தக் கும்பலில் உள்ள ஏனையோரின் எல்லாக் கெட்ட இயல்புகளும் இவர்களிடமும் தொற்றுகின்றன. இதனால் மெல்ல மெல்ல இவர்கள் சமூகத்துக்கு ஒவ்வாத நடவடிக்கை களில் ஈடுபடத் தொடங்குகின் றனர். காலப் போக்கில் அது அவர்களுக்கு இன்பம்தரும் ஒரு பொழுது போக்காகவும் மாறி விடுகின்றது. எனவே தொடர்ச்சியாக பெண்களைக் கேலி செய்தல், வம்புச்சண்டைக்குச் செல்லுதல், பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் போன்றனவற்றில் ஈடுபடுகின்றனர்.

சினிமா, நவநாகரிகம், மது என்பனவும் இளைஞர்கள் தறிகெட்டு நடப்பதற்கு ஊக்கிகளாக இருப்பதையும் மறுக்க முடியாது. இளைஞர்களை ஒருவித கனவுலகத்தில் சஞ்சரிக்கச் செய்து, அடாவடித்தனமான வம்பு தும்புகளில் ஈடுபடுபவன் சமூகத்தில் மதிப்பார்ந்த நாயகனாக உருவெடுக்க முடியும் என்ற தவறாத எண்ணத்தையும் அவர்களிடையே விதைக்கும் கருவியாக சினிமா விளங்குகின்றது. அதுதவிர தற்போது வெளிவருகின்ற எல்லாச் சினிமாத் திரைப்படங்களும் பாலியல் வக்கிரம் கொண்ட காட்சிகளை தாராளமாகவே வெளிப்படுத்துகின்றன. இது இளைஞர் களிடையே உறங்கிக் கிடக்கின்ற பாலியல்சார் எண்ணங்களுக்குத் தீனி போட்டு அது தொடர்பான தவறான நடவடிக்கைகளில் ஈடுபடவும் உந்தித் தள்ளுகிறது. சில காலங்களுக்கு முன்னர் படங்களின் பெயர்களிலும் [தீனா, பாட்ஷா] நடிகர்களின் பெயர்களிலும் இளைஞர்களிடையே அடிதடிக் கும்பல்கள் தோற்றம் பெற்றது அனைவரும் அறிந்த ஒரு விடயம்தான். அதே போன்றதொரு நிலைமை மீண்டும் ஒருமுறை தோற்றம் பெறுவதற்கான அறிகுறிகளாகவே யாழ்.இளைஞர்களின் அட்டகாசம் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதை அர்த்தப்படுத்த முடியும்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் யாழ்.நகரிலுள்ள முக்கியமானதொரு பாடசாலைக்குச் செல்லும் மாணவிகளை தமது கைத்தொலைபேசிகள் ஊடாக படம் பிடித்து, சேஷ்டைகளில் ஈடுபட்ட இளைஞர் கும்பல் ஒன்று படையினரால் எச்சரிக்கை செய்யப்பட்டு நீண்டநேரமாக வீதியில் முட்டுக்காலில் இருத்தி வைக்கப்பட்ட சம்பவம் அண்மையில் நடந்தேறியது. இவ்வாறு நடைபெற்ற பின்னரும்கூட இன்னும் வேறுசில பாடசாலைகளுக்கு அருகிலும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு அருகிலும் இதுபோன்று பெண்களுக்குத் தொல்லை கொடுக்கும் சம்பவங்கள் தொடரவே செய்கின்றன.

தட்டிக்கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன் என்று தமிழிலே ஒரு பழமொழி உண்டு. அதுபோலவே இப்போது தட்டிக்கேட்பார் எவருமின்றி இளைஞர்கள் தமக்கான வழியை தமது இஷ்டப்படி தவறான முறையில் அமைப்பதை சமூகப் பிரக்ஞை உள்ள எவரும் அனுமதிக்கமாட்டார்கள். எனவே நாளைய சமூகத்தை நல்ல முறையில் உருவாக்க வேண்டுமாயின் இன்றைய



இளைஞர்களை ஆரோக்கியமான முறையில் வழிப்படுத்த வேண்டியது பெற்றோர்களினதும், சமூக ஆர்வலர்களின தும் பொறுப்பாகும். அதேநேரம் இளைஞர்களும் தமது தவறுகளை உணர்ந்து சரியான திசையில் பயணிக்க வேண்டியதும் அவசியமான ஒன்றாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 13 . 08 . 1950



ஆண்டவன் இணைப்பில் 19 . 05 . 2008

### அமரர் நல்லையா புலேந்திரன்

(07.06.2009)

அப்பா நீங்கள் மறைந்து
ஓராண்டு ஆனதப்பா!
நம்பமுடியவில்லை
அலைபோல் ஆர்ப்பரிக்கும்
உமது குரலோசை அடங்கித்தான்
போனதுவோ!
இன்னமும் நம்ப முடியவில்லை அப்பா!

91, முத்த விநாயகா வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (85909)

உமது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.


## சாரணர் சங்கக் கூட்டம்

வடமராட்சி, ஜூன் 7

இலங்கை சாரணர் சங்க பருத்தித்துறை மாவட்டக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கிளைச் சங்கத் தலைவரும் பருத்தித்துறை பிரதேச செயலாளருமான இ.வரதீஸ்வரன் தலைமையில் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கு முன்னதாக காலை 8.30 மணிக்கு இதே மண்டபத்தில் பருத்தித்துறை மாவட்ட குருளைச் சாரணத் தலைவர்களுக்கான கூட்டம் இடம்பெறும். (236)


## மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், தற்போது ஜேர்மனி PR உடைய, 34 வயது, பூசம் 4ஆம் பாதம், 5 இல் செவ்வாய் உடைய மணமகனுக்கு மணமகளும், அதே குடும்பத்தைச் சேர்ந்த தற்போது இந்தியாவில் வசிக்கும் 28 வயது, அத்தம் 12இல் செவ்வாய் {B.Com., Computer Diploma (இந்தியா)} மணமகளுக்கு வெளிநாட்டு PR உடைய மணமகனும் தேவை.

தொடர்பு: 004176 5383216
Email- raku 007 @ BLUEWIN. CH. (86040)


## புதிய விடுதி திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன்7

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இடம்பெயர்ந்த மக்களுக்கான சுகாதார மேம்பாட்டுக்காக அமைக்கப்பட்ட விடுதியின் திறப்பு விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் உலக சுகாதார நிறுவனத்தின் தேசிய ஆலோசகர் வைத்திய கலாநிதி ஹரிஸ்சந்திர யக்கண்டாவல பிரதம விருந்தினராகவும், அபிவிருத்திக்கும் நிவாரணத்திற்குமான சர்வதேச நிறுவன பதில் தேசிய பணிப்பாளர் எம்.ஏச்.எம்.முனாஸ் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (204-207)


## அந்தியேட்டி அழைப்பு

39ஆம் நாள் நினைவு | 31ஆம் நாள் நினைவு

தோற்றம் 04.07.1930
மறைவு 30.04.2009





தோற்றம் 17.09.1939
மறைவு 08.05.2009

திருமதி அன்னபூரணம் இராமலிங்கம் | அமரர் அம்பலம் தங்கவேல்

உள்ளத்தால் உயர்வாகி
வாழ்விற்கு வழிகாட்டி
இதயத்தில் இருக்கும்
எங்கள் அன்புத் தெய்வங்களே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வங்கள் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் தொலை பேசி, தபால் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் நன்றி செலுத்துவதோடு, இன்று (07.06.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு தெணியம்மன் ஆலயத்தில் அந்தியேட்டி நடைபெற்று பின்னர் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோனசத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

கொடிகாம வீதி,
புலோலி தெற்கு,
புலோலி. (சி/558880)

தகவல்:
த.இராசமணி.



## சர்வதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில பாடநெறிகள்

சிறார்களுக்கு.........

PRE FOUNDATION
FOUNDATION
LEVEL 1,2,3,4

படிப்படியாக ஆங்கில அறிவை விருத்தி செய்யும் பாடநெறிகள்; பாடசாலை ஆங்கில கல்வித் திட்டத்துடன்!

புதிய பிரிவுகள் ஆரம்பம்
கிழமை மற்றும் வார நாள்களில்

G.C.E. (O/L) G.C.E (A/L) கற்றோருக்கு...

IELTS — இலவச பாடக் குறிப்புகள், மாதிரி வினாத்தாள் பயிற்சிகள், பரீட்சை பற்றிய விபரங்களுடன் பரீட்சைக்கான அனுமதியினை இங்கேயே பெற்றுக்கொள்ளும் வசதி.

DIPLOMA IN ENGLISH
CERTIFICATE IN ENGLISH

★ வெளிநாடு செல்ல விரும்புவோருக்கும்
★ வெளிநாடு / உள்நாட்டில் தொழில் வாய்ப்புக்களுக்கும்
★ சரளமாக ஆங்கிலம் பேசுவதற்கும்

**BRITISH BUSINESS SCHOOL**
140, Temple Road, Jaffna. Tel. - 021 222 5796

கிளைகள்:-
நல்லூர் :- இல.34, சட்டநாதர் வீதி, நல்லூர். Tel.021 222 4060
சுன்னாகம் :- Lakshmi Cottage, (புதிய நீதிமன்றம் அருகில்) K.K.S. வீதி, மல்லாகம்.
மானிப்பாய்:- 252, ஆலடிச் சந்தி, யாழ்.வீதி, மானிப்பாய்.
புலோலி:- ஸ்ரீபத்மநாதன் இல்லம், மந்திகை.



## மரண அறிவித்தல்

### தம்பிஐயா பாலகுமாரநாதன் (கண்மணி)



லெல்லுப்பிட்டி, இரத்தினபுரியைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா பாலகுமாரநாதன் (கண்மணி) (03.06.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.06.2009) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைக்கோட்டை, எருக்கலம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

52, ஈஸ்வரபதி,
பிரதான வீதி,
ஆனைக்கோட்டை.
தொ.பே.: 222 2753. (85907)

தகவல்:
மனைவி (சுட்டா),
பிள்ளைகள்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட் உலகின் பலப்பரீட்சையாக ஐ.சி.சி 'ருவென்ரி - 20' உலகக்கிண்ணம்

## களத்தில் குதித்துள்ள 12 அணிகளில் வெல்லப்போவது யார்?

கிரிக்கெட் ரசிகர்களுக்கு மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டு ஓடும் காலமாகி விட்டது 2009. இரண்டாவது ஐ.பி.எல் திருவிழா முடிவுற்ற கையுடன் நேற்று முன்தினத்துடன் ஆரம்பமாகியுள்ளது உலக்கக்கிண்ண 'ருவென்ரி - 20' போட்டிகள்.

இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் ஆரம்பமாகியுள்ள இப்போட்டிகள் ஆரம்பமாகும் நேரத்திலேயே எதிர்வரும் 11ஆம் திகதி பெண்களுக்கான 'ருவென்ரி - 20' போட்டிகளும் ஆரம்பமாகின்றன.

கோலாகலமாக ஆரம்பித்துள்ள முதலாவது போட்டியிலேயே இங்கிலாந்துக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்து முதல் வெற்றியைத் தனதாகப் பதித்துள்ளது நெதர்லாந்து.

எனினும் கிரிக்கெட்டில் முத்திரை பதித்து சாதனை படைத்து நிற்கும் அவுஸ்திரேலியா, இந்தியா, தென்னாபிரிக்கா, இலங்கை, பாகிஸ்தான், நியூசிலாந்து, இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் என பலம்வாய்ந்த அணிகளுடன் 'ருவென்ரி - 20' உலகக் கிண்ணத்திற்கு அறிமுக அணிகளுமாக நெதர்லாந்து, அயர்லாந்து 12 நாடுகள் மோதத் தயாராகிவிட்டன.

ஏ, பி, சி, டீ என 4 பிரிவுகளாக ஒரு பிரிவில் 3 அணிகள் வீதம் களமிறங்கியுள்ள அணிகளுக்கு முதல் சுற்றில் ஒரு அணிக்கு 2 போட்டிகளும், சுப்பர் - 8க்குள் நுழையும் அணிகள் ஈ, எஃப் என 2 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு ஒரு அணி அப்பிரிவில் அங்கம் வகிக்கும் ஏனைய அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். வெற்றிபெறும் அணிகள் 18ஆம், 19ஆம் திகதிகளில் நடைபெறும் அரையிறுதிப் போட்டிகளிலும் 21ஆம் திகதி நடைபெறும் இறுதிப் போட்டியிலும் மோதவுள்ளன.

வெற்றிக்கிண்ணம் இம்முறை எமக்கே சொந்தம் என வரிந்து கட்டிக்கொண்டு நிற்கும் அணிகள் மீது ஒரு பார்வையைச் செலுத்துவோம்.

### இளமைத் துடிப்புள்ள இந்தியா

முதலாவது உலகக்கிண்ண 'ருவென்ரி - 20' போட்டியின் சம்பியனான இந்திய அணிக்கு மீண்டும் சம்பியனாகும் வாய்ப்பு இம்முறையும் அதிகமாகவே உள்ளது. இளமைத் துடிப்பு மிக்க அணித்தலைவர் தோனியின் பின்னால் இளரத்தம் ஓடும் வேகப் படையொன்று சம்பியன் பட்டத்தைத் தட்டிச் செல்லத் தயாராகவே உள்ளது.

கடந்த மாதம் நடைபெற்ற ஐ.பி.எல் போட்டிகளில் சாதித்த ரோகித் சர்மா, சுரேஸ்ரெய்னா, ஆர்.பி.சிங், ஓஜா என்போருடன் அதிரடி வீரர் ஷேவாக், கம்பீருடன் அதிர்ஷ்டம் கைகொடுக்கும் தலைவரான தோனி என துடுப்பாட்டம், பந்துவீச்சாளர் எனத் தனித்தனியாக பிரகாசிக்காது சகல துறைகளிலும் பிரகாசிக்கும் இளம் புயல்களாய் களமிறங்குகின்றது.

### வன்மம் தீர்க்கும் பாகிஸ்தான்

எலியும், பூனையுமான இந்தியாவும் பாகிஸ்தானும் ஜென்மத்துப் பகைவர்கள். அரசியல் பிரச்சினை விளையாட்டிலும் எதிரொலிக்கும். இந்திய, பாகிஸ்தான் அணிகள் மோதும் சாதாரண போட்டிகளிலேயே ஆக்ரோஷமாக இவ்வணிகள் மோதும்.

முதலாவது 'ருவென்ரி - 20' போட்டிகளில் இந்தியாவும் பாகிஸ்தானும் மோதிய போட்டிகள் பார்வையாளர்களை இருக்கையின் நுனிக்குக் கொண்டுவந்து அவர்களின் இதயத்துடிப்பை அதிகப்படுத்தியவை என்றால் மிகையல்ல.

யூனுஸ்கான் தலைமையில் களமிறங்கும் இவ்வணியின் நம்பிக்கை நாயகர்கள் மிஸ்பா உல்வருக், மலிக், தன்வீர், அக்மல், அப்ரடி ஆகியோர் இம்முறையும் இந்திய அணிக்கும் ஏனைய அணிகளுக்கும் சவால் விடுக்கும் அணியாகவே இருக்கும்.

### (சே)சாதனை இலங்கை சாதிக்குமா?

இவ்வாண்டில் பாகிஸ்தானில் தீவிரவாதிகளிடம் அடிவாங்கிய வலியுடன் தலைமை மாற்றம், லண்டன் வாழ் தமிழர்களின் எதிர்ப்பலைகளுக்குள் களமிறங்குகின்றது இலங்கையணி.

ஐ.பி.எல் போட்டிகளிலும் மலிங்க, சங்கக்கார, டில்சான், முரளி தவிர ஏனைய வீரர்கள் எவரும் பிரகாசிக்காத நிலையிலும் நம்பிக்கையுடன் களமிறங்கும் இலங்கையணிக்கு அது இருக்கும் பிரிவிலும் சோதனையுள்ளது.

'சி' பிரிவில் களமிறங்கும் இலங்கை அணி அவுஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள் எனும் பலமான அணிகளுடன் மோத வேண்டும். அதிரடி நாயகன் சனத் ஜெயசூர்யா ஐ.பி.எல் போட்டிகளில் சறுக்கிவிட்டார். ஆனாலும் நம்பிக்கை நட்சத்திரமாக ஜொலிக்கும் ஜெயசூர்யா இப்போட்டியில் பங்குபற்றும் 180 வீரர்களிலேயே கூடுதலான வயதுடையவராகவும் திகழ்கின்றார்.

புதிய தலைமை சங்கக்கார அணியை தாங்கிக் காக்கும் வல்லமையுடையவர். அவருக்கு பக்கபலமாக எதிரணி வீரர்களின் விக்கெட்டுக்களைத் தகர்த்தெறியும் மலிங்க டில்சான், சுழல் மன்னன் முரளி, ஜெயவர்த்தன என பலம்சேர்க்கும் வீரர்களுடன் தயாராகவே உள்ளது.

ஒருநாள் போட்டி, 'ருவென்ரி - 20' போட்டி டெஸ்ட்போட்டி என அனைத்திலும் அதிக ஓட்டங்களைக் குவித்த அணி என்ற பெருமைக்குரிய இலங்கையணி சாதிக்குமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

### முடிசூடா மன்னன் அவுஸ்திரேலியா

கிரிக்கெட் உலகின் முடிசூடா மன்னனாகத் திகழும் அவுஸ்திரேலியா முதல் தொடரில் வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்ற முடியாது வெளியேறியது. ஆனாலும் அதிரடி வீரர் சைமன்ட்ஸ் இத்தொடரிலிருந்தும் அதிரடியாக நீக்கப்பட்டுவிட அவருக்குப் பதிலாக புதுமுக வீரர் ஒயிட் களமிறங்குகிறார்.

ஆனாலும் ஏனைய வெற்றிவீரர்கள் பொன்டிங் தலைமையில் களமிறங்குகின்றனர். வெற்றிக்கூட்டணி வெற்றியடையுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

### கலக்கல் நாயகன் தென்னாபிரிக்கா

அதிரடியான துடுப்பாட்ட வரிசையின் பலம் மூலமாக முதலிடத்தில் நீண்டகாலம் நிலைத்துநின்ற அவுஸ்திரேலியாவுக்கு தோல்வியை ஏற்படுத்தி இறங்குமுகத்தைக் காட்டிய இந்த அணியின் மிகப்பெரிய பலம் துடுப்பாட்டமே இரண்டாவது ஐ.பி.எல் தொடரில் இவ்வணியைச் சேர்ந்த வீரர்கள் அசத்தியிருந்தனர். டுமினி, கலிஸ், கிப்ஸ், ஸ்மித், ஏ.பீ.டீ.வில்லயர்ஸ் என கலக்கினர். எனினும் பந்து வீச்சிலும் சோரம்போய்விடவில்லை என்பதை நிஜமாக நிஸ்னியுடன் கலிஸ், சிப்ஸ் போன்ற சகல துறை வீரர்களும் கைகோர்த்து நிற்கின்றனர்.

### தலைவன் வழியில் மே.இந்.தீவுகள்

ஒட்டுமொத்த அணியின் பலமாக நிற்பவர் அணித்தலைவர் கிறிஸ்கெய்ல் இவர் தவிர சந்தர்போல், சர்வான், பிராவோ போன்ற அதிரடிக்காரர்களுடன் பதிலுக்கு மிரட்டக் காத்திருக்கிறது மேற்கிந்திய தீவுகள்.

### விட்டோரி என்ன செய்யப்போகிறார்

விட்டோரியின் வழிகாட்டலில் களமிறங்கும் நியூசிலாந்தின் துடுப்பாட்டத்திலும் களத்தடுப்பிலும் பலத்துடனே உள்ளது. மக்கலம் றோஸ்ரெய்லர், ஜேக்கப்ஓரம், ஸ்ரைறிஸ் என துடுப்பாட்ட வீரர்கள் உள்ளபோதும் பந்து வீச்சு விட்டோரியிடம் மாத்திரமே தங்கியுள்ளது.


### சளைத்தவர்கள் நாமில்லை

ஏனைய அணிகளுக்கு சற்றும் சளைத்தவர்கள் நாமில்லை என்று களமிறங்கிய இங்கிலாந்து 'ருவென்ரி - 20' உலகக்கிண்ண போட்டிக்கு அறிமுக அணியான நெதர்லாந்திடம் முதல்போட்டியில் மண்ணைக் கௌவியபோதிலும் சவால் விடும் அணியாகவே திகழ்கின்றது.

அணிக்கு வலுச்சேர்க்கும் முன்னாள் அணித்தலைவர் பீற்றர்சன், பிளின்ரொவ் ஆட்ஷா, போபரா என களமிறங்கியுள்ளது இங்கிலாந்து.

### எழுவோம் நாம்

இளமைத்துடிப்பு மிக்க இளைஞர் பட்டாளத்தை களமிறக்கியுள்ளது பங்களாதேஷ் அணி. அப்துல் ரஷாக், அஷ்ரப்புஃல், மோற்றர்ஷயா என இளம்புயல்கள் உலகக் கிண்ணப் போட்டிகளில் சாதித்ததுபோல் இம்முறையும் சாதிப்பர் என்று எதிர்பார்க்கலாம்.



ஆனாலும் பங்களாதேஷிடம் இன்னமும் வளர்ச்சியை எதிர்பார்க்க வேண்டியுள்ளது.

முதல் போட்டியிலேயே இங்கிலாந்தை வீழ்த்திய பூரிப்புடன் நெதர்லாந்து அறிமுகமானபோதே பாகிஸ்தானுக்கு (உலகக் கிண்ணத்தில் ஒருநாள்போட்டி) அதிர்ச்சி வைத்தியம் கொடுத்த அணி என்று பல அணிகள் களமிறங்கியுள்ளன.

### ஐ.பி.எல்லும் உலகக்கிண்ணமும்

இரண்டாவது ஐ.பி.எல் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற கிண்ணப்போட்டிகள் உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு ஒரு முன்னோடிப் பரீட்சையைப் போன்று அமைந்தது எனலாம். ஓய்வுபெற்ற வீரர்களான ஹைடன், கில்கிறிஸ்ட் போன்றோர் சாதித்தபோதும் தற்போது பங்கேற்கும் முன்னணி வீரர்கள் தொடர்ந்தும் தம் திறமைகளை வெளிக்காட்டுவார்கள் என்றே நம்பலாம்.

ஏனைய வீரர்களும் ஐ.பி.எல் போட்டிகளில் பெற்ற அனுபவத்தின் மூலம் சாதிக்கத் தவறமாட்டார்கள் என்று கூறமுடியும்.

### ஆண்களா? பெண்களா?

நேற்று முன்தினம் ஐ.சி.சியின் 'ருவென்ரி - 20' போட்டிகள் ஆரம்பமான அதேசமயம் ஐ.சி.சி மகளிர் கிரிக்கெட் அணிக்கும் முக்கியத்துவம் கொடுத்து ஒரு விஷப் பரீட்சையில் இறங்கியுள்ளது.

என்னவெனில் ஐ.சி.சியின் 8 நாடுகள் பங்குகொள்ளும் (அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இந்தியா, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் பாகிஸ்தான், நியூசிலாந்து, இங்கிலாந்து) பெண்களுக்கான 'ருவென்ரி - 20' உலகக்கிண்ணப் போட்டிகளை முதல் தடவையாக எதிர்வரும் 11ஆம் திகதி முதல் நடத்தவுள்ளதுடன் இங்கிலாந்திலேயே இத்தொடரையும் நடத்துகிறது. ஆண்களுக்கான இறுதிப்போட்டி நடைபெறும் 21ஆம் திகதியே பெண்களுக்கான இறுதிப் போட்டியையும் நடத்த ஐ.சி.சி அதிரடியான முடிவை எடுத்துள்ளது.

ஆண்கள், பெண்கள் என ஐ.சி.சியின் இருபெரும் கிரிக்கெட் விழாக்களும் ஒரே சமயத்தில் நடைபெறும்போது போட்டிகளை நேரிலும் தொலைக்காட்சிகளிலும் பார்க்கும் ரசிகர்களும் இருபிரிவாக பிளவடையப் போகிறார்கள் என்றே தோன்றுகிறது. நேரில் பார்வையிடும் பார்வையாளர்கள் குணமடையலாம் என்றே தோன்றுவதுடன் குடும்பத்துடன் கிரிக்கெட் திருவிழாவைக் கண்டு களிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கையும் குறைவடையலாம். ★

**தமிழரசன்**

# வீதிப் பராமரிப்பில் முன்னோர் காட்டிய அக்கறையும் ஒத்துழைப்பும்

யூன் 5 சுற்றாடல் தினமாக சர்வதேச ரீதியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பூமி மாசடைந்து வருவதால் வெப்பமடைந்து வருகிறது. பூமி மாசடைவதைக் குறைக்கும் நோக்குடனேயே சுற்றாடல் தினம் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. யாழ்ப்பாணத்திலும் ஆண்டுதோறும் சுற்றாடல் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணத்தவர்கள் தமது வீடு, வளவு என்பன சுத்தமாக இருக்க வேண்டும் என்பதற்காக தமது வீட்டுக் குப்பைகளைக் கொண்டு வந்து வீதியில் கொட்டுகிறார்கள்.

நமது மூதாதையர்கள் எவ்வாறு வீதிகளைப் பராமரித்தார்கள் என்பதை ஓர் ஆங்கிலேயரின் குறிப்பிலிருந்து அப்படியே எடுத்துத்தர விரும்புகிறேன்.

**அந்நாள் குடியேற்ற நாடுகளின் செயலரின் குறிப்பிலுள்ள பாராட்டுச் செய்தி**

பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் குடியேற்ற நாடுகளின் செயலாளராக இருந்தவர் சேர்.ஜேம்ஸ் எமர்சன் ரெனன்ற். இவர் தனது யாழ்ப்பாண விஜயம் பற்றி எழுதி வைத்த குறிப்பை அப்படியே தருகிறேன். உண்மையிலேயே இலங்கையில் யாழ்ப்பாணத்தவர்கள் மட்டும்தான் வீதிகளின் பெறுமதியை உணர்ந்து செயற்படுகிறார்கள். வீதியைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்ற சிந்தனையுடையவர்களாக இருக்கிறார்கள். அத்துடன் வீதி அமைப்பதற்கும் சகலவிதமான உதவிகளையும், பங்களிப்பையும் வழங்குகின்றனர். (Jaffna is in fact the only part of Ceylon in which the native population seem clearly to appreciate the value of roads, and are anxious to afford every facility, and contribute every assistance for their construction).

**இன்றும் நினைவில் கொள்ள.... அன்றைய ஞாபகம் இங்கே....!**

(Ceylon an account of the Island - Sir James Emerson Tennent. பக் 532)

ரெனன்ற் இப்போது யாழ்ப்பாணத்தில் வந்து இறங்கினால் மயங்கி விழுந்து விடுவாரா? அல்லது இது யாழ்ப்பாணம் அல்ல . வேறு ஏதோ பிரதேசத்தில் என்னைக் கொண்டு வந்து விட்டுவிட்டீர்கள் என்று கூறுவாரா?.

**தாண்டவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல ஆண்டுகள் கழிந்தும் போராட்டத்துக்கான காரணங்கள் இன்னமும் விடைகாணப்படாத நிலையிலேயே.....!

## தோழர் கந்தசாமி செய்த தியாகத்தின் நிலையும் அதுவே

1947ஆம் ஆண்டு ஜூன் மாதம் இடம்பெற்ற பொது வேலை நிறுத்தத்தின் போது, ஜூன் 5ஆம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் தோழர் கந்தசாமி பலியானார். தொழிற் சங்கப் போராட்ட வரலாற்றில் முதற்களப் பலியானவர் இவர்.

இவரை நினைவு கூரும் முகமாக இன்று ஞாயிற்றுக்கிழமை வட்டுக் கோட்டையில் ஞாபகார்த்த கூட்டம் இடம்பெறுகிறது.


வேலுப்பிள்ளை கந்தசாமி

கடந்த அறுபத்து இரண்டு ஆண்டுகளின் வரலாற்றைப் பின்நோக்கிப் பார்த்தால் பல போராட்டங்கள் நிகழ்ந்ததைக் காணலாம்.

அவற்றுள் சிங்கள மக்கள் மத்தியில் 1971 இல்மக்கள்விடுதலைமுன்னணியால் ஆரம்பிக்கப்பட்டு, பல ஆண்டுகள் தொடர்ந்து, பின்தோல்வியில் முடிந்த ஆயுதப் போராட்டமும் தமிழ் இளைஞர்களால் உரிமைக்கான போராட்டமாகத் தோற்றுவிக்கப்பட்டு அண்மையில் ஒடுக்கப்பட்டுள்ள ஆயுதப்போராட்டமும் அடங்கும்.

பல ஆயிரம் தமிழ், சிங்கள இளைஞர்களின் உயிர்களைக் காவுகொண்டதுடன் பல ஆயிரக்கணக்கான சிங்கள, தமிழ் அப்பாவி மக்களுக்கு சொல்லொணாத் துன்பங்களையும் அவை ஏற்படுத்தியுள்ளன.

இருபகுதியினரும் என்ன என்ன காரணங்களுக்காக போராட்டங்களைத் தொடங்கினார்களோ அக்காரணங்களுக்கு இன்னும் விடை காணப்படவேண்டியே உள்ளது.

இவை புலப்படுத்தும் ஒரு விடயம், 1947 இல் நடந்த பொது வேலை நிறுத்தத்துக்கான காரணங்கள் இன்றும் தொடர்வது போல் பிற்காலத்தில் தலைதூக்கிய போராட்டங்களுக்கான காரணங்களும் இன்றும் தொடர்கின்றன.

இவற்றுக்கான மூலகாரணங்கள்நாடு சுதந்திரம் அடைவதற்கு முற்பட்ட காலத் திலிருந்து தோன்றியமை கவனிக்கப்படவேண்டும்.

சமச்சீரற்ற கல்வி வளர்ச்சிக்கான கொள்கை,
சமச்சீரற்ற பொருளாதார வளர்ச்சி,
ஆட்சியாளரின் பிரித்தாளும் நடை முறை,

என்ற இந்த மூலகாரணங்களை சரியாக மதிப்பீடு செய்து இவற்றுக்குத் தீர்வை வழங்கக் கூடிய சமத்துவமான சமூக, பொருளாதார, அரசியல் கலாசார உரிமையை உத்தரவாதப்படுத்தும் தத்துவத்தை உள்வாங்கிய எமதுநாட்டு சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்களைச் சேர்ந்த தலைவர்கள் அதற்காக முன்வந்து செயல்பட்டனர்.

அவர்கள் உழைக்கும் தொழிலாளர்களை ஸ்தாபன ரீதியாக ஒன்றிணைத்தனர்; விவசாயிகளை ஒன்று திரட்டினர்; ஜனநாயக ரீதியில் அவர்களின் பொருளாதாரத் தேவைகளுக்கான போராட்டங்களை நடத்தினர்; அதன் மூலம் தொழிலாளர்களின் வாழ்வை வளம் படுத்தினர்; அவர்களின் சமூக கௌரவத்தையும் நிலைநிறுத்தினர். அவர்கள் இந்த நாட்டின் அபிவிருத்தியின் பங்காளர்கள், என்னும் நிலையை அங்கீகரிக்கச் செய்தனர். இந்த நாட்டின் பிரச்சினைகளுக்கு விஞ்ஞான ரீதியாகப் பார்க்கும் அளவுக்கு அவர்களின் சமூக, அறிவை மேம்படுத்தினர். அத்துடன் இந்த நாட்டிலிருந்த தொழில்சார் தொழிற்சங்கங்களை ஒன்றிணைத்தனர்.

அத்தோடு, எல்லாச் சங்கங்களையும் இணைத்து சம்மேளனங்கள் அமைத்தனர். இவற்றுள்,

துறைமுக தொழிலாளர் சங்கங்கள்,
தேயிலை றப்பர் உற்பத்தி ஊழியர் தொழிற்சங்கங்கள்,
சகல அரசாங்க தொழிற்சங்கங்களின் சம்மேளனம்,
போக்குவரத்துச் சங்கங்களின் சம்மேளனம்,
மற்றும் தோட்டத்துறை தொழிலாளர்களின் சங்கங்கள் என்பன முதன்மை பெற்றன.

இவ்விதம் வளர்ச்சி பெற்ற தொழிலாளர்களின் அமைப்புக்கள் தங்களின் பொருளாதார மேம்பாட்டுக்கான கோரிக்கைகளுடன், மட்டும் மட்டுப்படுத்தாமல் தொழிலாளர்களின் ஏனைய உரிமைகளுக்காகவும் பூரணமாகப் போராடுமளவுக்கு முதிர்ச்சியடைந்தன.

இத்தகைய தளநிலையில் தான் நாட்டின் பூரண சுதந்திரத்தையும் தொழிலாளரின் உரிமைகளையும் மையப்படுத்தி தலைசிறந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் தலைவர்களின் வழிகாட்டலில் 1947 இல் மாபெரும் தொழிலாளர் போராட்டம் வெடித்தது. அது மிக வெற்றிகரமாக முன்னோக்கிச் சென்றது.

இதைக்கண்டு அன்றைய ஆட்சியாளர் மட்டுமல்லாது தேசிய, விதேசிய முதலாளிமாரும் கதிகலங்கினர். வேலை நிறுத்தத்தைச் சிதைக்கப் பல சதித் திட்டங்கள் தீட்டப்பட்டன. அவை பலனளிக்கவில்லை.

அவ்வாண்டு ஜூன் 5ஆம் திகதி மாபெரும் ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடத்த ஏற்பாடாகியிருந்தது. ஊர்வலம் கொலன்னாவையை நோக்கிச் செல்கின்றது. அரச படைகள், ஆட்சியாளர்களின் ஏவலில் ஊர்வலத்தை முறியடிக்கத் தயார் நிலையில் வைக்கப்பட்டன.

ஊர்வலம் முன்னேறுவதைக் கண்ட பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதில் ஒரு இளம் தொழிலாளி படுகாயமடைந்து சிறிது நேரத்தில் உயிரிழந்தார். அவர் ஒரு தமிழ்த் தொழிலாளி. அவர்தான் வேலுப்பிள்ளை கந்தசாமி.

அவரின் தியாகம் இந்த நாட்டிலிருந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் தொழிலாளர்களால் சிலைவைத்துக் கௌரவிக்கப்படும் அளவுக்கு உயர்த்திப் போற்றப்பட்டது.

ஆண்டு தோறும் ஜூன் 5ஆம் திகதி அரசகாரியாலயங்களில் சகல ஊழியர்களும் எழுந்துநின்று மௌன அஞ்சலி செலுத்தும் வழக்கம் பல ஆண்டுகள் தொடர்ந்தது. அவர் அங்கம் வகித்த அரச லிகிதர் சங்கம், அவரின் தாயார் இறக்கும்வரை அப்பெண்ணுக்கு ஆண்டுதோறும் நிதியுதவி வழங்கிக் கௌரவித்தமை பலர் அறிந்த விடயமாகும்.

இந்தப் போராட்டத்தில் தொழிலாளர் வெளிப்படுத்திய எழுச்சி மற்றும் ஐக்கியம் காரணமாக அன்றைய ஆட்சியாளரும் தேசிய, விதேசிய முதலாளிமாரும் தங்களுக்கு எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய ஆபத்தைத் தவிர்க்குமுகமாக தொழிலாளரின் போராடும் சக்தியை சிதைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கந்தசாமி சுடப்பட்டு ஒன்றரை மணித்தியாலங்களுள் டீ. எஸ்.சேனநாயக்காவின் தலைமையிலான அரசு பொலிஸ் திருத்தச்சட்டம், பொதுப்பந்தோபஸ்துச்சட்டம் என இரு புதிய சட்டங்களை இயற்றியது.

புதிய சட்டங்களையும் பயன்படுத்தி தேசிய, விதேசிய அடக்குமுறையாளர் அன்றைய போராட்டத்தை நசுக்கினார்கள். பல தொழிலாளர்கள் வேலை இழந்தனர். பலர் தேசத்துரோகக் குற்றச்சாட்டிற்கு முகம் கொடுத்தனர். மேலும் சிலர் பல்வேறு வழிகளிலும் பழிவாங்கப்பட்டனர்.

இவைமட்டுமல்லாது, பிற்காலத்தில் தொழிலாளர் வர்க்கத்தின் முதுகெலும்பை முறிக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இந்திய வம்சாவளியினரின் வாக்குரிமையைப்பறித்து தொழிலாளரின் ஒரு பகுதியினரை வலுவிழக்கச்செய்தமை,

இனவாத நாடாளுமன்றச் செயல்பாட்டை முன்னெடுத்தமை,

சமச்சீரற்ற மொழிக்கொள்கையைப் பிரகடனப்படுத்தி அதனைச் செயல்படுத்தி தொழிலாளர் ஐக்கியத்தைப் பலவீனப்படுத்தியமை,

சிறு தொகையான ஊழியர்களைக் கொண்டு தொழிற்சங்கம் அமைக்கும் வகையில் தொழிற்சங்கச் சட்டத்தை மாற்றியமைத்து தொழிலாளர் அணியை மட்டுப்படுத்தியமை,

மொழிவழித் தொழிற்சங்கங்களைத் தோற்றுவித்தமை, அதன் மூலம் தொழிலாளர்களை இனரீதியான பகை அணியாக்கியமை, என்பன அவற்றுள் சிலவாகும்.

தொழிலாள வர்க்கத்தின் தலைவர்களாகவோ அல்லது நேச சக்தியாகவோ செயல்பட்டவர்கள் தொழிலாளர் நலனைப்புறம் தள்ளி கட்சி,குழு நலனை முதன்மைப்படுத்தி செயல்பட்டதால் தொழிலாளர் அணி சக்தி இழந்தது.

-மேற்குறிப்பிட்ட மாற்றங்களுக்குத்துணை போனவர்கள் 1947 ஆம் ஆண்டு போராட்டத்தில் முன்வைக்கப்பட்ட தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு முரணாகச் செயல்பட்டவர்கள் என்பது அனுபவம் வழங்கிய பதில். தெரிந்தோ, தெரியாமலோ இந்தச் சதிக்குத் துணைபோன தொழிற்சங்கங்களும் தொழிலாளரும் நவகுடியேற்றவாதிகளின் சூழ்ச்சியில் சிக்கி இன்றுவரை மீள முடியாமல், மீளா அடிமைகளாகத் தவிக்கின்றனர்.

இதற்கான விமோசனம் தாய்மொழிமூலம்கல்வி கற்ற தமிழ், சிங்கள, முஸ்லிம் தொழிலாளர்கள் மத்தியில் தான் உள்ளது.

இதனை உணர்ந்து செயல்படுதல் இன்றைய தமிழ், சிங்கள, முஸ்லிம் இளஞ்சந்ததியினரினதும் மூவின தொழிலாளர்களினதும் வரலாற்றுக்கடமையாகும்.

-சி.இராமச்சந்திரா


# நெஸ்லே, போஷாக்கு ஆலோசகர்களைக் கோருகிறது

நாம் உலகின் மிகப்பெரிய உணவு மற்றும் குடிபான கம்பனி. நீங்கள் விடயங்கள் இடம் பெறும் வரை காத்திருப்பவரா? அல்லது அதனை இடம்பெறச்செய்பவரா? நீங்கள் திடமான தீர்மானங்களை மேற்கொள்ளுவதுடன் உங்களது ஒவ்வொரு பணிக்கும் உங்கள் சிந்தனையில் ஒரு கருத்துண்டு துரிதமாக வளர்ந்து செல்லும் சந்தை நிலைமைகளின் வெற்றி பெறுவதற்கான வழிகள் வளங்களை நீங்களாகவே சிந்திக்கலாம். அவ்வாறாயின் நாங்கள் ஒன்றிணைந்து உச்சகட்ட வளர்ச்சியை காண-முடியும்.

போஷாக்கு ஆலோசகர்

மேற்கூறிய வெற்றிடங்கள் நாட்டின் வட பகுதிகளில் காணப்படுகின்றன. மருத்துவத் தொழிற்துறையில் 2-3 வருடகால அனுபவத்துக்கு முன்னுரிமை வழங்கப் படுவதுடன் தேவை, பொறுப்புணர்வு குறித்து தீர்மானமான கருத்துடையவராக இருக்க வேண்டும். உமது ஆளுமை, மரியாதை என்பன தன்னம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும். விஞ்ஞானபூர்வ அறிவைபெற உங்களிடம் உள்ளார்ந்த ஆற்றல் காணப்பட வேண்டும் அத்துடன் அதனை வெற்றிகரமாக பிறருடன் பகிர்ந்து கொள்ள கூடியவராகவும் இருக்கவேண்டும். உமது நெகிழ்ச்சிதன்மை, வளம் என்பன தடைகளை வெற்றி கொள்ள இட்டுச்செல்வதுடன் பிறரிடமிருந்து உம்மை வேறுபடுத்தக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். அவ்வாறாயின் மருத்துவ சமூகத்திற்கான நெஸ்லே குழந்தை போஷாக்கு உற்பத்திகள் பற்றிய நம்பகமான பெறுமதியான ஒரு தகவல் வட்டாரமாக நீங்கள் கருதப்படுவீர்கள்.

வழிகாட்டல்கள் சட்டதிட்டங்களுக்கமைய உற்பத்திகள் பற்றிய சரியான தகவல்கள் வினைதிறனாகவும், தெளிவாகவும் பரிமாறுவதுடன் மேலும் கருத்தரங்குகள், கூட்டத் தொடர்புகள், விஞ்ஞானபூர்வ நடவடிக்கைகள் என்பன உள்ளூர் மருத்துவ சங்கங்களுடன் வினையமாக ஒழுங்குபடுத்தவும் வேண்டும்.

மேற்கூறிய விடயங்களுக்கு நீங்கள் தகுதி உள்ளவராயின் உங்களது தெளிவான தொடர்பாடல் தகவல்களடங்கிய விண்ணப்பத்தினை எமக்கு ஜுன் 10ம் திகதி அல்லது அதற்கு முன்பு கிடைக்ககூடியவாறு nestle.careers@lk.nestle.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.

இவ்விண்ணப்பங்கள் மேற்குறிப்புடப்பட்ட தலைப்பைக் கொண்டதாக அமைவதுடன் 2009, ஜுன் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கப் பெறுதல் அவசியம். தேறிய விண்ணப்பதாரர்கள் 2009, ஜுன் மாதம் 16ம் திகதியன்று, நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

உபஅதிபர், மனித வளங்கள்
நெஸ்லே லங்கா பீ.எல்.சி.
440, டீ. பீ. ஜயா மாவத்தை,
கொழும்பு 10.

Nestle careers that brand you for life


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பக்கடை நடக்கிறது

**மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 101**

ஹாய்..... ஹாய்.... கோழியளும் விடாதுகளாம். இந்த அப்பத்தைச் சுட்டு ஒப்பேற்றிப்போட்டு ஒருக்கால் கோயிலடிக்கும் போட்டு வரலாமெண்டால்.....

வாணை செல்லாச்சி, என்ன அப்பம் வாங்கவோ? கொஞ்சம் இரணை, சுட்டுத் தாறன். இண்டைக்கு எழும்பவும் பிந்திப் போச்சு; கடைசி வெள்ளிக் கிழமையாகவும் கிடக்குது; ஒருக்கால் சன்னதி கோயிலுக்கும் போட்டு வரவேணும், பிறகு..... செல்லாச்சி எப்பிடி உங்கட பாடுகள்.

ஓ நீ சொன்னது மெய்தான். அப்பம் சுட்டு விக்கிறதிலை இப்ப ஓண்டும் அவ்வளவு ஆதாயமில்லை. எனக்கென்ன வீடுகட்ட, கார் வாங்கவே காசு? அண்டாடம் சீவியம் ஓடினால் காணும், அதோடை அப்பம் சுட்டுவிக்கிறது எனக்குப் பொழுது போக்காகவும் இருக்கும். மாவும் விலையேறியிட்டது. தேங்காயும் நாப்பத்தைஞ்சு சதம் விக்கிறாங்கள். இந்த அறா விலை குடுத்து சமான் சக்கட்டு வாங்கி எட்டுச் சதத்துக்கு 'பாலப்பம்' விக்கிறது கெட்டித்தனம் தான். உங்கை கடை வழிய வெள்ளையப்பமே பத்துச் சதத்துக்கு விக்கிறார்கள். சனம் கடையிலயெண்டால் கனகாசு குடுத்து வாங்குங்கள், எங்களிட்டையெண்டால் நொட்டை சொட்டை கதைக்குங்களே ஒழிய காசு கூட ஒழுங்காத் தராதுகள்.

இஞ்சைபார் செல்லாச்சி. அப்ப ஒருக்கால் நாரிப்பிடிப்பெண்டு ஆஸ்பத்திரியிலை போய்ப் படுத்தனான்தானே. அப்ப மகன் வந்து - ''அப்பச் சட்டியோடை இருந்து தான் நாரிப்பிடிப்பு வந்தது. இனிமேல் அப்பம் சுட வேண்டாம். நான் மாசாமாசம் அம்பது ரூபா அனுப்புவன்'' எண்டு சொன்னவன்.

உங்கை இப்ப கன இளந்தாரிப் பெடியளுக்கும் நாரிப்பிடிப்பு வருகுது. அவங்களெல்லாம் அப்பச்சட்டியோட இருந்தே நாரிப்பிடிப்பு வந்தது. அது ஒரு வயதுக்கும் வாதக்குணத்துக்கும் நாரிப்பிடிப்பு வாறதெண்டு யோசிச்சுப்போட்டு, ஆசுப்பத்திரியாலை வந்த உடனே அப்பச்சட்டியைத் தூக்கினன். அவன் மகனும் சொன்ன மாதிரி இரண்டு, மூண்டு மாதம் அம்பது ரூபா அனுப்பினான். அம்பது ரூபா வர வர நாப்பது, முப்பது ரூபாவாகக் குறைந்து இப்ப பத்து ரூபாவாக வந்து கொண்டிருக்குது. அதுக்காக நான் அவனைக் குறை சொல்லயில்லை, அவனுக்கும் என்ன கஸ்டமோ, துன்பமோ?..... பிள்ளை குட்டியள்..... இப்படித்தான் இருந்தாப்போலை ஒரு உசாரிலை அல்லது பிறத்தியாருக்கு முன்னாலை ஐயாவுக்கு நூறு ரூபா அனுப்பு வன் எண்டு சொல்லுங்கள். ஆனால் அப்படி அனுப்புறதெண்டால் என்ன இலேசான அலுவலே? அல்லது அது வருமெண்டு பார்த்துக் கொண்டிருக்கிறது தான் தாய், தகப்பனுக்கு வடிவோ?

எனக்கென்ன - அப்பக்கடை பிழை இல்லாமல் நடக்குது. நான் ஏன் அவை இவைக்குப் பயப்பிட வேணும்? எனக்கொரு புருஷன் முருகாத்தை, அவரும் முந்தி மேசன்மாரோடை போய் உழைச்சுக் கிழைச்சு திண்டுகொண்டிருந்தவர். பேந்து இவன் பொடியன் மாசம் மாசம் கொஞ்சக் காசு அனுப்பத் தொடங்கின உடனை உழைப்பை விட்டிட்டார். அவன் அனுப்பிற காசுக்கு இரண்டு, மூண்டு நாளைக்கு வடிவாகச் சமைச்சுத் திண்டிட்டு பிறகு அங்காலை, இஞ்சாலை ஆலாய்ப் பறக்கிறது. முருகாத்தை யின்ரை சீவியம் இப்பிடி ஓடுது.

இல்லைச் செல்லாச்சி, அப்பக்கடை நடத்திற படியால் அவை இவையின்ரை கையைப் பாராமல் என்ர சீவியம் ஓடுது. மனிசராகப் பிறந்ததுகள் நோய், நொடி வந்து பாயிலை படுக்கும் மட்டும் ஏதாவது தொழில் செய்து கொண்டிருக்கவேணும். அப்பத்தான் மற்றவைக்குப் பயப்பிடாமல் எங்கட விருப்பப்படி வாழலாம்.

பாத்தியே பாத்தியே, செல்லாச்சி, தொழில் செய்ய வேண்டுமெண்டதுக்காக- ''எல்லாரும் அப்பம் சுட்டால் ஆர் வாங்கிறது?''எண்டு கேட்கிறாய். நான் அப்பம் சுட்டாப்போலை எல்லோரும் அப்பம் சுட வேணுமோ? ஒவ்வொருதரும் ஒவ்வொண்டைச் செய்யிறதுதானே, சீதவன் சந்தைக்குப் போகுது. கொடிகாமச் சந்தையிலையும், சாவகச்சேரி சந்தையிலையும் விக்கிறதை வாங்கிக் கொண்டு வந்து உடுப்பிட்டிச் சந்தையிலை விக்கிறதிலைதானே அதுகள் ஏழெட்டுப்பேர் சீவிக்குதுகள். பொன்னர் கீரைக்கட்டுத் தூக்கித்தானே மருமகனுக்கு லொறி வாங்கினதும்- மகளுக்கு நகை நட்டுச் செய்ததும். இராசம்மா கிழங்கு அவிச்சு ஒடியல் காயப்போட்டுத் தானே மாளிகை மாதிரி ஒரு வீடு கட்டினவள்.

எதுக்கும் ஒரு முயற்சி வேணும். அல்லது ஒண்டும் செய்யமுடியாது. ''ஒரு காரியத்தைச் செய்வன், செய்வன்'' எண்டு முருகாத்தை மாதிரிச் சொல்லிக் கொண்டு இருக்கக்கூடாது. செய்து காட்டவேணும். அதுக்கு நடக்கக் கூடிய காரியமாக ஓரளவு யோசிச்சுச் செய்ய வேண்டும். லாபமோ, நட்டமோ கொஞ்ச நாளைக்குச் செய்ய வேண்டும். எடுத்தவுடனே என்னெண்டு லாப நட்டம் சொல்லுறது. இஞ்சை நானும் அப்பக்கடை தொடங்கின உடனை இரண்டு, மூன்று ரூபாய் வியாபாரம் தானே. இப்பவெல்லோ ஏழெட்டு ரூபாவுக்கு பிழையில்லாமல் நடக்குது. ''ஒரு முழுத்துண்டு காணியிலை என்னத்தை வைச்சு பயிர் செய்யிற'' தெண்டு முருகாத்தை கேட்கிறார். அவன் வேலுப்பிள்ளைக்கும் எங்களளவு காணிதானே. அந்தக் காணியிலை வடிவான கொட்டிலும் கட்டி, கிணறும் வெட்டி, நாலைஞ்சு வாழைக்குட்டியும் வைச்சான். 'நாலைஞ்சு' வாழைக் குட்டியாலை என்ன வரப் போகுது? எண்டு கேட்டதுக்கு...

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி....)



அறுபதுகளின் பிற்பகுதியில் இலங்கைத் தமிழ்ப் புனைகதைத் துறையில் பிரவேசித்த உடுவை.எஸ்.தில்லை நடராசா, வடமராட்சியைச் சேர்ந்த உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

சிறுவயது முதல் இலக்கியத்துறையில் ஈடுபாடு கொண்டிருந்த இவர் மாணவப் பருவத்தில் பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டி என்பவற்றில் பங்குபற்றி பரிசில்கள் பெற்றுள்ளதோடு தமது இலக்கிய ஆர்வம் காரணமாக எஸ்.ரீ.ராஜன் என்ற புனைபெயரில் 'மாணவன்' என்ற பெயரிலான சஞ்சிகைக்கு ஆசிரியராக இருந்து வெளியிட்டும் வந்துள்ளார்.

ஈழத்தில் வெளியான பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளில் இவரது பல ஆக்கங்கள் பிரசுரமாகியுள்ளன.

12 சிறுகதைகளை உள்ளடக்கிய இவரது சிறுகதைத் தொகுதி 'நிர்வாணம்' 991 இல் வெளியிடப்பட்டது. இது சிங்களமொழியிலும் 'காதல் யாத்திரைகள்' மற்றும் 'தமிழ்ச் சிறுகதைகள்' என்ற பெயர்களில் வெளிவந்துள்ளன.

1967 ஆம் ஆண்டில் அரச எழுதுவினைஞர் சேவையில் இணைந்து பணியாற்றி வந்த இவர் 1978 ஆம் ஆண்டில் இலங்கை நிர்வாக சேவையில் இணைந்து பல்வேறு அரச திணைக்களங்களில் வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் அரச அதிபர் பதவி உட்படப் பல உயர் பதவிகளை வகித்துள்ளார்.

தற்போது கல்வி அமைச்சின் மேலதிக செயலாளராகப் பதவி வகிக்கும் இவரது 'அப்பக்கடை நடக்கிறது' சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.

**உதயனில் ஞாயிறுதோறும் வெளிவரும் பிரபல மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதைகள் வரிசையில் இது 101 ஆவது இடத்தை வகிக்கிறது**

# திரைப்பாடல்களில் விரவி நிற்கும் மரபிலக்கியச் செழுமை

வானொலியைத் திறந்தால் அங்கே சினிமாப் பாடல்களின் ஆக்கிரமிப்பே எப்பொழுதும் நீக்கமற நிறைந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருக்கும். பலருக்கு வெறும் பொழுது போக்காகத் திரைப்படப் பாடல்கள் இருந்த போதும், சிலருக்குச் சிலவித சிந்தனைகளைத் தூண்டுந் தூண்டு கோலாகவும், சினிமாப் பாடல்கள் அமைகின்றன.

பழந்தமிழ் இலக்கியச் சிந்தனைகளை எளிய வடிவில் இசையுருவிற்கேற்பப் பாடலாக்கிச் சினிமாவில் ஒலிக்கச் செய்தவர்களில் முதன்மை வாய்ந்தவர் மறைந்த கவியரசர் கண்ணதாசன் என்பது மிகைக் கூற்றல்ல.

கண்ணதாசன் மட்டுமன்றி ஏனைய பல பாடலாசிரியர்களும் இலக்கியச் சிந்தனைகளை, சினிமாப் பாடல்களில் புகுத்தியிருப்பது பலருங் கண்டு, அனுபவிக்கக் கூடிய இரசனை மிகுந்த விடயமாகும்.

**கே.சி.எஸ். அருணாசலமும் சயங்கொண்டாரும்**

கே.சி.எஸ்.அருணாசலம் என்ற கவிஞரின் ஒரு பாடல் திரைப்படத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றது. "சின்னச் சின்ன மூக் குத்தியாம்'' என்று தொடங்குகிறது அப்பாடல்.

''அள்ளிச் சொருகிய கொண்டையிலே - எந்தன்
ஆவி சிறையுண் டிருக்குதடி''

என்று அந்தப் பாடலிலே ஒரு கற்பனை வருகிறது. காதலியின் அள்ளி முடித்த கொண்டைக்குள்ளே தனது ஆவி சிறைப்பட்டிருப்பதாகவும், அதனால்தான் அவளது கொண்டையைப் போலவே எப்போதும் அவள் பின்னாலேயே அலைவதாகவும், காதலன் பாடுவதாகப் பாடுகிறார் கவிஞர். இதே கற்பனையை, கலிங்கத்துப் பரணியிலே வெகு அழகாகச் சொல்லியிருக்கின்றார் சயங்கொண்டார்.

முருகிற் சிவந்த கழுநீரும்
முதிரா இளைஞர் ஆருயிரும்
திருகிச் செருகும் குழன்மடவீர்
செம்பொற் கபாடந் திறமினோ

வாசனை மிகுந்த செங்கழு நீர்ப் பூவோடு, முதிராத வாலைப் பருவத்து இளைஞர்களின் உயிரையும் சேர்த்துக் கூந்தலிலே வைத்து முடித்துக்கொண்டு செல்கின்றனராம் பெண்கள்.

**ஆலங்குடி சோமுவும், நளவெண்பாவும்**

''வெண்பாவிற் புகழேந்தி'' எனப் புலவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டவர் புகழேந்திப் புலவர். நளவெண்பாவிலே மாலைப் பொழுதை வர்ணித்து இவர் பாடிய ஒரு பாடல் மல்லிகையே வெண்சங்காய் வண்டுத வான்கருப்பு என ஆரம்பிக்கிறது.

கவிஞர் ஆலங்குடி சோமு இந்தப் பாட லைத் தழுவி ஒரு பாடலை எழுதியிருந்தார்.

மல்லிகை மொட் டுச்
சங்கெடுத்துச் சங்கெடுத்து - வண்டு
மங்கல இசை
பாடுதம்மா பாடுதம்மா

அங்கே ''மல்லிகையே வெண்சங்காய்'' என வருவது இங்கே ''மல்லிகை மொட்டுச் சங்கெடுத்து'' என வருகிறது. மல்லிகை மொட்டு, மல்லிகை மலரைவிடச் சங்கோடு ஒப்பிட்டு உவமிக்கக் கூடியதாக இருக்கும் நயம் ரசிக்கத்தக்கதுதானே.

**கண்ணதாசனும், நளவெண்பாவும்**

கவியரசர் கண்ணதாசன், நளவெண்பாவிலே உள்ள ஒரு பாடலை வெகு அழகாக எளிய வடிவத்தில் எழுதியிருக்கிறார். "நான் மலரோடு தனியாக ஏனிங்கு நின்றேன்'' எனத் தொடங்குகிறது அப் பாடல். அப் பாடலில் வரும் ஒரு கற்பனை இது.

பொன் வண்டொன்று மலரென்று
முகத்தோடு மோத - நான்
வளை கொண்ட கையாலே
மெதுவாக மூட

வண்டு தலைவியின் முகத்தை மலர் என்று நினைத்து மொய்க்கத் தொடங்கிவிட்டது. அவள் கைகளால் முகத்தை மூடி வண்டைக் கலைக்கிறாள். இது நளவெண்பாவிலே புகழேந்திப் புலவரின் கற்பனையின் பாதி வடிவமே. சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் பாடிய

செங்குவளை பறித்தணிவார்;
கருங்குழல்மேல் சிறைவண்டை
அங்கைமலர் களைக்கொடுகைத்
தயல் வண்டும் வரவழைப்பார் என்ற பாடலில்

செங்குவளை மலரைத் தம் கூந்தலிலே அணிந்தபடி வயலில் களை பிடுங்கும் பெண்களின் கூந்தலில் மொய்க்கும் வண்டுகளை அப்பெண்களின் கைகள் கலைக்கவில்லை, அழைக்கின்றன எனச் சேக்கிழார் பெருமான் பாடிய கற்பனையே புகழேந்திக்கு உந்தலாக இருந்திருக்கலாம் போல் தோற்றுகிறது.

இப்பாடல்களின் அரைவாசிக் கற்பனையை வைத்து கவியரசர் எழுதிய பாடல்தான் "பொன் வண்டொன்று மலரென்று முகத்தோடு மோத'' என்ற பாடலாகும்.

**கவிச்சக்கரவர்த்தி கம்பரும் கவியரசு கண்ணதாசனும்**

இராமயணப் பாடல்களில் சில, கவியரசு கண்ணதாசனின் இத்தகைய முயற்சியில் சிக்கி இருக்கின்றன. கம்பனின் கவிதைச் சிறப்பால் ஏற்பட்ட தாக்கம். கவிஞர்கள் பலரையும் பாதித்தது உண்மைதான். கம்பனுக்குப் பின் காவியம் பாடியவர்கள் பலர். கம்பனின் கற்பனைகளைத் தாமும் பாடியிருப்பது மறுக்க முடியாத உண்மை.

கவியரசர் கண்ணதாசன் தாமே விரும்பிப் பழைய பாடல்களுக்குப் புதிய வடிவம் கொடுத்திருக்கிறார்.

"நல்லவர்க் கெல்லாம் சாட்சிகள் ரெண்டு'' என்று தொடங்கும் கண்ணதாசனின் பாடலில் வரும் அடிகள் இவை.

''நதிவெள்ளம் காய்ந்து விட்டால்
நதிசெய்த குற்றம் இல்லை
விதிசெய்த குற்றம் இன்றி
வேறு யாரம்மா!''

இதே கருத்து இதே வகையில் கம்பனின் பாடல் ஒன்றிலே வருகிறது. இராமன் காட்டுக்குச் செல்ல வேண்டும். பரதன் நாடாள வேண்டும் என்று கைகேயி வரங் கேட்க, அதனைத் தசரதன் கொடுக்கின்றான். இதனைப் பொறுத்துக் கொள்ளாத லக்சுமணன் வில்லும் கையுமாய், யுத்த சன்னத்தனாக வீதியில் நின்று ஆர்ப்பரிக்கின்றான், தந்தையான தசரதனையும், பெரிய தாயாகிய கைகேயியையும், சகோதரனான பரதனையும் கடும் வார்த்தைகளால் ஏசவும் அவன் தயங்கவில்லை.

அவனது கோபத்தை அடக்கிச் சாந்தப் படுத்துகிறான் இராமன். இந்த இடத்தில் வரும் ஒரு தத்துவார்த்தமான அழகான பாடல் இது.

நதியின் பிழையன்று
நறும்புனலின்மை; அன்றி
பதியின் பிழையன்று
பயந்து நமைப் புரந்தான்
மதியின் பிழையன்று
மகன் பிழையன்று மைந்த
விதியின் பிழை; நீ
இதற்கென்னை வெகுண்டதென்றான்

''நதியின் பிழையன்று நறும்புனலின்மை'' என்ற வரியும் "விதியின் பிழை'' என்று வரும் வரியும், கவியரசரின் பாடலில் அதே கருத்தில் வருவதைக் காணலாம்.

**கவியரசரும், தனிப்பாடல்களும்**

கவியரசர் கண்ணதாசனின் பல பாடல்கள் தனிப் பாடல்களின் தாக்கத்தினாலும் உருவாகியிருக்கின்றன.

பழந் தமிழ் இலக்கியக் காட்சிகளை மட்டும் அல்லாது, சில கவிஞர்களின் தனிப்பாடல்களையும் எடுத்துத் திரைப்படப் பாடல் ஆக்கியிருக்கிறார் கண்ணதாசன்.

**சீதக்காதியும், கர்ணனும்**

சீறாப் புராணம் பாடுவதற்கு உமறுப் புலவரைத் தூண்டி, பொருள் கொடுத்து, ஆதரித்தவர் சீதக்காதி என்னும் பெயருடைய ஒரு வள்ளல். தினம் கொடுக்கும் கையை உடைய சீதக்காதியின் கொடையைப் புகழ்ந்து பலரும் பல பாடல்கள் பாடியிருக்கின்றனர். சீதக்காதி மறைந்த பின், சீதக்காதியின் கொடைச் சிறப்பை ஒரு புலவர் இப்படிப் பாடினார்.

காய்ந்து சிவந்தது சூரியகாந்தி
கலவியிலே
தோய்ந்து சிவந்தது மின்னார் நெடுங்கண்
தொலைவில்பன்றால்
ஆய்ந்து சிவந்தது பாவாணர் நெஞ்சம்
அனுதினமும்
ஈந்து சிவந்தது மால்சீதக் காதி
இருகரமே

இதே பாடலை, கர்ணன் படத்திற்கு கர்ணனின் கொடைச்சிறப்பைக் கூறக் கண்ணதாசன் பயன்படுத்தினார். பாடல் இதே வடிவில் சில சொல் மாற்றங்களோடு உருவாகியிருந்தது.

(12ஆம் பக்கம் பார்க்க....)

# எமக்கு விடிவு உண்டாகட்டும்!

இறைவா இறைவா என உன்னை இறைஞ்சுவதாய் நாம் நடித்து
மறைகள் சொல்லும் வழி மாறி வஞ்சனையில் தினம் ஊறி
இறைவா நேரில் வந்தாலும் உனையும் ஏற்கும் மனமின்றி
நிறைவாய் நாமும் வாழ்வதாக நெஞ்சை நிமிர்த்தும் நிலை இங்கே

சுனாமியாக நீ வந்து, அநாதையாக்கி அலறவைத்து,
நிஷாவைத் தந்து நீராட்டி, நின்னை ஒருகால் உணரவைத்து,
போரினாலே நீறாக்கி, போதும் போதும் என வைத்தும்,
பாரிலுள்ளோர் பாசாங்கு, போடும் வேடம் ஓயவில்லை;

ஓடி ஓடி அகதியாகி தேடிச் செல்வம் அனுப்பிவைக்க
மாடி வீடாய் அது மாறி கூட்டு வாழ்க்கை குலைந்துபோக
நாடி ஓயும் வேளையிலே நயந்து பார்க்க மனிதரின்றி
மாயும் நிலையைப் பார்த்தபின்பும் மனிதம் வளர்க்க மறுப்பதேனோ?

அடுத்தவனைக் கெடுக்காது அவன் வளர்வைத் தடுக்காது
மிடுக்கொழித்து மேன்மையுறும் விழுமியங்கள் கடைப்பிடித்து
சாதனையில் சமதர்மம் சகலரும் நாம் வளர்த்தாலே
வேதனைகள் உடன் நீக்கி விடிவு எமக்கு உண்டாகும்.

- கவிமணி அன்னைதாசன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சேவலும் சிலந்தியும்

ஆயிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் இவான் என்ற அரக்கன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனது இரு தோள் பட்டைகளிலும் 2 பெரிய அசிங்கமான துர்நாற்றமுள்ள பாம்புகள் சீறிக்கொண்டிருக்கும். அந்தப் பாம்புகளுக்குத்



தினமும் இரண்டு இளைஞர்களின் மூளையை உணவாகக் கொடுக்க வேண்டும். எனவே அந்த அரக்கன் தினமும் இரண்டு இளைஞர்களைக் கொன்று, உண்டு வந்தான். மக்கள் இது குறித்துக் கவலையடைந்த போதும் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. பல ஆண்டுகளாக இந்த அரக்கனின் அட்டூழியம் தொடர்ந்தது. ஆனால் ஒரு நாள் இந்த அரக்கனுக்கெதிராக பரிதுன் என்ற தைரியமான இளைஞன் ஒருவன் எழுந்தான். முன்னர் அவனது தந்தை அந்த அரக்கனால் கொல்லப்பட்டிருந்தார். அதற்குப் பழி வாங்கத் துடித்தான் அந்த இளைஞன். வீரமிக்க இளைஞனான பரிதுனுக்கும் அரக்கனுக்கும் இடையிலான மோதல் பல வாரங்களாக நீடித்தது. இறுதியில் அரக்கன் இவானை மலைக்குக் கீழ் புதைக்குமாறு ஒரு தேவதை தோன்றிக் கூறியது. அவ்வாறு புதைக்கப்பட்ட பின்னரும் அந்த அரக்கன் இறக்கவில்லை. அவன் நாளுக்கு நாள் பலம் பெற்றுக் கொண்டே இருந்தான். தன்னைப் பிணைத்த சங்கிலியையும் தகர்க்க முற்பட்டான். அதை அறிந்த சேவல் ஒன்று கூவியது. உடனே தேவதை ஒரு சிலந்தியை அனுப்பியது. அது தளர்ந்த சங்கிலியைத் தனது வலையால் வலுப்படுத்தியது. இப்படி இவான் அரக்கனிடம் இருந்து அந்த நாட்டு மக்களை சேவலும் சிலந்தியும் காத்தன. அதனால்தான் அந்த நாட்டு மக்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் சிலந்தியைக் கொல்வதில்லை. சேவலையும் உணவாக உண்பது கிடையாது. அவை இரண்டையும் கடவுளாக அந் நாட்டு மக்கள் மதிக்கின்றனர்.

தி.கஸ்தூரி,
மிருசுவில் நலன்புரி நிலையம்.

## காலைப் பொழுது

காலைப் பொழுதினில் மகிழ்ச்சி
அந்த நேரம் எங்கும் குளிர்ச்சி
மாசிப் பனி சூசிப்பொய்யுது
அதில் செடிகள் நனையுது

தென்றல் வந்து வருடுது
அதில் இனிய நறுமணம் வீசுது
கொக்கரக்கோ சேவல் கூவுது
கூ கூ குயிலும் கூவுது

தங்கச் சூரியன் மெல்லத் தெரியுது
அந்த வானம் கொஞ்சம் வெளுக்குது
பூக்கள் மெல்ல விரியுது
அதில் வண்டு மது குடிக்குது

ஆம்பல் மெல்ல சுருங்குது
செந்தாமரை மொட்டவிழ்க்குது
இந்நேரம் தளிர்ப்பாய் இருக்குது
உள்ளம் லயித்துப் போகுது

ஓ. நிதூரசன்,
தரம் 8 C, யா/ இந்துக் கல்லூரி.

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? -18

1. 2009 ஆண்டு "ருவெண்ரி -20" உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் எங்கு நடைபெறுகின்றன?
2. எவெரஸ்ட் சிகரத்தை முதன்முதலில் தொட்டவர்களின் பெயர் என்ன?
3. இனிப்புப் பண்டத்தின்மூலம் உருவாக்கப்பட்டு, உலக சாதனை படைத்த உருவம் எது? அது எங்கு செய்யப்பட்டது?
4. தமிழகத்தின் துணை முதல்வராக அண்மையில் நியமிக்கப்பட்டவர் யார்?
5. கடந்த வாரம் காலமான இலங்கையின் மூத்த அமைச்சரின் பெயர் என்ன?

விடை தெரியுமா?

தெரிந்தால் 17.06.2009 இற்கு முன்னர்

சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடை தெரியுமா? -16
சரியான விடைகள்

(1) காங்கிரஸ் கட்சி.
(2) அன்று டிராஸ்.
(3) பெஸ்ட்நியூஸ் - சிறுவர் இதழ்.
(4) "வெருளி" பொம்மை
(5) சாமுவேல் பில்லே பிரீஸ்மோர்ஸ்.

### பரிசுபெறுவோர்

01. ஜெ.துவாரகா,
தரம் - 3 C,
யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.

இம்முறை ஒருவர் மட்டுமே மிகச் சரியான விடைகளை அனுப்பியுள்ளார்.

## நீர் மாசு

நீர் என்பது மக்களுக்கு மட்டுமல்ல அனைத்து உயிர்களுக்கும் மிக மிக முக்கியமானதாகும். செடி, கொடி மர வகைகளுக்கு நீர் தேவை. உலகத்தில் முக்காற் பங்கு நீரால் சூழப்பட்டிருந்தாலும் உயிர் வாழ்க்கைக்கும் பயிர்த் தேவைக்கும் நல்ல நீரை மழை வாயிலாகத் தான் பெற முடிகிறது. இதில் சிறு பகுதியை நாம் பயன்படுத்துகிறோம். இதை ஈடுசெய்ய நிலத்தடி நீரை உறிஞ்சுகிறோம். இதனால் நீர்வளம் வற்றி, கடல் நீர் அந்த இடத்தில் புகுந்து நிலத்தடி நீரை மாசுபடுத்துகின்றது. நிலத்தடி நீரை அளவுக்கதிகமாக உறிஞ்சினால் மண்ணின் இயற்கைச் சமநிலை சிதைந்து ஒரு நாளில் நில நடுக்கம் ஏற்படலாம்.

"நீரைப் பாதுகாத்து
சுகமாய் வாழ்வோம்"

ச. அருள்வாணி,
தரம் -8, யா/இணுவில் மத்திய கல்லூரி.

## நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தைப் பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.................. ..............................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்




திடீரென சிலை உயிர்பெறத் தொடங்கியதும் மணிமொழி கொஞ்சம் துணுக்குறவே செய்தாள். எனினும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு என்ன நடக்கின்றது என்பதை உற்றுநோக்கத் தொடங்கினாள். உயிர் பெற்ற சிலை இடிபோன்ற குரலில் பேசவும் தொடங்கியது. "அழகான இளவரசியே! என் கேள்விக்கு நீ சரியான பதிலைக் கூறாதுவிட்டால் இவர்களைப் போல நீயும் சிலையாக மாறிவிடவேண்டியதுதான்" என்று சிலை கூறியது. "அதைப் பற்றி எல்லாம் எனக்குக் கவலை இல்லை. உண்மையில் ஒரு அரச குல வாரிசு எதற்குமே பயம் கொள்வதில்லை. நீ உன்னுடைய கேள்வியைத் தாராளமாகக் கேட்கலாம்" என்று அவள் திடமான குரலில் கூறினாள்.

"சரி அப்புறம் உன் இஷ்டம். நான் கேள்வியைக் கூறுகிறேன். கவனமாகக் கேள்" என்று அந்தச் சிலை கூறியது. மணிமொழி சிலை சொல்லப்போகும் கேள்விக்காகத் தன்னுடைய புலன்களையெல்லாம் ஒருங்கு சேர்த்தாள். "மணிமொழியே என்னுடைய கேள்வி இதுதான். கண்கள் இல்லாமல் காணும் காட்சி எது?" என்றது சிலை. "கண்கள் இல்லாமல் காட்சியா? பார்ப்பதற்கு கண்கள் மிக முக்கியம். கண் இல்லாவிட்டால் எவ்வித காட்சியையும் காணமுடியாது. நீ ஏதோ அபத்தமாகவல்லவா கேட்கிறாய்" என்றாள் மணிமொழி. "அப்படி அல்ல. நன்றாக யோசித்து உனது பதிலை இன்னும் ஐம்பது நொடிக்குள் சொல்லிவிடு. அல்லாவிட்டால் ஐம்பத்தோராவது நொடி நீ சிலை[illegible] மாயச் சிலை.
மணிமொழி [illegible]



(தொடரும்)

## மாணவர் தூரிகை




செ.பிரியநாத், தரம் - 8A,
யா/வேலணை மத்திய கல்லூரி.



சீ.திருபரன், தரம் -8 B,
யா/தே/இ/கல்லூரி.



தி.விதுஷா, தரம் - 6,
யா/மானிப்பாய் மெ.ஆ.பாடசாலை.



இ.திவாரகா, தரம் - 9,
யா/கொழும்புத்துறை இ.ம.வி.



உ.பானுஜன், தரம் - 9 A,
யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.



ம.குஷானி, தரம் -9F,
யாழ்/சாவக்சேரி இந்துக் கல்லூரி.

## அப்பா



அணைத்தாலும் அடித்தாலும்
கரம் ஒன்று தான்- அப்பா
இணைத்தாலும் பிரித்தாலும்
இழப்பொன்று தான் -அப்பா
குணத்தாலும் மனத்தாலும்
குலம் ஒன்று தான் -அப்பா
இனித்தாலும் கசத்தாலும்
உறவொன்று தான்-அப்பா
நடந்ததை நினைத்து வருந்தாமல் - இனி
நடப்பதில் கவனம் செலுத்திவிடு - அப்பா
உடைந்த பாத்திரம் ஒட்டுமுன்னம் - நல்ல
உயரிய பாத்திரம் படைப்பது மேல் - அப்பா
இடரதைக் கண்டு அஞ்சாது - அதை
இதய பலத்துடன் எதிர் கொள்ளு - அப்பா
இறைவனைத் துதித்துக் கண்ணியமாய் - தினம்
கடமையைச் செய்து உயர்வடைவாய் -அப்பா

பி.பௌஸ்ரினா,
தரம்- 9,
யா/இளவாலை கன்னியர் மடம் ம.வி.

## இரக்கம்

இரக்கமே நீ!
உயிர்களிடத்தில் இருப்பது உண்மைதானா?
அப்படியானால் நீ!
மனிதர்களிடத்தில் ஏன் இருப்பதில்லை
அவர்களிடம் நீ !
இருந்திருந்தால் ஏன் அவர்கள் ஒருவரை
ஒருவர் அழித்துக்கொள்கிறார்கள்.
இரக்கமே நீ !
எப்போது மனிதர்களிடம் சென்று
அவர்களின் அரக்கத்தன்மையை
எப்போது நீ; மாற்றுவாய்.

அ.கஜீவன், தரம் 8E,யாழ் இந்துக்கல்லூரி.

## பழமொழிகளும் கருத்துக்களும்

01. ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்.
- ஏழையின் வலிமை
02. ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை.
- அற்பனுக்கு மதிப்பு
03. ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்.
- ஒற்றுமையின்மை
04. அச்சாணியில்லா தேர் முச்சாணும் ஓடாது.
- முக்கியத்தின் உயர்வான தன்மை.
05. ஒரு கை தட்டினால் ஓசை உண்டாகுமா?
- கூட்டு முயற்சி

வ. நிருபன், தரம்-5. சத்தியசாயி பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிதைந்து கிடக்கும் கட்டடங்களுக்கு உயிரூட்டி முதியோர் இல்லத்துக்கு ஒளியூட்ட நிதியுதவி தேவை!


மாலைநேரம். சிலுசிலு வென இதமான காற்று வீசிக் கொண்டிருக்கிறது. சருகுகள் உதிர்ந்து விழும் மரங்களின்கீழ் அமர்ந்திருந்தவாறு தமது கடந்தகால இனிய நினைவுகளை இரை மீட்டியபடி தமது நிகழ்காலத்தின் கசப்பான பக்கங்களை மறக்க முயன்று கொண்டிருக்கிறார்கள் சில முதிய வர்கள். அவர்களில் ஒருசிலர் வீதியில் போய்வரும் வாகனங்களை ஏக்கம் கலந்த உணர்வோடு பார்த்துக்கொண் டிருக்கின்றனர். வாழ்க்கையின் இறுதி விளிம்பில் நின்று கொண்டிருக்கும் முதியவர்கள் எஞ்சியுள்ள தமது வாழ்நாளில் எல்லோராலும் கைவிடப்பட்டவர்களாக மாறி தஞ்சம் புகுந்துள்ள கைதடி அரச முதியோர் இல்லத்திலேயே மேற்குறித்த காட்சியை காண முடிந்தது. ஆயினும் அவர்கள் கைவிடப்பட்டவர்கள் அல்ல கவனிப் புக்குரியவர்கள் என்பதை நிரூபிப்பது போல முதியோர் இல்லத்திலுள்ள அத்தியட்சகரும், பணியாளர்களும் தம் முடைய அன்பு கலந்த சேவையை முதி யோருக்கு எந்நேரமும் வழங்கிக் கொண் டிருப்பது மனதுக்கு ஆறுதலாக இருந்தது.

பொதுவாகவே யாழ்ப்பாணத்து மக்களிடையே காலனித்துவத்தின் செல்வாக்கு கோலோச்சத் தொடங்க முன்னர் கூட்டுக்குடும்ப வாழ்க்கையே நிலவிவந்தது. எனினும் நாக ரீகத்தின் உள்நுழை வால் கூடிவாழும் பண்பு மெல்ல மெல்ல மறையத் தொடங்கியது. இயந்திரத்தனமான வாழ்க்கை முறைக் குள் யாழ்.மக்களும் தம்மை பழக்கப்படுத் திக் கொண்டனர். இதனால் குடும்பங் கள் பலவும் சிதறுண்டு தனியலகுகளாக மாற்றமுற்றன. கூட்டுக்குடும்ப வாழ்க்கை என்பது எந்நேரமும் கலகலப் பையும், அன்பையும், ஒவ்வொரு குடும்ப அங்கத்தவர்கள் மீதான பரிவையும், சமூக ஒன்றிணைப்பையும் இயல்பாகவே ஏற்படுத்தவல்லது. ஆனால் தனித் தனிக் குடும்பமாக தமது எல்லைகளை மட்டுப்படுத்திக் கொண்டு பொருளாதார வளத்தை ஈட்டுவது மட்டுமே நவீன வாழ்க்கையாக மாறிப்போனது. இந்த வாழ்வியல் முறையில் கூட்டுக் குடும் பத்தில் இருந்த அத்தனை சந்தோசங் களும் அடிபட்டுப்போயின. மனங்கள் மரத்துப்போக உறவுநிலைத் தொடர் புகளும் தேவையற்றனவாக நாகரிக வாழ்வு மாற்றியது. இதனால் மூத்தோர் வேண்டாப் பொருளாக குடும்பத்திலே மாறத்தொடங்கினர். தம்முடைய பொரு ளாதார முன்னேற்றத்துக்கு உழைத்து, வயதாகி நோய்களையும் வேதனையையும் சுமந்து கொண்டிருக்கும் பெற்றோர் பிள்ளை களுக்கு சுமைகளாகத் தென்பட் டனர். இதிலிருந்து விடுபட பல பிள்ளைகள் தமது பெற்றோரை கைவிட்டு விட்டு தமக்கான புதிய வாழ்வுகளைத் தேடத் தொடங்கினர். வளர்ந்து ஆளாகியதும் தம்மைப் பேணிக்காப்பர் என்ற எண்ணத்தோடு ஆசையும் பாசமும் கலந்து தம்மால் வளர்க்கப்பட்ட பிள்ளைகளால் கைவிடப்பட்ட பெற் றோர் பலரும் நடுத்தெருவில் நின்று கொண்டு தம்முடைய எஞ்சியுள்ள வாழ் நாளை எப்படிக்கழிப்பது என்று ஏக்க முற்று நின்றனர். இவ்வாறு கைவிடப் பட்ட பல முதியோருக்கு தஞ்சம் கொடுப்பதுபோல முதியோர் இல்லங் கள் பலவும் தோற்றம் பெற்றன. அவ்வகையில் யாழ்ப்பாணத்தில் கைதடி என்னும் இடத்தில் முதியவர் களின் நலன்களைப் பேணும் நோக் கோடு 'கைதடி அரச முதியோர் இல்லம்' அமைக்கப்பட்டது.

இந்த முதியோர் இல்லத்தில்

## சமூகத்தின் முதுசொம்களைப் பேணவேண்டியது எல்லோரினதும் கடமையல்லவா?

தற்போது 182 முதியவர்கள் தங்கியுள் ளார்கள். இவர்களில் 102 பேர் ஆண்கள். 80 பேர் பெண்கள். இவர்கள் அனை வரும் ஏதோ ஒரு காரணத்தால் தம் முடைய உறவுகளைத் தொலைத்த வர்கள். அல்லது



உறவுகளால் கைவிடப் பட்டவர்கள். ஆயினும் சமூகத்தால் கைவிடப்பட்டவர்கள் என்ற எண்ணம் இவர்களுக்குள் ஏற்படாத வகையில் முதியோர் இல்லத்தின் பணியாளர்கள் சிறப்பான சேவையை இடையறாது வழங்கி வருகின்றனர்.

இங்கு தங்கியுள்ள முதியவர்களுக்கு ஏற்ற விதத்தில் தினமும் மூன்று நேரமும் சீரான வகையில் உணவு வழங்கப்பட்டு கின்றது. இந்த உணவு ஒவ்வொரு வருக்கும் ஏற்றபடி ஊட்டச்சத்துகள் உள்ளடக்கப்பட்ட, மருத்துவ ஆலோ சனைகளுக்கு ஏற்ப விதவிதமாக வழங் கப்படுகிறது. அதைவிட காலையில் எல்லோருக்கும் பசுப்பால் வழங்கப் படுவது வழமை. இதைவிட மாலை நேரங்களில் தேநீரோடு வடை, கேக், மிக்ஷர் போன்ற சிற்றுண்டி வகைகளும் பரிமாறப்படுகின்றன. இதைவிட விசேட தினங்களிலும், முதியோர்களுக்குத் தேவைப்படும்போதும் 'புத்தாடைகள் அவர்களுக்காக விநியோகிக்கப்படுகின்றன. அவற்றோடு முதியோர் களின் தேகாரோக் கியத்தை சீரான முறையில் பேணவும் அவர்களின் உடல் உறுதியைத் தக்க வைக்கவும் தினமும் காலையில் முதியவர்களின் உடல் நிலைக்கேற்ற இலகுதன்மையான உடற்பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. இவை தவிர அவர்களின் மனதுக்கு ஒத்தடம் கொடுப்பது போன்ற அன்பான வார்த் தைகளை பணியாளர்கள் பயன்படுத்து கிறார்கள். தமது பெற்றோரைக் கவனிப்பதுபோலவே இங்குள்ள பணியாளர்கள் முதியவர்களை பரிவும் பாசமும் பொங்க பராமரித்து வருகின்றார் கள். உறவுகளை இழந்து உளநெருக் கீடுகள் மிகுந்துபோய் இருக்கின்ற முதியவர்களின் மனநலனை மேம்படுத் தும் வகையில் கிளைபரப்பி நிழல் தரும் மரங்களின் இயற்கையான அரவணைப் பும் அவர்களுக்குக் கிடைத்து வருகிறது.

எனினும் இன்னும் சில வசதிகள் முதி யோர் இல்லத்துக்கு கிடைக்காமலேயே இருப்பது வேதனைக்குரியது.

முதியோர் இல்லத்தின் தேவைகள், பற்றாக்குறைகள் என்பன பற்றி கைதடி அரச முதியோர் இல்லத்தின் அத்தி யட்சகரான என்.இராஜலிங்கம் மனம் திறந்து உதயனிடம் விவரித்தார்.

''இந்த முதியோர் இல்லத்தில் உள்ள பல கட்டடங்கள் கடந்த காலங்களில் இப்பகுதியில் இடம்பெற்ற போர் நடவடிக்கைகள் காரணமாகவும், இயற்கையின் சீற்றம் காரணமாகவும் சேதமடைந்து பயன்பாட்டுக்கு உதவாத தன்மையுடன் காணப்படுகின்றன. நீண்ட காலமாக இவற்றை புனரமைக் காததாலும், பயன்படுத்தாமையாலும் பற்றைகள் காடுபோல வளர்ந்துள்ளன. இங்கு மனிதர் எவரும் வாழவே முடியாத அளவுக்கு சேதமடைந்த கட்டடங்கள் காணப்படுகின்றன. எனவே திருத்தப்பட்ட கட்டடங்களில் மட்டுமே தற்போது 182 முதியவர்களும் தங்கி யிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள் ளது.


அலுவலக உத்தியோகத்தர் விடுதி, வைத் தியர் தங்கும் விடுதி, தாதிகள் விடுதி, ஆண் களுக்கான 7ஆம் இலக்க விடுதி, பெண்களுக்கான 4ஆம் மற்றும் 8ஆம் இலக்க விடுதிகள் போன் றனவே சேத மடைந்து பாழடைந்த நிலை யில் உள்ளன. இவற்றினைச் சீரமைத்தால் இட நெருக்கடியால் அவதியுறும் முதியவர்களின் சிரமங் களைக் குறைக்க முடியும். அதுதவிர மேலும் பல முதியவர்களை உள்வாங்கக் கூடிய சூழலும் ஏற்படும். ஆனால் புனர மைப்பு வேலைகளுக்குரிய நிதிவளத் தைப் பெற்றுக்கொள்வது என்பது இன்றைய சூழ்நிலையில் மிகச் சிரம மானதாகவே காணப்படுகின்றது. எனவே முதியவர்கள் மீதும் சமூகத்தின் மீதும் அக்கறை உள்ளவர்கள் தாமாக முன் வந்து நிதியுதவியை மேற்கொண்டால் அழிந்துபோய்க் கிடக்கின்ற கட்டடங் களுக்கு மீளவும் உயிர் கொடுத்து முதிய வர்களுக்கு துணை செய்ய முடியும்.

கைதடி முதியோர் இல்லத்தில் இந்து ஆலயம் ஒன்றும், கிறிஸ்தவ ஆலயம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன. தமது மனப்பாரங்களை முதியவர்கள் இறக்கி வைத்து, இலேசான உணர்வுகளை அவர்கள் அடைவதற்கு ஆலய வழி பாடு மிகவும் உதவிகரமாக அமைகின் றது. ஆயினும் இங்குள்ள இந்துக்கோயி லில் கிரமமாக பூசை வழிபாடுகள் நடை பெறுவதுபோல கிறிஸ்தவ தேவாலயத் தில் நடைபெறுவதில்லை. எனவே எம தில்லத்தில் உள்ள கிறிஸ்தவ தேவால யத்தில் ஆராதனைகளையும், வழிபாடு களையும் சிறப்பான முறையில் முதியவர் கள் நிறைவேற்றிக் கொள்வதற்கான ஒழுங்குகளை சம்பந்தப்பட்டவர்கள் செய்து தருவார்களேயாயின் அது கிறிஸ் தவ மதத்தைச் சார்ந்த முதியவர் களுக்கு வரப்பிரசாதமாக அமையும் என நம்பலாம்.

இங்குள்ள பணியாளர்கள் ஒவ்வொரு வரும் தமது தாய் தந்தையரை விடவும் மேலான முறையிலேயே முதியவர் களைக் கவனித்து வருகின்றனர். பல பணியாளர்கள் தமது சொந்த நலன்களைக் கூட தியாகம் செய்து சேவையிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர். நான்கூட வாரத்தில் ஒருநாள் மட்டுமே எனது வீட்டுக்குச் சென்று வருவேன். மிகுதிநேரம் முழுதும் இல்லத்தில் உள்ள முதியவர்களைக் கவனிப்பதிலேயே செலவிடுகின்றேன்.

கைதடி அரச முதியோர் இல்லத்தி லுள்ள முதியவர்கள் நோய்வாய்ப்படும் பட்சத்தில் அவர்களுக்கான ஆரம்ப சிகிச் சைகள் எமது இல்லத்திலேயே வழங்கப் பட்டு அவர்கள் கண்ணும் கருத்துமாகக் கவனிக்கப்படுகின்றனர். சிலவேளை களில் நோயின் தாக்கம் அதிகரித்தால் மேலதிக சிகிச்சைக்காக அவர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படு வதுண்டு. ஆயினும் இப்போது முதி யோர் இல்லத்தின் செயற்பாடுகளுக்கான நிதியிலும் பற்றாக்குறை எழுந்துள்ளது. எனவே தொண்டு நிறுவனங்கள், பொது அமைப்புகள், சமூக நலன் விரும்பிகள் ஆகியோர் தம்மால் இயன்ற வகையில் நிதியுதவியை எமக்குச் செய்து தருவார்களேயானால் நாம் எமது இல்லத்திலுள்ள - சேதமடைந்து பயன் படுத்தப்படாமல் உள்ள - கட்டடங் களைத் திருத்தி அமைப்பதோடு எமது இல்லத்தின் நிர்வாகச் செயற்பாடு களையும் விரைவுபடுத்தி முதியோருக் கான சேவையை இன்னும் சிறப்பான முறையில் செய்ய முடியும் என நம்பு கிறேன்'' என்று இல்லத்தின் தற் போதைய நிலை பற்றி அதன் அத் தியட் சகர் என்.இராஜலிங்கம் தெரிவித்தார்.

நமது சமூகத்தின் முதுசொம்களாக பேணப்பட வேண்டிய முதியவர் களுக்கு



சிறப்பான சேவை கிடைப்பதற்கு தாராள மனமுள்ளவர்கள் அத்தனை பேரும் முன்வரவேண்டும். அதனூடாக எமக்கு முன்னுள்ள மாபெரும் சமூகக் கடமையை நிறைவேற்றிய திருப்தியினை நிச்சயமாக அடைய முடியும்.

**நந்தன்**

* * * * * * * * * * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 40 வயது வரை பெக்காம் விளையாடுவார்



பெக்காம் என்ற பெயரை கேட்டாலே கால்பந்தாட்ட ரசிகர்களுக்கு அது மகிழ்ச்சியான விஷயமாகத்தான் இருக்கும். இந்த விடயத்தை கேட்டால் பெக்காமே மகிழச்சியடைவார். இவர் நாற்பது வயதிலும் கால்பந்து விளையாட முடியுமென வைத்தியர்கள் சான்றிதழ் அளித்துள்ளனர். இங்கிலாந்து கால்பந்து அணியின் சிறந்த வீரராகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார் பெக்காம். மிகச் சிறந்த 'மிட்பீல்டரான' இவர் மைதானத்தில் பம்பரமாக சுழன்று ஆடக் கூடியவர்.

உலகின் முன்னணிக் கழக அணிகள் எல்லாம் இவரைப் பல கோடிகளுக்கு ஒப்பந்தம் செய்கின்றன. தற்போது இத்தாலியின் பிரபல 'ஏ சி மிலன்' கழகத்திற்காக விளையாடி வருகிறார். வைத்தியர்கள் பெக்காமின் உடலை பரிசோதனை செய்து பார்த்துள்ளனர். அப்போது உடல் மிகவும் உறுதியாக இருப்பதைக் கண்டு ஆச்சரியம் அடைந்துள்ளனர். உடற் தகுதியை அப்படியே தக்க வைத்தால் 40 வயது வரை கால்பந்து விளையாடலாம் என தெரிவித்துள்ளனர். வைத்தியர்களின் கணிப்புச் சரியாக இருந்தால் வரும் 2014 இல் பிரேசிலில் நடக்க உள்ள உலகக்கிண்ணக் கால்பந்து தொடரில் கூட இங்கிலாந்து அணி சார்பில் பெக்காம் பங்கேற்கலாம். அப்போது அவர் 39 வயதை தான் எட்டியிருப்பார். உடல் நிலையைப் பாதுகாக்க பழங்கள், காய் கறிகள், மீன் மற்றும் சத்துள்ள உணவு வகைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் வைத்தியர்கள் அறிவுறை கூறியுள்ளனர்.

இருதய பரிசோதனை அவ்வப்போது செய்து கொள்வது அவசியம். மனதளவில் வலிமையாக இருக்க மனோதத்துவ நிபுணர்களிடம் ஆலோசனை பெற வேண்டுமென பெக்காமுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது குறித்து தற்போது 34 வயதான பெக்காம் கூறுகையில், "இன்னும் 6 ஆண்டுகளுக்கு கால்பந்து விளையாடலாம் என வைத்தியர்கள் கூறிய போது உண்மையில் அதிர்ச்சி அடைந்தேன். நல்ல உடற்தகுதியுடன் இருப்பதாக தெரிவித்தனர். வயதாகும் போது ஏற்படும் பிரச்சினைகளை தவிர்க்க உரிய ஆலோசனை வழங்கியுள்ளனர். இதனைப் பின்பற்றி தொடர்ந்து விளையாட முயற்சிப்பேன்"- என்றார்.

# நடையைக் கட்டிய நடப்புச் சம்பியன்கள்

பிரெஞ்ச் ஓபன் ரென்னிஸில் நடப்பு சம்பியன்களான நடால், இவனோவிக் ஒரே நாளில் அதிர்ச்சிகரமாக தோல்வியைத் தழுவினார்கள். கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ்ச் ஓபன் ரென்னிஸ் போட்டி பிரான்ஸ் தலைநகர் பாரிசில் நடந்து வருகிறது.

முதல் நிலை வீரரும் 'களிமண்' தரை மன்னன் என்று அழைக்கப்படுபவருமான ஸ்பெயினின் ரபெல் நடால் 4 ஆவது சுற்றில் 23 ஆம் நிலை வீரர் சுவீடன் நாட்டைச் சேர்ந்த ரொபன் சோடர்லிங்குடன் பலப்பரீட்சை நடத்தினார். இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதலே அனல் பறந்தது. 4 முறை சம்பியனான நடாலின் பெரும்பாலான சவால்களைச் சோடர்லிங் முறியடித்தது, ரசிகர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.


இவனோவிக் நடால்

முதல் 3 செட்களில் இரண்டை சோடர்லிங் கைப்பற்றினார். இதனால் கட்டாயம் வென்றாக வேண்டிய நெருக்கடியுடன் 4 ஆவது செட்டில் நடால் முழுமூச்சுடன் போராடினார். இருவரும் தத்தமது சர்வீஸ்களில் புள்ளிகளைச் சேர்த்ததால் சமநிலை நீடித்துக் கொண்டே வந்தது. இதனால் கடைசியில் டை பிரேக்கர் கடைப்பிடிக்கப்பட்டது. இதில் அசத்திய சோடர்லிங் இந்த செட்டை தனதாக்கி பிரெஞ்ச் ஓபனில் நடாலின் ராஜநடைக்கு முற்றுப்புள்ளி வைத்தார். மூன்றரை மணி நேரம் நீடித்த இந்த மோதலில் சோடர்லிங் 62, 67[27], 64, 76[72] என்ற செட்கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார். 2005 ஆம் ஆண்டு பிரெஞ்ச் ஓபனில் முதல் முறையாகக் களம் இறங்கி பட்டத்தை வென்ற நடால் அதன் பின்னர் 2006, 2007, 2008 ஆம் ஆண்டுகளில் வாகை சூடி பரமிக்க வைத்தார். 4 ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் முதல் முறையாக பிரெஞ்ச் ஓபனில் தோல்வியை தழுவியிருக்கிறார். அவரை வென்ற சோடர்லிங் இதற்கு முன்பு அவருடன் மோதிய 3 ஆட்டங்களிலும் தோற்று இருந்தது குறிப்பிடத்தக்கது.

பெண்கள் பிரிவிலும் அதிர்ச்சி தோல்வி நீடித்து வருகிறது. கடந்த ஆண்டு இந்தப் பட்டத்தை வென்றவரான செர்பியாவின் இவனோவிக் 26, 36 என்ற நேர் செட்டில் 19 வயதான பெலாரஸ் வீராங்கனை விக்டோரியா அஸரென்காவிடம் மண்ணைக் கவ்வினார். முன்னதாக பெண்கள் சுற்றில் காலிறுதிக்கு முன்னேறிய முதல் வீராங்கனை என்ற சிறப்பை ஸ்லோவேக்கியாவின் டொமினிகா சிபுல்கோவா பெற்றார். அவர் தனது 4 ஆவது சுற்றில் ஹங்கேரியின் ஆக்னஸ் சாவேவை 64, 64 என்ற நேர் செட் கணக்கில் தோற்கடித்தார். பிரெஞ்ச் ஓபனில் சுலோவேக்கியா வீராங்கனை ஒருவர் காலிறுதியை எட்டுவது கடந்த 13 ஆண்டுகளுக்குப் பின்னர் இதுவே முதல் முறையாகும்.

# 'ருவெண்ரி - 20' நேற்று ஆரம்பம்

ICC WORLD TWENTY20 ENGLAND 09

இரண்டாவது 'ருவென்ரி - 20' உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 21ஆம் திகதி வரை நடைபெறுகிறது. போட்டியில் நடப்பு சாம்பயன் இந்தியா, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் உள்பட 12 அணிகள் கலந்து கொள்கின்றன. அவை 4 பிரிவாகப் பிரிக்கப் பட்டுள்ளன.

லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவில் இருந்தும் தலா 2 அணிகள் வீதம் மொத்தம் 8 அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறும். பின்னர் இந்த 8 அணிகளும் இரு பிரிவாக பிரிக்கப்பட்டு தலா ஒரு முறை மோதிய பிறகு அதில் இருந்து 4 அணிகள் அரைஇறுதிக்கு முன்னேறும்.

**போட்டி அட்டவணை வருமாறு:**

| | |
|---|---|
| ஜூன் 5 : | இங்கிலாந்து-ஹொலன்ட் (பி பிரிவு) லண்டன் - இரவு 10 மணி |
| ஜூன் 6 : | நியூஸிலாந்து-ஸ்கொட்லாந்து (டி பிரிவு) லண்டன் - பிற்பகல் 2.30 மணி |
| ஜூன் 6 : | அவுஸ்திரேலியா-மேற்கிந்திய தீவு (சி பிரிவு) லண்டன் - மாலை 6.30 மணி |
| ஜூன் 6 : | பங்களாதேஷ் - இந்தியா (ஏ பிரிவு) நாட்டிங்காம் - இரவு 10.30 மணி |
| ஜூன் 7 : | ஸ்கொட்லாந்து-தென்னாபிரிக்கா (டி பிரிவு) லண்டன் - மாலை 6 மணி |
| ஜூன் 7 : | இங்கிலாந்து - பாகிஸ்தான் (பி பிரிவு) லண்டன் - இரவு 10 மணி |
| ஜூன் 8 : | பங்களாதேஷ் - அயர்லாந்து (ஏ பிரிவு) நாட்டிங்காம் - மாலை 6 மணி |
| ஜூன் 8 : | அவுஸ்திரேலியா - இலங்கை ( சி பிரிவு) நாட்டிங்காம் - இரவு 10 மணி |
| ஜூன் 9 : | ஹொலன்ட் -பாகிஸ்தான் (பி பிரிவு) லண்டன் - மாலை 6 மணி |
| ஜூன் 9 : | நியூஸிலாந்து-தென்னாபிரிக்கா (டி பிரிவு) லண்டன் - இரவு 10 மணி |
| ஜூன் 10 : | இலங்கை-மேற்கிந்திய தீவு (சி பிரிவு) நாட்டிங்காம் - மாலை 6 மணி |
| ஜூன் 10 : | இந்தியா-அயர்லாந்து (ஏ பிரிவு) நாட்டிங்காம் - இரவு 19 மணி |
| ஜூன் 11 : | டி1-ஏ2 நாட்டிங்காம் - மாலை 6 மணி |
| ஜூன் 11 : | பி2-டி2 நாட்டிங்காம் - இரவு 10 மணி |
| ஜூன் 12 : | பி2-சி2 லண்டன் - மாலை 6 மணி |
| ஜூன் 12 : | ஏ1-சி1 லண்டன் - இரவு 10 மணி |
| ஜூன் 13 : | சி1-டி2 லண்டன் - மாலை 6 மணி |
| ஜூன் 13: | டி1-பி1 லண்டன் - இரவு 10 மணி |
| ஜூன் 14 : | ஏ2-சி2 லண்டன் - மாலை 6 மணி |
| ஜூன் 14 : | ஏ1-பி2 லண்டன் - இரவு 10 மணி |
| ஜூன் 15 : | பி2-சி1 லண்டன் - மாலை 6 மணி |
| ஜூன் 15 : | பி1-ஏ2 லண்டன் - இரவு 10 மணி |
| ஜூன் 16 : | டி2-சி2 நாட்டிங்காம் - மாலை 6 மணி |
| ஜூன் 16 : | டி2-ஏ1 நாட்டிங்காம் - இரவு 10 மணி |
| ஜூன் 18 : | முதலாவது அரை இறுதி நாட்டிங்காம் - இரவு 10 மணி |
| ஜூன் 19 : | 2 ஆவது அரை இறுதி லண்டன் - இரவு 10 மணி |
| ஜூன் 21 : | இறுதிப்போட்டி லண்டன் - இரவு 7.30 மணி |

# சொந்தச் சாதனையை முறியடித்தார் அமெரிக்க வீரர் டைசன் கே



ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் அமெரிக்காவின் டைசன் கே தனது சொந்த சாதனையை முறியடித்தார்.

நியூயோர்க்கில் நடைபெற்ற ரீபொக் கிராண்ட் பிரிக்ஸ் மெய்வல்லுநர் போட்டியின் 200 மீற்றர் ஓட்டப் போட்டி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில் டைசன் கே 19.58 வினாடிகளில் பந்தயத் தூரத்தை முடித்து முதலிடத்தை பிடித்தார். இது 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் வீரர் ஒருவரின் மூன்றாவது சிறந்த காலமாக பதிவானது. கடந்த ஆண்டு நடந்த பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் ஜமைக்காவின் உசைன் போல்ட் 200 மீற்றர் தூரத்தை 19.30 வினாடிகளில் முடித்தது தற்போதைய உலக சாதனை என்பதோடு, முன்னாள் அமெரிக்க ஜாம்பவான் மைக்கல் ஜோன்ஸன் 1996 ஆம் ஆண்டு நடந்த அட்லான்டா ஒலிம்பிக் போட்டியில் 200 மீற்றர் தூரத்தை 19.32 வினாடிகளில் முடித்தது இதன் இரண்டாவது இடத்தில் காணப்படுகிறது. அத்துடன் டைசன் கே 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் பதிவுசெய்துகொண்ட சிறந்த காலமும் இதுவாகும். முன்னதாக 2007 ஆம் ஆண்டு நடந்த உலகச் சம்பியன் ஷிப் போட்டியில் 200 மீற்றர் தூரத்தை 19.62 வினாடிகளில் முடித்ததே சாதனையாக இருந்தது. ரீபொக் கிராண்ட் பிரிக்ஸ் மெய்வல்லுநர் போட்டியில் 200 மீற்றர் ஓட்டப் போட்டியின் இரண்டாவது இடத்தை 19.98 வினாடிகளில் பந்தயத் தூரத்தை முடித்த அமெரிக்காவின் வொலஸ் ஸ்பயர்மன் பெற்றதோடு, 20.30 வினாடிகளில் பந்தயத் தூரத்தை முடித்த ஜாமி வொர்னர் மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயம்ரவிக்கு டும்... டும்... டும்.....



இந்த மாதம் 4 ஆம் திகதி நடிகர் ஜெயம் ரவிக்கும் - ஆர்த்திக்கும் திருமண நிகழ்வு இனிதே நடந்தேறியுள்ளது. இளம் நெஞ்சங்களைக் கொள்ளை கொண்ட நடிகரான ஜெயம்ரவி சென்னையைச் சேர்ந்த திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தொடர்களைத் தயாரிக்கும் விஜயகுமார் - சுஜாதா தம்பதியினரின் மகளான ஆர்த்தியை மணமுடித்துள்ளார். நீண்டகாலமாக ஆர்த்தியும், ஜெயம்ரவியும் காதலித்து வந்துள்ளனர். இப்போது அவர்களின் காதல் நனவாகியுள்ளது. ஜெயம் ரவியின் திருமண வைபவத்தில் திரையுலகப் பிரபலங்களும், தமிழக அரசியற் பிரபலங்களும் கலந்துகொண்டு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.★

# ரஜனியுடன் இணைகிறேன் - கலாபவன்மணி



கலாபவன்மணியை உங்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். ஜெமினி படத்தில் விலங்குகள் போல் பாவனை செய்யும் வில்லனாகத் தோன்றி பார்போரின் வயிற்றைக் கலக்கச் செய்தவர் இந்தக் கலாபவன்மணி. இப்போது அவர் ஆறு தெலுங்குத் திரைப்படங்களில் கதாநாயகனாக நடித்துவருகிறார். இந்நிலையில் சுப்பர் ஸ்ரார் ரஜினிகாந்த் நடித்துவரும் 'எந்திரன்' திரைப் படத்தில் நகைச்சுவை கலந்த குணச்சித்திரப் பாத்திரத்தில் கலாபவன்மணி தோன்றியுள்ளார். "ரஜினிகாந்தோடு ஒரு படமாவது இணைந்து நடிக்க ஆசைப்பட்டேன். இப்போது அது நிறைவேறியதில் பேரானந்தம் அடைகிறேன்" என்று எல்லோரிடமும் சொல்லி வருகிறார் கலாபவன்மணி.★

# இனிமேல் வில்லி



கதாநாயகியாக அறிமுகமாகிப் பின்னர் 'குஷி' படத்தில் இடம்பெற்ற'கட்டிப்பிடி கட்டிப்பிடிடா' என்ற பாடல் மூலம் ஒரே நாளில் தமிழ் ரசிகர்களின் கனவுக்கன்னியாக மாறியவர் மும்தாஜ். பெரும்பாலான படங்களில் வெறும் கவர்ச்சிப் பொம்மையாகவே மும்தாஜ் வந்துபோவார். இதனால் சில காலத்திலேயே இவருடைய மதிப்பு சரிவடைந்தது. இந்நிலையில் ஷக்தி சிதம்பரத்தின் இயக்கத்தில் லோரன்ஸ்சின் நடிப்பில் வெளிவந்த 'ராஜாதி ராஜா' படத்தில் வில்லியாகத் தோன்றியுள்ளார் மும்தாஜ். இனிவரும் காலங்களில் படத்தின் கதைக்குத் தேவைப் பட்டால் வில்லியாகவும் நடிப்பேன் என்று கூறிவருகிறார் மும்தாஜ்.★

# குறைகிறது சம்பளம்



நடிகர் ஆர்யாவுக்கு இப்போது கெட்டகாலம் போல தெரிகிறது. 'நான் கடவுள்' படத்தில் சிறப்பாக நடித்து எல்லோருடைய பாராட்டுக்களையும் பெற்றாலும் அதன் பின்னர் அவர் நடித்த 'சர்வம்' திரைப் படம் அந்தப் பாராட்டுக்களை எல்லாம் அர்த்த மற்ற தாக்கிவிட்டது. அந்த அளவுக்கு வசூலில் சர்வம் திரைப்படத்திற்கு மரண அடி விழுந்துள்ளது. இதனால் ஆர்யா தற்போது நடித்துவரும் படங்களின் தயாரிப்பாளர்கள் ஆர்யாவின் சம்பளத்தை சரி பாதியாகக் குறைத்துவிட்டதாகத் தெரியவருகிறது.★

# திரைவிமர்சனம்

புரட்சித் தளபதி விஷால், ஸ்ரேயா, சந்தானம், கிஷோர், பிரகாஷ்ராஜ், கீதா, பாலாசிங், ஷாயாஜி ஷிண்டே போன்றோரின் நடிப்பில் புதிய நெறியாளரான சபா ஐயப்பனின் இயக்கத்தில் வெளி வந்துள்ளது 'தோரணை' திரைப்படம்.

விஷாலின் அண்ணனான கிஷோர் சிறு வயதிலேயே வீட்டைவிட்டு ஓடிவிடுகிறார். வளர்ந்து பெரியவராகும் விஷால் தனது அண்ணனைத் தேடி சென்னைக்கு வருகிறார். அங்கு சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும் ரவுடிக் கும்பலின் தலைவனாக இருக்கும் கிஷோரை விஷால் கண்டுபிடிக்கிறார். கிஷோரைத் திருத்தித் திரும்பவும் ஊருக்கு அழைத்துச் செல்ல விஷால் முயற்சிக்கிறார். இந்நிலையில் இன்னொரு ரவுடிக் கும்பலின் தலைவனான பிரகாஷ்ராஜ், கிஷோரைக் கொல்லும் வெறியோடு அலைகிறார். பிரகாஷ் ராஜின் கொலை வெறி என்னவானது? விஷால் தன் அண்ணனை மீட்டாரா? என்பன போன்ற கேள்விகளுக்குக் கலகலப்பாகவும் விறுவிறுப்போடும் பதில் சொல்கிறது 'தோரணை' திரைப்படம்.

விஷால் சண்டைக் காட்சிகளிலும் நகைச்சுவைக் காட்சிகளிலும் எவ்வித குறைகளும் வைக்காமல் தான் தான் அடுத்த விஜய் என்பதை சொல்லாமல் சொல்லியிருக்கிறார். ஸ்ரேயா காதல் காட்சிகளுக்கும் நகைச்சுவைக்கும் மட்டுமே பயன்பட்டிருக்கிறார்.




நீண்ட காலத்தின்பின் எல்லோரும் ரசிக்கும் படியான நகைச்சுவைக் காட்சிகளை சந்தானம் தந்திருப்பது ஆறுதலான விடயம்.

புதுமுக இயக்குநர் சபா ஐயப்பன் சில இடங்களில் தடுமாறினாலும், பழமையானதொரு கதையை விறுவிறுப்பாகத் தந்திருப்பதை மறுக்க முடியாது. மணிசர்மாவின் இசையில் இரண்டு பாடல்கள் மட்டுமே ரசிக்க வைக்கின்றன.

இது ஒரு சண்டைப் படம் என்று விளம்பரப்படுத்தப் பட்டாலும் உண்மையில் இது நகைச்சுவைப் படம் தான். ஏனெனில் படத்தை தூக்கி நிறுத்தியிருப்பது நகைச்சுவை மட்டும்தான் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஞானசம்பந்தர் குருபூசை

யாழ்ப்பாணம்,ஜூன்7

திருஞானசம்பந்தர் குருபூசை நிகழ்வு நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வேலணை, சரவணை செல்லக்கதிர்காம ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உதவியாளர் எஸ்.உதயபாலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ,இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கணக்காளர் ஜி.காண்டீபன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (204)

# 70ஆயிரம் கிலோ வெங்காயம் தென்னிலங்கைக்கு ஏற்றுமதி

யாழ்ப்பாணம்,ஜூன்7

யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் இதுவரை 70ஆயிரம் கிலோவுக்கு மேற்பட்ட வெங்காயத்தைத் தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்துள்ளது எனச் சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வெங்காயம் தரைப்பாதையூடாகவே கொண்டு செல்லப்பட்டது.

இதனைவிட இந்த வாரத்திலும் மேலும் ஒரு தொகுதி வெங்காயமும், கருவாடும் தென்பகுதிக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதற்கென நெடுந்தீவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட கருவாடு சுத்தம் செய்யப்பட்டுப் பொதிகளில் அடைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. (50-224)

සම්පත් බැංකුව
SampathBank
WE PRESENT YOUR FUTURE

## TEAM SAMPATH
## VACANCIES IN JAFFNA PENINSULA

We at Sampath Bank have been setting standards of best in class in Information Technology blended with service excellence. Our exceptionally dedicated customer focused professional team, performing in a learning environment is geared to secure leadership in the financial services industry in the region.

The rapid expansion in our delivery channels have created challenging opportunities for result oriented Bankers to join Team Sampath as Branch Managers / Assistant Branch Managers / Junior Executives / Trainee Staff Assistants in the branches to be opened in Jaffna peninsula.

### Branch Manager

- Professionally qualified in Banking with a minimum of ten (10) years experience at a commercial bank, of which five (05) years should be at a managerial level.
- Age below 45 years.

### Assistant Branch Manager

- Professionally qualified in Banking with a minimum of seven (07) years experience at a commercial bank, of which three (03) years should be at a managerial level.
- Age below 45 years.

### Junior Executive

- Three passes in GCE (A/L) examination in main subjects (one sitting)
- Minimum of 5 Credits in the GCE (O/L) examination, including Mathematics, in one and the same sitting. A credit Pass for English obtained at a subsequent sitting will also be considered for eligibility.
- Be customer oriented together with a minimum of two (02) years experience, preferably as a front liner at a commercial bank or a Degree should be completed in a recognized university.
- Age below 27 years.

### Trainee Staff Assistant

- Three passes in GCE (A/L) examination in main subjects (one sitting)
- Minimum of 5 Credits in the GCE (O/L) examination, including Mathematics, in one and the same sitting. Credit Pass for English obtained at a subsequent sitting will also be considered for eligibility.
- Age below 23 years.

*The ideal candidates for any of the above positions should also posses the following competencies.*

- A high level of skills in communication, in both English & Tamil languages. Proficiency in the Sinhala language will be an added advantage.
- Proven track record in Branch banking, inclusive of knowledge in credit operations in an online computerized environment.
- Very good interpersonal skills.
- Ability to work in a team environment.

***An attractive remuneration package coupled with a pleasant and modern work environment awaits the right candidates.***

Apply on line at **careers@sampath.lk** or drop your Curriculum Vitae in the mail box placed at: **No 56/15, Link Road (Lane joining Stanley Road Bus Stand), Jaffna** within seven (07) days with your complete Curriculum Vitae giving qualifications and experience, citing contact telephone numbers and names of two non related referees.

For further information please contact Madhawa / Mihiri (011-4730542).

**Manager Human Resources (Admin)**
**Sampath Bank PLC,**
No. 110, Sir James Peiris Mawatha, Colombo 02.

Company Registration No PQ 144
www.sampath.lk

# திரைப்பாடல்களில்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி....)

அசலை விட கண்ணதாசனின் நகல் பாடல் பெரும் வரவேற்பைப் பெற்றது. காரணம் இசை மட்டும் அன்று கவி அமைப்பும், கர்ணனின் கொடை பற்றி எல்லோரும் ஏற்கனவே நன்கு தெரிந்திருந்ததும்தான்.

நாணிச் சிவந்தன மாதரார் கண்கள்
நாடுதோறும்
நடந்து சிவந்தன பாவலர் கால்கள்
நற்பொருளைத்
தேடிச் சிவந்தது ஞானியர் உள்ளம்
தினங் கொடுத்துத்
தேய்ந்து சிவந்தது கர்ண மாமன்னன்
திருக்கரமே

கண்ணதாசன் விட்டு வைக்காதது எது வுமே இல்லை. எல்லா இலக்கியப் பாடல்களிலும் தொட்டு வைத்துத்தான் இருக்கிறார். திருக் கரசரின் தேவாரமான 'ஆட்டுவித்தால் யாரொ ருவர் ஆடாதாரே'' என்ற பாடலை அப்படியே தனது பாடல் ஒன்றுக்கு முதலடியாக்கினார்.

திருவாசகத்தில் மணிவாசகர் பாடிய திருப் பொற் சுண்ணப் பாடல்களில் ஒன்றான ''முத்தணி கொங்கைகள் ஆட ஆட......'' என்ற பாடலை 'கட்டோடு குழலாட''என்றவகையில் பாடலாக்கினார். பட்டினத்தார் பாடல்கள் பல கண்ணதாசனின் தத்துவப் பாடல்களுக்கு வித்தாக அமைந்தன.

மாதா உடல் சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவும் கைசலித்து விட்டானே- நாதா
இருப்பையூர் வாழ்சிவனே இன்னுமோர் அன்னை
கருப்பையூர் வாராமற் கா

என்ற பட்டினத்தார் பாடல் அதே கருத்தோடு கவிஞர் கண்ணதாசனால் திரைப் படப்பாடல் ஆக்கப்பட்டது. ''தாய் தந்த பிச்சையிலே பிறந்தேன் அம்மா'' என்று தொடங்குகிறது அப்பாடல்.

பெற்றவள் உடல் சலித்தாள் பேதை நான் கால் சலித்தேன்.
படைத்தவன் கை சலித்து ஓய்ந்தான் அம்மா - மீண்டும்
பாவியொரு தாய் வயிற்றில் பிறவேன் அம்மா

பண்டைத் தமிழ் இலக்கியங்களைப் படிப் பவர்களும், இரசிப்பவர்களும் நல்ல கருத்துக்களை ஏற்றுக் கொண்டு கடைப் பிடித்து ஒழுகுவோரும் குறைந்து வருவது இக்காலச் சிறப்பு! இன்றைய இளைஞர்களின் மன உணர்ச்சிக் கேற்ற வகையில் சினிமாப் பாடல்களை மேற்படி கவிஞர்கள் எழுதினாலும், அவர்களது உள்ளம் ப்ழந்தமிழ் இலக்கியங்களுக்குள் ஊறித் திழைத்திருப்பதை அவதானிக் கக் கூடியதாக இருக்கிறது.

சினிமாப் பாடல்களை ரசிக்கும் இன்றைய இளைஞர்கள் சற்று பழந்தமிழ் இலக்கியங்களிலும் கால் ஊன்றி ஆழங் கண்டு அனுபவித்தால் அது தமிழ் இலக்கியத்திற்கு ஒரு புதுமலர்ச்சியை உண்டாக்குவதாக அமையும்.

நன்றி:
இலக்கியத் தேறல் -
'அகளங்கன்'

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1976, மிருகசீரிடம் 3 ஆம் பாதம் செவ்வாயற்ற, கிரகபாவம் 11, B.Sc பல்கலைக்கழக கணனி விரிவுரையாளருக்கு பட்டதாரி மணமகள் தேவை.
தொடர்பு: 0771271299

**திருமண சேவை**

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுய தெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த - சுயதெரிவுமுறை முன்னோடி- தனிமனித நிறுவுநர் - சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்புகொள்க.
கொழும்புநேரடித் தொலைபேசி:
2360488, 2360694, 4873929.

**வீடும் காணியும் விற்பனைக்குண்டு**

82/1, சுண்டிக்குளி, கண்டி வீதியில் அமைந்துள்ள வீடும், 695/ 23, நாவலர் வீதி, நல்லூரில் உள்ள காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 222 3483

**'மஞ்சள், குங்குமம்' மணமக்கள் அறிமுக சேவைகள்**

உங்கள் பிள்ளைகள் எத்தகைய கல்வித் தகைமைகள், பதவிகள், தொழில்களை கொண்டிருப்பினும் இவர்களுக்கு எத்தகைய மணமக்களை எதிர்பார்ப்பினும் நீங்கள் வழங்கும் விவரங்கள் அடிப்படையில் பொருத்தமானவர்களை அறிமுகப்படுத்துவதே சேவையின் நோக்கமாகும். இந்த சேவைகள் தொழில் ரீதியற்றவை. மணமக்கள் ஆசிரியர்கள், முகாமைத்துவ தரத்தினர், விரிவுரையாளர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ளவர்கள் உட்பட பலர் உள்ளனர்.
பரமேஸ்வரா சந்தி, (Petrol Shed முன்பாக.)
பலாலி வீதி, திருநெல்வேலி.

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவகுடும்பம், 1981 ஆடி மாதம் பூராட நட்சத்திரத்திலே பிறந்து 33 பாவம் உள்ள 5அடி 10 அங்குல உயரமுள்ள CCNA, MCSE சித்தியடைந்து தற்பொழுது U.K. யில் இரண்டு வருடமாக மாணவ விஸாவில் பட்டப்படிப்பு பல்கலைக்கழகத்தில் Computer Network படித்து இறுதியாண்டு பரீட்சையில் தோற்றிக்கொண்டிருக்கும் தொடர்ந்து மேற்படிப்பு படிக்க விரும்பும் மணமகனுக்கு U.K., U.S.A., Canada, Australia PR உள்ள மணமகள் தேவை.
தொடர்பு கொள்ளவேண்டிய இலக்கங்கள்:
0777877263, 060 221 6366.

**வேலை வாய்ப்பு**

துடிப்பான இளைஞர், யுவதிகளிடமிருந்து பின்வரும் பணிநிலை வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.
1. Marketing Executives 2.Hardware Technicians
எமது இணையத்தளத்திலுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தினை பூரணப்படுத்தி 16.06.2009 இற்கு முன்பாக மின்னஞ்சல் மூலமாக அல்லது தபாலில் அனுப்பவும்.
SPEED IT NET, www.Speeditnet.com,
72/28 Panikar Lane,Thirunelvely, E-mail: vacancy@speeditnet.com

உங்களின் தோல் சுருக்கமடைகிறதா?
இதோ பாவியுங்கள்...
**சந்தனாலேப்ப ஸ்கிரப் கிறீம்**
காய்ந்து இறந்த தோலை நன்கு நீக்கி தூய்மையாக்கும் தோலுக்கு மருத்துவ போசாக்கை அளித்து சருமத்தை நோயற்றதாக்கி பொன்னிறமேற்றி அழகிய இளமைத்தோற்றத்தைப் பெற்றுத்தரும்.



சந்தனாலேப்ப ஸ்கிரப் கிறீம்
Chandanalepa Scrub Cream
100% herbal
'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்).
MANUFACTURED BY: SAN JEEWARA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயன்றளவு இயற்கையுடன் ஒட்டியதாக வாழ்க்கை முறையை அமையுங்கள்...

சுற்றாடல் தினம் ஆண்டுதோறும் சர்வதேசரீதியில் கொண்டாடப்பட்டு வருகிறது. இலங்கையிலும், யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளிலும் சுற்றாடல் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. சர்வதேசரீதியாக அரச சார்பற்ற நிறுவனங்கள் சூழலைப் பாதுகாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன. யாழ்ப்பாணத்திலும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் சூழல்

## மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வடமாகாண உதவிப்பணிப்பாளர் திருமதி விஜிதா சத்தியகுமார் சிறப்புச் செவ்வி



பாதுகாப்பு விழிப் புணர்வுப் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. எமது சக்திக்கு அப்பாற்பட்ட அதிகார சக்திகள் சூழலை மாசடையச் செய்வதை எம்மால் தடுக்க முடியாது. ஆனால் நாம் மனம் வைத் தால் சூழல் மாசடைதலை ஓரளவுக் கேனும் குறைக்கலாம் அல்லது கட்டுப் படுத்தலாம்.

பொதுவாக யாழ்ப்பாண மக்களி டையே சுயநலமனப்பாங்கு ஏனைய வர்களைவிட அதிகமாகக் காணப்படு கின்றது. ''உன்னை நீ திருத்திக் கொண்டால் உலகம் தானாகவே திருந்தி விடும்'' என்ற பொன்மொழியை மனதில் இருத்தி நாம் ஒவ்வொருவரும் செயற்பட்டால் எம்மை நாம் ஆரோக்கியமாகவும் நோய் அணுகாம லும் வைத்துக் கொள்ளலாம்.

''நீங்கள் உங்கள் பூமிக்குத் தேவை; பூமி வெப்பமடைவதைக் குறைக்க ஒன்றுபடுவோம்'' என்ற வாசகம் இவ்வாண்டு சுற்றாடல் தின மகுட வாசகமாக ஐ.நா.சபையால் பிரகட னப்படுத்தப்பட்டுள்ளது.

சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வட மாகாண உதவிப் பணிப்பாளர் விஜிதா சத்தியகுமார் வழங்கிய செவ்வி இங்கு பிரசுரமாகிறது.

கேள்வி:பொதுவாக யாழ்ப்பாணத் தில் என்னென்ன காரணிகளால் சூழல் மாசடைகிறது?

பதில்: யாழ்ப்பாணத்தைப் பொறுத்த மட்டில் விவசாய இராசாயனப் பொருள்களால் சூழல் மாசடைகிறது. அங்கீகாரமற்ற முறையில் அமைக்கப்படும் கிணறுகள், மலசலகூடக்குழிகள் என்பவற்றால் நிலத்தடி நீர் மாசடைகிறது.

## சூழல் மாசடைவதைக் கட்டுப்படுத்த அதுவே உதவும்; நீங்கள் சுகநலம் பேணவும் வழி பிறக்கும்

கே: பிளாஸ்ரிக், பொலித்தீன் என்பவற்றால் ஏற்படும் தாக்கங்கள் பற்றி விளக்குவீர்களா?

ப: 2008 ஆம் ஆண்டு 20 மைக்றேனுக்குக் குறைவான பொலித்தீன் பை (சொப்பிங் பாக்) விற்பனை தடை செய்யப்பட்டது. ஆனால் யாழ்ப்பாணத்திலுள்ள கடைகளில் 20 மைக்றேனுக்கும் குறைவான பொலித்தீன் சொப்பிங் பைகள் விற்பனை செய்யப்படுகின்றன. பிளாஸ் ரிக், பொலித்தீன் போன்ற வற்றை எரிக்கும்போது கந்தம் சேர் ஒட்சைட், நைதரசன் சேர் ஒட்சைட் என்பன வெளியா கின்றன. இந்த நச்சு வாயுக் கள் வளிமண்டலத்தில் கலப்ப தால், வளிமாச டைந்து சுவாசம் சம்பந் தமான நோய்கள் ஏற்படு கின்றன.



பிளாஸ்ரிக், பொலித் தீன் போன்ற வற்றைப் புதைப் பதால் மழை நீரின் ஊடுருவல் தடுக் கப்படுகிறது. மழைநீர் நிலத்தடி நீரைச் சென்றடைவது தடுக் கப்படுகிறது. நீர் நிலைகள், கிணறுகள், குளங்கள் என்பவற்றுக்கருகில் பிளாஸ்ரிக், பொலித் தீன் கழிவுகளைப் போடுவதால் நிலத் தடி நீரின் மீள் நிரப்புகை (Recharge) தடுக்கப்படுகிறது. இதன் காரணமாகக் கிணறுகளில் நீர் வற்றி வறட்சி ஏற்படு கிறது. அத் துடன் நிலத்தடி நீரும் வற் றிப் போகிறது.

கே: ஏனைய கழிவுகளை விட இலத்திரனியல் கழிவு களால் ஏற்படும் சூழல் பாதிப்பு மிகவும் அதிகமெனக் கூறப்படுகிறது?

ப: வெளிநாடுகளில் இலத்திரனியல் கழிவுகளை வீசுவதற்கெனத் தனியான குப்பைத் தொட்டிகள் உள்ளன. சில இலத்திரனியல் பொருள்களில் (கைத் தொலைபேசிகளில் கூட) இலத்திரனி யல் கழிவுகளைப் பொதுவான குப்பைத் தொட்டிக்குள் போடாமல் இலத் திரனியல் கழிவுகளுக்கென அமைக் கப்பட்டுள்ள குப்பைத் தொட்டியில் வீசுங்கள் என அச்சிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் பாவித்த சி.டிக்கள், கணினி உதிரிப்பாகங்கள், தொலைக் காட்சிப் பெட்டிகளின் பழுதடைந்த பாகங்கள் என்பன வீதிகளில் தாராள மாகக் காணப்படுகின்றன. இலத்திரனி யல் கழிவுகள் மிகவும் அபாயகர மானவை. இலத் திரனியல் கழிவுகளை என்ன செய்வது என்பது பற்றிய இறுதித் தீர்மானம் இன்னமும் எடுக்கப்படவில்லை. இலத்திரனியல் கழிவுகள் பற் றிய தரவுகள் பெறப் பட்டு, கழிவகற்றும் நட வடிக்கைகள் பரிசீலிக் கப்பட்டு வருகின்றன. இலத்திரனியல் கழிவுகளை அழிப்பதற்குப் பொருத்தமான இடம் இன்னமும் தெரிவு செய் யப் படவில்லை, இலத்திர னியல் கழிவ கற்றலுக்குப் பொருத்தமான இடம் தெரிவு செய்யப்பட்டதும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

கே: வாகனங்கள் வெளிவிடும் புகையால் ஏற்படும் பாதிப்புகள் பற்றிக் கூறுங்கள்?

ப: யாழ்ப்பாணத்தில் கணிசமான வாகனங்கள் பெற்றோல் மற்றும் டீசலுடன் மண்ணெண்ணெய் கலந்துதான் ஓட்டப்படுகின்றன என்பது குறிப் பிடத்தக்கது. வாகன அனுமதிப் பத்திரம் வழங்கப்படும் போது பச்சை வரி (Green tax) எனப்படும் வாகனப் புகையைப் பரிசோதிப்பதற்கும் சேர்த்தே கட்டணம் அறிவிடப் படுகிறது. இதற்கென 500 ரூபா வுடன் மேலதிகமாக 100 ரூபா என்றே வாகன அனுமதிப்பத்திரத்திற்குக் கட்டணம் அறவிடப்படுகிறது. வாகன அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு முன்னர் வாகனப் புகைபரீட்சிக்கும் நிலை யங்களில் சகல வாகனங்களும் பரி சோதிக்கப்படவேண்டும். வானத்தில் இருந்து வெளி விடப்படும் புகையில் நைதரசன், கந்தகம் என்பன நியம அளவுகளில் இருக்க வேண்டும். இந்தப் பரிசோதனை செய்யாமல் வாகனம் ஓடமுடியாது. ஆனால் யாழ்ப்பாணத்தில் வாகனப்புகை பரிசோதிக்கும் நிலையம் இன்னமும் அமைக்கப்பட வில்லை.

கே: கிருமி நாசினிகளால் ஏற்படும் சூழல் பாதிப்புகள் பற்றிக் கூறுங்கள்?

ப: கிருமிநாசினிகளின் பாவனையால் வளி, நீர், நிலம் என்பன மாசடைகின் றன. மண்ணின் இயற்கை வளம், நீடித்து நிலைக்கும் தன்மை என்பன குறை வடைகின்றன. அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் விவசாயிகள் சிபார்சு செய்யப்பட்ட அளவைவிடக் கூடுதலாகக் கிருமி நாசினிகளைப்



பாவிக்கின்ற னர். இதனால் சூழல் பாதிப்பு மேலும் அதிகமாகிறது.

கே: யாழ்ப்பாணத்தில் நிலத்தடி நீர் வேகமாக மாசடைந்து வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இது பற் றிய தங்கள் கருத்தென்ன?

ப: யாழ்ப்பாணத்தில் தான் களப் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகிறது. இதற்குக் காரணம் விவசாய உள்ளீடுகளின் பாவனைதான். விவசாய உள்ளீடுகளின் கழிவுகளால் நிலத்தடி நீர் மாசடைகிறது. மழை வீழ்ச்சி குறைவதாலும் பிளாஸ்ரிக் பொலித்தீன் போன்றவற்றின் கழிவு களாலும் நிலத்தடி நீர் மீள் நிரப்பப்படு வதில்லை. இதனால் காலநிலையில் மாற்றம் ஏற்படுகிறது. சீரான மழை வீழ்ச்சி இல்லாமல் போகிறது.

யாழ்ப்பாணம் சுண்ணக்கற்பாறை களைக் கொண்ட நிலப் பிரதேசமாகும். சுண்ணக்கற்பாறைகள் மழை நீரால் மீள் நிரப் பப்பட வேண்டும். இல்லாவிட்டால் நிலத்தடிநீர் அற்றுப்போய்விடும். பொறுப்பற்ற முறையில் நீர் வீண் விரயம் செய்யப்படுவதால் நீர் வற்றி சுண் ணக்கற்பாறைகளுக் குக்கிடையேயுள்ள நீர் வில்லைகள் அற்றுப் போகின்றன. இதனால் நிலத்தடி நீர் அற்றுப்போக வாய்ப்புண்டு.

கே: யாழ்ப்பாணத்தில் முன்னர் இயங் கிய தொழிற்சாலைகள் மீளவும ஆரம் பிக்கப்படும் பட்சத்தில் அவற்றால் ஏற் படக்கூடிய பாதிப்புகள் பற்றிய தங்களது கருத்தென்ன?

ப: எந்த ஒரு தொழிற்சாலை ஆரம் பிக்கப்படும்போதும் சுற்றாடல் தாக்க மதிப்பீடு செய்யப்படவேண்டும். ஒரு தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுகளால் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுமானால் நாங்கள் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கமாட்டோம்.

கே: புவி வெப்ப மடை வதற்குரிய காரணிகள் யாவை?

ப: புவி வெப்ப மடை வதற்கு அபிவிருத்தியடைந்த நாடுகளே கூடுதலான காரணம் என்று சொல்லலாம். அங்குள்ள தொழிற்சாலைகளிலிருந்து வெளி யேறும் கழிவுகள், வாழ்க்கை முறை, பாவனைப் பொருள்கள் என்பனவும் புவி வெப்பமடைவதற்கான காரணமாகின்றன. வாழ்க்கை முறைகூட மாறி விட்டது. மாறிவருகிறது.

கே: புவி வெப்பமடைவதைத் தடுக்க என்ன செய்யலாம்?

ப: மரங்களை நடலாம், திண்மக் கழிவு களை மீள்பாவனைக்குட்படுத்தலாம்.

கே: நாம் சிறுவயதில் பார்த்த பல பற வைகள், பூச்சிகள் இன்று அருகிவருகின் றன. இதற்குக் காரணம் என்ன?

ப: இதற்குக் காரணம் விவசாய உள்ளீடுகள்தான். விவசாய இரசாயனங் களின் அதிகரித்த பாவனைதான் இதற்குக் காரணம். விவசாய இரசாயனங் களின் பாவனை காரணமாகப் பூச்சி, புழுக்கள் அழிந்து விடுகின்றன. பூச்சி, புழுக்களைச் சாப்பிட்டு உயிர் வாழும் பறவைகள் மற்றும் விலங்கினங்கள் இதன் காரணமாக அழிந்து வருகின்றன.

கே: ரயர், ரியூப் என்பன எரிக்கப்படு வதால் ஏற்படும் பாதிப்புகள் பற்றிக் கூறுங்கள்?

ப: கந்தகம் சேர் ஒட்சைட்டுக்கள் ரயர், ரியூப் என்பன எரிக்கும்போது வெளிவிடப்படுகின்றன. இதன் காரணமாக வளிமண்டலத்தில் தாக்கம் ஏற்பட்டு அமில மழை பொழிகிறது. இதன் காரணமாக நிலத்தடி நீர் மாசடை கிறது, அமில மழை நீர் நிலத் தினுள் புகு வதால் நிலத்தடி நீரில் பாரிய தாக்கங்கள் ஏற்படுகின்றன.

கே: சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பற்றிக்கூறுங்கள்?

ப: 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கச் சட்டம் 1988 ஆம் ஆண்டும், 2000 ஆம் ஆண்டும் திருத்தப்பட்டது. இந்தச் சட்ட விதிகளின் கீழ் வெதுப் பகங்கள் மற்றும் வாகன பராமரிப்பு நிலையங்கள் என்பனவற்றுக்குச் சுற்றாடல் உரிமம் வழங்கும் அதிகாரம் எமக்கு வழங்கப்பட்டுள்ளது. வாகனங் கள் வெளிவிடும் புகையை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துடன் இணைந்து பரீட்சித்து அந்த இடத்திலேயே (On the Spot) சட்ட நடவடிக்கைக்கு உட் படுத்த முடியும். மருத்துவமனைக் கழிவுகளைப் பரி சோதிப்பதற்கும் எமக்கு அதிகாரமளிக் கப்பட்டுள்ளது.

கே: இவ் விடயம் தொடர் பாக வேறு ஏதா வது தகவல் கூற விரும்புகிறீர்களா?

ப: ஆங்கில எழுத்து நான்கு- (R) கொள்கையைப் பின்பற்றினால் சூழல் மாசடைதலை ஓரளவு கட்டுப்படுத்தலாம். நான்கு (R) என்பது -

Refuse நிராகரித்தல் (பிளாஸ்ரிக், பொலித்தீன் போன்றவற்றை நிராகரித்தல்)

Reduce - குறைத்தல்
Reuse - மீள்பாவனை
Recycle - மீள் சுழற்சி

இந்த நான்கு (R) கொள்கையைப் பின்பற்றினால் ஓரளவு சூழல் மாசடை தலைக் கட்டுப்படுத்தலாம், அத்துடன் இயன்றளவு இயற்கையுடன் ஒட்டியதாக எமது வாழ்க்கை முறையை அமைத் துக்கொள்வதன் மூலமும் சூழல் மாசடை தலைக் கட்டுப்படுத்தலாம்.

******************

செவ்வி கண்டவர்
**ந.பரமேஸ்வரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பக்கடை நடக்கிறது...

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

''வெள்ளிக்கிழமை சாப்பிடுறதுக்கு இலை எண்டாலும் வெட்டலாம்'' எண்டான். அந்த நாலைஞ்சு வாழைக்குட்டி நாப்பது அம்பதாயிட்டுது. ஒரு கிழமைக்கு இரண்டு மூன்று வாழைக்குலை விக்கிறான். தின்னவேலியிலை வாங்கி வைச்ச ஒட்டு மாங்கண்டும் நல்லாய்க் காய்க்கிது. நல்ல ருசி எண்டபடியாலத் தானே மகாலிங்கம் கொழும்புக்கு வாங்கிக் கொண்டு போறவன். மகாலிங்கத்தின்ர குணத்துக்கேற்ற மாதிரி நல்ல பெண் சாதியும், பெரிய வீடும், வடிவான காரும், ஓ.... ஒவ்வொருத்தருக்கும் அவையவையின்ர குணத்துக்குத் தக்க மாதிரித்தான் உத்தியோகங்களும் பெண்சாதியும் வந்து அமைகிறது.

இப்பவெல்லோ உதுகள் காசுக்கும், வடிவுக்கும் கல்யாணம் முடிக்கிறதுகள். உங்கை காசுக்கும் வடிவுக்கும் கலியாணம் முடிச்ச ஆக்களின்ர பொட்டுக்கேடு எங்களுக்குத் தெரியாதே? அப்புலிங்கத்தின்ர பெடிச்சிக்கு அச்சுவேலியில் இருந்து பணக்கார மாப்பிள்ளை ஒண்டு கொண்டு வந்தினம். அவன் பெரிய பணக்காரனாம். கொழும்பிலை உத்தியோகம். நாலைஞ்சு வீடு; இரண்டு கார் எண்டு எல்லோரும் புழுகிக்கொண்டு திரிஞ்சினம். அது போதாதெண்டு அப்புலிங்கமாக்களும் இரண்டு லட்சம் ரூபா சீதனமாகக் குடுத்தினம். கடைசியாகக் கண்டதென்ன? அவன் மூன்று மாதத்திலை பெட்டையை விட்டிட்டு ஓடிட்டான். காசையும் காரையும் பாத்தினமேயொழிய வேறையொண்டையும் பாக்கவில்லை.

ஏன்? சின்னத் தம்பியின்ரை பொடியனும் வடிவான பொம்பிளையெண்டு தானே ஒரு நேர்ஸ் பெட்டையைக் கூட்டிக்கொண்டு வந்தவன். அவளும் அவனை விட்டுட்டு போயிட்டாள். வடிவு- காசு எல்லாம் பாக்கத்தான் வேண்டும் ஓரளவுக்குப் பாக்க வேணும்.

செல்லாச்சி கொஞ்சம் இரணை. இந்தா இந்தத் தேத்தண்ணியைக் குடி. இஞ்சை சட்டம்பியாருடைய பொடியனும் வந்திட்டுது. பள்ளிக்கூடம் போறதுகளை முதல் விட்டுட்டு உனக்குச் சுட்டுத்தாறன்.

சீதனம் வாங்கக் கூடாதெண்டு சொல்லல்லை. தாய்,தேப்பனிட்டை வசதியிருந்து மனமொத்துத் தந்தால் வாங்கலாம். '' பத்தாயிரம் வேணும் பதினையாயிரம் வேணும்'' எண்டு நாண்டு கொண்டு நிண்டால் அவையின்ரை வாழ்க்கை உருப்படாது.

உத்தியோகக்காரர் எடுக்கிற குறைஞ்ச சம்பளத்திலை வாழேலாது தான். எங்கடை மூத்தவளின்ரை மகன் சுதா கொழும்பிலை ஒரு கட்டுமட்டாகச் செலவு செய்து, வீட்டையும் நூறு நூற்றம்பது அனுப்பிக்கொண்டிருந்தான். அவள் தாயும் இஞ்சினை ஒறுத்து உளவிச்சு சீட்டுப்பிடிச்சு அதை எடுத்து பொடியன்ர கலியாணத்தை முடிச்சாள். சுதாவுக்கு இப்ப பேச்சுக்கால் நடக்குதாம். கலியாணம் முடிஞ்சால் கொழும்பிலை நாநூறு ஐநூறு எண்டு அச்சவாரம் கட்டி ஒரு வீடு எடுக்க வேணும். கதிரை மேசையெண்டு சாமான் வாங்க -நகை நட்டுச் செய்ய எப்பிடியெண்டு போனாலும் ஒரு பத்தாயிரமெண்டாலும் வேண்டுமே? அவனும் உழைச்சதையெல்லாம் தாயிட்டையும் சகோதரியிட்டையும் குடுத்திட்டான். ஓரிடத்துக்குப் போறதெண்டால் சீதனம் வாங்கத்தான் வேணும். அவனுக்கு ஒரு நல்ல காலம் இருந்து பணக்கார இடம் சந்தித்தால் சீதனத்தைக்கூடக் குறைய வாங்கலாம். என்னை மாதிரி உன்னை மாதிரி ஒரு வறுமைப்பட்ட குடும்பத்திலை சம்மந்தம் செய்யிறதெண்டால் என்ன மாதிரிக் கரைச்சல் படுத்தி சீதனம் வாங்கிறது? கிடைச்சதை வைச்சுக் கொண்டு மட்டுமட்டாக வாழுறதுதான்.

''உதார் உதாலை போறது? ஓ...'' சுதாவோ.. கொழும்பாலை வந்திட்டான் போலை கிடக்குது... அவனுக்கு நூறு வயதடி செல்லாச்சி. அவனைப்பற்றிக் கதைக்க வந்திட்டான்.

ஓ அவர் இப்ப வளர்ந்து பெரிய மாப்பிள்ளையாகிட்டார். என்னோடை கதைக்க வெட்கம். இஞ்சினை வந்த நேரம் போன நேரம் 'என்னணை ஆச்சி' எண்டொரு சொல்லு. வந்து அஞ்சாறு நாள் நிண்டு ஊர் உலாத்துவான். போகைக்குள்ளே மட்டும் 'போட்டு வாறன் ஆச்சி'எண்டு சொல்லுவான்.அவனுக்கு நான் தானே கதிர்காமம், நயினாதீவு, திருக் கேதீஸ்வரம் எல்லாம் கூட்டிக்கொண்டு போய்க் காட்டினது.

''என்னடி உமா? இவளைத் தெரியுமே செல்லாச்சி? மருமேன் ராசற்றை மூத்தமகள் உமா இவள்தான்.

சுதா அண்ணை வந்திருக்கிறாராம். அப்பம் வாங்கி வரட்டாமோடி? ஏன் அவைகளுக்கென்ன வந்து கேக்கிறத்துக்கு? அவன் கொழும்பிலை உத்தியோகமெண்டால் இந்த வீட்டைவரக் கூடாதோ?

பாரடி செல்லாச்சி குமரனுக்கு காற்சட்டை சேட்டுப் போட்ட உடனை கிழவியோடை கதைக்க வெட்கமாம். அவள் மூத்தவளின்ர மகனைத் தான் சொல்லுறன். அப்பம் வாங்கியரச் சொல்லி உமாவை அனுப்பியிருக்கிறாளுகள். உமா இஞ்சை அப்பமும் இல்லை ஒண்டும் இல்லையெண்டு போய்ச் சொல்லடி.

''அப்பத்திற்கு காசு தருகினமோ?'' இஞ்சை அப்பம் விக்கிறதில்லையெண்டு சொல்லடி. காசாம் காசு. அவையின்ர காசு ஆருக்கு வேணும்? உவளுகள் எப்ப காசைக் கண்டவளுகள்?

உங்கை காசை வைச்சுக் கொண்டு துள்ளினவை எல்லாம் எப்படி இருக்கினம் எண்டு தெரியும். காசு கொஞ்சம் கிடைச்ச உடனை அவள் பொன்னியும் வள்ளியும் குதிச்ச குதியென்ன! ஆடின ஆட்டமென்ன! இண்டைக்கு என்ன நிலையில இருக்கினம்? இதெல்லாம் சுவாமியெல்லே எழுதி வைச்சிருப்பார்?

அவள் பொன்னிக்கு அப்பவும் சொன்னனான். சீட்டைக் கீட்டைப் பிடிச்சு காசு சேர்க்க வேணுமெண்டு. கேட்டாளுகளே? இப்ப அங்காலை ஒரு நூறு இஞ்சாலை ஒரு அம்பது எண்டு ஓடியோடித் திரியினம். கையிலை வரயிக்கிலை நாலு காசு சேர்த்தெல்லோ வைக்க வேணும். அல்லது அவர் முருகாத்தை மாதிரி பெரிய மீனும் முழுத்தேங்காயும் வாங்கித் திண்டிட்டு, அடுத்தநாள் அவை ஒரு தேத்தண்ணி தருவினமோ ''இவை ஒரேப்பன் சோறு தருவினமோ'' எண்டு கை நீட்டிக் கொண்டு திரியிறதே சீ... வெட்கம் கெட்ட வாழ்க்கை.

''உமா கோவிச்சுக்கொண்டு போறாளோ?'' போகட்டும். உவைக்கென்ன நான் பயமோ? முருகாத்தை வேணுமெண்டால் பயப்பிடட்டும். அவையட்டை சோத்துக்கும் தேத்தண்ணிக்கும் போறபடியால் முருகாத்தை பயப்பிடுவர். எனக்கென்ன பயம்? என்ர அப்பக் கடை நடக்கிற வரைக்கும் நான் ஏன் அவையிவையிட்டைப் போகப் போறன்.

செல்லாச்சி கதையோட கதையாக உன்ரை கடைசிப் பொடியனுக்கும் நேர காலத்தோடை ஒரு கல்யாணத்தை முடிச்சு வைச்சிடு. அது நல்லது. ஏன் தெரியுமோ? இந்தக் காலம் எந்த நேரம் என்ன நடக்குமெண்டு தெரியாது. பிள்ளைகளுக்குப் பசிவந்த உடனை இடியப்பமோ புட்டோ கொடுக்கிறம். இல்லையெண்டால் கடைவழியை போய்க் கண்டதைக் கிண்டதைத் தின்னுங்கள். கலியாணமும் அது மாதிரித்தான். நாங்களாப் பார்த்து ஒவ்வொண்டையும் முடிச்சு வைக்காட்டி, அதுகள் சாதி, சமயம் பாராமல் ஒவ்வொண்டைக் கொளுவின பிறகு கவலைப்படக்கூடாது.

எனக்கும் மூத்தவளின்ர கலியாணம் ஒரு பிரச்சினையில்லாமல் முடிஞ்சுது. இரண்டாவது பெட்டை நல்லம்மாவை முத்துராசு பார்க்க வந்தபோது ''என்ன தருவியள்?'' எண்டு கேட்டது மனிசன். ''ஒரு பெம்பிளைதான் தருவம்'' எண்டு சொல்லி நல்லம்மாவைக் குடுத்தனாங்கள். நாலு பரப்புக் காணியோடை மூண்டாவது பெட்டையை றைவர் ராசாவுக்கு முடிச்சுக் குடுத்தன்.

அப்ப செல்லாச்சி நீ இந்தா.... அப்பத்தைக் கொண்டு போ. நான் இவன் சுதாவுக்கு அப்பத்தைக் குடுத்துட்டு வாறன். என்ன இருந்தாலும் மூத்தவளின்ரை மகன் எல்லே. அவன் என்னோடை கதையாட்டி எனக்கென்ன? கோபத்திலை அப்பத்துக்கு வந்த உமாவையும் ஏசிப்போட்டன்.

''இந்தாடா தம்பி சுதா. இந்தா அப்பம், உனக்கெண்டு சட்டியப்பமும் சுட்டு வைச்சிருக்கிறன். நீ இப்ப கொழும்புக்குப் போன பிறகு என்னோடை கதைக்க வெக்கம் என்ன? அ..... நான் சொன்னதை ஒண்டும் மனதிலை வைச்சிருக்காதை. நாங்கள் கிழடு கட்டைகள், சாகப்போறனாங்கள். நீங்கள் சந்தோஷமாயிக்க வேணும்''

''என்னைப் பற்றிக் கேக்கிறியே?''

''ஓ .... என்ரை அப்பக் கடை பிழையில்லாமல் நடக்குது. அப்பக்கடை நடக்கிற வரைக்கும் என்ர சீவியமும் நல்லாப் போகும். நான் வாறன் கோயிலுக்குப் போக வேணும்.

(நன்றி:- நிர்வாணம், சிறுகதைத்தொகுதி)

## சொற்சிலம்பம் - போட்டி இல: 64

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | | 5 | 6 |
| 7 | | | | | 8 | | |
| | 9 | | | 10 | | | |
| 11 | | | 12 | | | 13 | |
| 14 | | | | 15 | 16 | | |
| | | | 17 | | | | 18 |
| 19 | | 20 | | | 21 | 22 | |
| 23 | | | | 24 | | | |

அனுப்புபவர் பெயர்:.............................................

விலாசம்:.............................................

.............................................

கையொப்பம்:.............................................

### இடமிருந்து வலம்

1. சேர்ந்து வாழுதல்/ பழக்க தோஷம்.
5. திறப்பு.
7. உயிரினம். ஆனால் விலங்கு அல்ல.
8. சுவர்.
9. உரையாடல்.
11. திரவத் தன்மை கொஞ்சம் தடித்தால் வருவது.
12. செல்வம்.
13. மமதையின் பிறப்பிடம் இந்த நினைப்புத்தான்.
14. வீட்டின் முன்புறம் அமைந்திருப்பது.
15. திட்டு.
17. இது பாரமானது. ஆனால் ஆடிக்காற்றில் இதுவும் பறக்குமாமே!
19. வலு மிக்கவன்.
21. எடை/நிறை.
23. பெண்களின் தேசிய விளையாட்டுக்களில் ஒன்று. நடன வகைக்குள்ளும் சேர்க்கலாம்.
24. ஊர்வன இனத்தைச் சேர்ந்த விலங்கு.

### மேலிருந்து கீழ்

1. எந்நேரமும்.
2. கர்ணன் பிறந்தது இந்த அணி கலன்களுடனாமே!
3. ஏழு நாள்கள்.
4. உழைத்துப் பெறு.
5. குலம்/ சாதனை செய் என்பதையும் குறிக்கும்.
6. கதாநாயகனுக்கு எதிரி இவன்.
8. வீடு.
10. ஒரு வகைப் பாத்திரம்.
11. அரைவாசி.
13. பாய்.
16. உணவுக் கால்வாயில் நடைபெறும் தொழிற்பாடு.
17 ஆணுமல்ல; பெண்ணுமல்ல.
18. இதுவும் ஒரு பாத்திர வகையே.
19. பிரி.
20. கடவுள்.
22. மேல் நாட்டுக் குடிவகை.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப் படும். அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 64**
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு முன்னர் (17.06.2009) திகதிக்கு முன்னர் கிடைக்கத் தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல. 64 க்கான விடைகள் மற்றும் போட்டியில் வெற்றிபெற்றவர்களது விவரம் 21.06.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ,மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 62இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)விசாகம் (4) அதிக (7)வட்டி (8)ஆற்றல் (9)காடு (10)தும்பு (11) ரம்பம் (13)தகாத (14)கபிலம் (16)இல் (17)பொன் (18)பால் (19)சடுகுடு (21)விலைவாசி (22)விகுதி

**மேலிருந்து கீழ்**

(1)விவகாரம் (2)சாட்டும் (3)கடி (4)அற்புதம் (5)திற (6)கல்லாதவன் (8)ஆம் (10)தும்பி (12)பகல் (15)லட்டு (16)இல்லை (17)பொடுகு (18)பாவி (19)சசி (20)குவி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 62இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** தேனுகா செல்வரத்தினம்,
எழுகோயில் வீதி,ஏழாலை மத்தி,
ஏழாலை.

**2 ஆம் பரிசு** நமசிவாயம் வைகுந்தன்,
ஸ்ரீ வாலாம்பிகை புத்தகசாலை,
இல:422, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு** ம.மேரிஜொய்சா,
பதுவளை,பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

பரிசில் பெறுவோருக்கான பணம் காலக்கிரமத்தில் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) ஜீ.ஜீவலக்சன்,
நடேஸ்வராக்கனிஷ்ட வித்தியாலயம்,
காங்கேசன்துறை.

(2) ஜெ.ஜானகி,
இல:104/1, சிவப்பிரகாசம் வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

(3) கே.விஜித்திரா,
ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

(4) திருமதி சா.ஜெயபாலன்,
புலோலி மெ.மி.த.க பாடசாலை,
புலோலி.

(5) ச.பங்கஜா,
விக்ரோறியாக் கல்லூரி,
சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடும் நடிகர்களை உயரத்தில் இருத்துவேன் என்பதை காட்டியுள்ளார். நடிகரும் பெரும்பலூரின் புதிய எம்.பியுமான நெப்போலியன் துணை அமைச்சரானது இந்தச் செய்தியை

# மன்மோகன்சிங் என்ற மந்திரம் ஊழல்வாதிகளுடன் நடத்தும் போராட்டம்

இந்தியாவின் புதிய அரசு மீது, முன் எப்போதும் இல்லாத எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. காங்கிரஸ் கட்சி கனவிலும் காணாத மன்மோகன்சிங் அலை இந்தத் தேர்தலில் வீசியது பழங்கதை. இப்போது பிரதமரிடம் இருந்து ஊழல் அற்ற ஓர் ஆட்சி பற்றிய எதிர்பார்ப்பு மேலோங்கியிருப்பதே புதிய கதை.



இத்தேர்தலில் சிறுபான்மையினரின் வாக்குகள் சோனியா- ராகுல் குடும்பத்துக்காக கிடைத்ததை விட மன்மோகன்சிங் என்ற மந்திரத்துக்காகவே அதிகம் கிடைத்தன. இதனால் காங்கிரஸ் கட்சி அரியணை ஏற வழி பிறந்தது. இந்த வாக்குகள் படித்த நகர்ப்புற இந்தியர்களின் வாக்குகள் ஆகும். எனவே, இவர்கள் அரசின் செயற்பாட்டை கூர்ந்து கவனிப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. எனவே, பிரதமர் மீது பெரும் பொறுப்பு விழுந்துள்ளது எனலாம். பிரதமரும் இந்த வாக்காளரைப் போலவே மத்திய தர வர்க்க முன்னாள் அரசு ஊழியர் என்பதால் இவர்களது எதிர்பார்ப்பு அவருக்குத் தெளிவாகப் புரிந்திருக்கிறது.

இதனாலேயே அமைச்சரவையில் ஊழல்வாதிகளை சேர்க்க மறுத்து அவர் நடத்தும் போராட்டம் வெளிக்கிளம்பியுள்ளது. தி.மு.கவின் டி.ஆர். பாலு தனது தொகுதியில் கொழுத்த பெரும்பான்மையுடன் வென்றிருக்கலாம். ஆனால், கடந்த ஆட்சியில் அவர் செய்த ஊழல்களை அவரது தொகுதி மக்கள் அறியாவிட்டாலும் மன்மோகன் சிங் நன்கு அறிவார்.

எனவே, மக்களிடம் தப்பினாலும் மன்மோகனிடம் தப்பமுடியாது. தி.மு.கவினருக்கு எத்தனை அமைச்சுகள் கொடுத்தாலும் பாலுவுக்கு கொடுக்க முடியாது என்ற பிரதமரின் பிடிவாதம் இதையே காட்டியது. இவ்வாறே கடந்த ஆட்சியில் விரும்பியபடி ஆடிய ஊழல் பெருச்சாளிகளான லல்லுபிரசாத் மற்றும் சிபுசேரன் ஆகியோரை பிரதமர் ஒதுக்கியுள்ளார். லல்லுபிரசாத் சோனியாவின் அபிமானி. எனினும், அவரால் அமைச்சைப் பெறமுடியவில்லை. கடந்த ஆட்சியில் 24 எம்.பிக்களைக் கொண்டு கோலோச்சிய இந்த லல்லு இந்தத் தேர்தலில் முட்டாள்தனமாக காங்கிரஸின் கூட்டணியை முறித்துக்கொண்டார். இதனால், 4 இடங்களே அவருக்குக் கிடைத்தன. எனவே, அவருக்கு அமைச்சரவையில் இடம் கொடுக்கும் நிர்ப்பந்தம் எழவில்லை. சிபுசேரன் இரண்டு இடங்களை பெற்றார். அவரையும் பிரதமர் ஏறெடுத்துப்பார்க்கவில்லை. கொலை, ஆட்கடத்தல் எனப் பல குற்றச்சாட்டுகளை நீதிமன்றில் எதிர்கொண்டு சிறையும் சென்ற சிபுசேரன் சென்ற ஆட்சியில் ஒரு கறையாகவே விளங்கினார். ஆனால், இந்தத் தடவை பிரதமரின் கட்சி தனித்தே கணிசமான இடங்களை வென்றதால் குற்றவாளிகளை அமைச்சரவையிலிருந்து தூரமாக்கும் மன்மோகன்சிங்கின் கனவு நனவாகியுள்ளது.


காங்கிரஸ் கட்சிக்குள்ளேயும் திறமைசாலிகளையே பிரதமர் அமைச்சர்களாக ஏற்றுக் கொண்டுள்ளார். பதவியே குறி என்று ஆளாய்ப்பறந்த மூத்த தலைவர் அர்ஜுன் சிங் ஓரங்கட்டப்பட்டது இதையே சுட்டி நிற்கிறது. சோனியா குடும்ப நண்பரான கப்டன் சதிஷ் சர்மாவும் கைவிடப்பட்டுள்ளார்.

கட்சி தாவுபவர்களுக்கும் பெரிதாக இடமளிக்கப்படவில்லை. அத்துடன் இந்த அமைச்சரவையில் தலித்களுக்கு மிகப்பெரிய இடம் அளிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை அந்தஸ்துள்ள 30 அமைச்சர்களில் 5 பேர் தலித்கள். திருமதி மீராகுமார் (பீகார் - பாபுஜெக ஜீவன் ராமனின் புதல்வி) குமாரி சைலஜா (ஹரியானா), சுஷில் குமார் ஷிண்டே (மகாராஷ்டிரா), முகுல் வாஸ்னிக் (மகாராஷ்டிரா), மல்லிகார்ஜுன் கார்கே (கர்நாடகா) ஆகியோர் பரவலாக நாடு முழுவதுமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். தலித்களை இவ்வாறு முக்கியத்துவப்படுத்தியது மாயாவதியை எதிர்கொள்ளவே என்பது தெளிவு. இவ்வாறே கர்நாடகாவில் பி.ஜே.பியின் அட்டகாசத்தை அடக்க அங்கு 3 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர். எனினும், 77 வயதான கிருஷ்ணா, உலகம் முழுவதும் ஓடியாடி வேலை செய்ய வேண்டிய இந்திய வெளியுறவு அமைச்சர் பதவிக்கு உடல் அளவில் தகுதியானவரா என்பது கேள்வியே.

உள்துறை அமைச்சு மீண்டும் சிதம்பரத்திடம் வந்துள்ளது. தேர்தல் காலத்தில் பயங்கரவாத தாக்குதல் நடந்தால் காங்கிரஸுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டிருக்கும். அதை தவிர்ப்பதில் சிதம்பரம் பெரும் பங்கு வகித்தார். எனினும், அவரது சிவகெங்கை தொகுதியல் அவர் தோற்றுப்போனாலும் அதை அரச யந்திரம் ஊழல் மூலம் வெற்றியாக மாற்றியது என குற்றச்சாட்டுகள் உள்ளன. சிவகெங்கையை சிதம்பரம் கவனிப்பதில்லை என்ற குற்றச்சாட்டு உண்மையே.

மூத்த அமைச்சரான பிரணாப் முகர்ஜி நிதியமைச்சராகியுள்ளார். தமிழகத்தின் பங்கு புதிய அமைச்சரவையில் சுருங்கிவிட்டது. தமிழக காங்கிரஸில் இருந்து அமைச்சராகக்கூடிய மணிசங்கர் ஐயர், இளங்கோவன், பிரபு, தங்கபாலு ஆகிய முன்னாள் அமைச்சர்கள் தத்தம் தொகுதிகளில் தோல்வியடைந்தது இதற்கு முக்கிய காரணமாகும். ஜெயலலிதாவின் சொந்த வீடு போன்ற மதுரை பெரியகுளம் தொகுதியில் இரண்டாவது தடவையாக வென்று ஜெயலலிதாவை அதிர்ச்சிக்குள்ளாக்கிய காங்கிரஸின் ஜே.எம்.ஹாருண் மற்றும் முன்னாள் தமிழக காங்கிரஸ் தலைவர் கிருஷ்ணசாமி ஆகியோர் இணை அமைச்சராகக் கூடும் என எதிர்பார்க்கப்பட்டபோதும் அது நடக்கவில்லை.

கடந்த தடவை காங்கிரஸ் ஆட்சியில் பங்கு கிடைக்காத பல மாநிலங்களுக்கு இம்முறை பிரதிநிதித்துவம் வழங்கியதாலும், தமிழக காங்கிரஸின் பலம் லோக்சபாவில் 10 இல் இருந்து 8 ஆக மாறியதாலும் தமிழக காங்கிரஸாரின் அமைச்சர் அபிலாஷைக்கு வெட்டு விழுந்துள்ளது. சென்ற முறையை விட இம்முறை காங்கிரஸுக்குள் பதவிப் போட்டி தீவிரமடைந்ததும் மற்றொரு காரணம். மேலும் சோனியா - ராகுல் மட்டுமன்றி இம்முறை அமைச்சர் தெரிவில் பிரதமரும் துணிவாக நுழைந்ததால் பல ஊழல் பெருச்சாளிகளான காங்கிரஸ் தலைவர்களுக்கு கல்தா கொடுக்கப்பட்டுள்ளது. லோக்சபா உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவி பெறுவதில் முன்னுரிமை கிடைத்துள்ளது. வழக்கத்துக்கு மாறாக சோனியா குடும்ப அடிவருடிகளை ராஜ்ய சபா எம்.பியாக்கிப் பின்கதவால் அமைச்சர் பதவி கொடுக்கும் கைங்கரியம் இம்முறை மன்மோகனால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.




மஹாராஷ்டிரா மாநிலத்துக்கே எல்லா மாநிலங்களையும் விட அதிக அமைச்சர்கள் கிடைத்துள்ளனர். சோனியா காந்தியின் பரமவைரியும் இப்போதைக்குத் தோழராக இருப்பவருமான சரத்பவாரின் செல்வாக்கை ஒடுக்கவே இந்நடவடிக்கை எனக் கருதப்படுகிறது. மேலும் இவ்வருட இறுதியில் மஹாராஷ்டிராவில் சட்டசபைத் தேர்தல் வர இருப்பதால் கட்சியைப் பலப்படுத்தவும் சோனியா முயன்றுள்ளார் எனலாம்.

## தி.மு.கவின் அமைச்சர் நியமனம்

- எஸ்.சுரேந்திரஜித் -

ஒருவாறு இழுபறி முடிந்து முடிவுக்கு வந்துள்ளது. பாட்டாளி மக்கள் கட்சியின் கொட்டத்தை அடக்க வடக்கு தமிழகத்தின் தொகுதிகளில் வென்ற வன்னியர்கள் இருவருக்கு தி.மு.க துணை அமைச்சர் பதவி கொடுத்துள்ளது. திருவண்ணாமலை எம்.பி ஜகத்ரட்சகன், தர்மபுரி எம்.பி தாமரைச்செல்வன் ஆகிய இரு வன்னியர்களையும் கொண்டு பா.ம.கவை ஒடுக்கிவிடுவதே கலைஞரின் நோக்கமாகும். இத்தேர்தலில் தி.மு.க சார்பில் இரு நடிகர்கள் எம்.பியாகினர். திரையுலகம் தி.மு.கவுக்கு விரோதமாக இலங்கைப் பிரச்சினையில் நடந்துகொண்டதால் ஆத்திரமுற்ற கலைஞர் தனக்கு ஜால்ரா சொல்லவே. கடந்த காலங்களில் பாக்யராஜ், டி.ராஜேந்தர், ராதிகா, சரத்குமார் என தி.மு.க வழியால் எம்.பியான சகலரும் கடைசியில் கலைஞருடன் மனங்கசந்து வெளியேறுவது தான் வழக்கம். நெப்போலியன் இதற்கு விதிவிலக்கா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். எவ்வாறாயினும் கடந்த ஆட்சியை விட தூய்மையான ஆட்சியை மன்மோகன் சிங் வழங்குவார் என பல மட்டங்களிலும் எதிர்பார்ப்பு உள்ளது. இதுதவிர கடந்த ஆட்சியில் அவரது பொருளாதார சீர்திருத்த பாய்ச்சலுக்கு தடைக்கல்லாக இருந்த இடதுசாரிகளின் ஆதரவு இன்றி மன்மோகன் ஆட்சி செய்ய மக்கள் தீர்ப்பளித்துள்ளனர்.


ஸ்திரமான, சுபீட்சத்துக்கு நாட்டை இட்டுச்செல்லும் ஆட்சியே மக்கள் மனதில் இருந்துள்ளது. காங்கிரஸ் கட்சி இம்முறை கூட்டணிக் கட்சிகளுடன் கறாராக நடந்துகொண்டது. லோக்சபாவில் கட்சியின் ஆசனங்கள் 60 ஆல் அதிகரித்தது இதற்கு காரணமாயினும் ராஜ்யசபாவில் காங்கிரஸுக்கு பெரும்பான்மை போதாது. மொத்த 230 இடங்களில் 80 தான் காங்கிரஸ் கூட்டணி வசமுள்ளது. எனவே 35 எம்.பிகளின் ஆதரவு இன்னும் தேவை என்பதால் லல்லுபிரசாத, முலாயம் ஆகியோரையும் சாந்தப்படுத்தவேண்டும். ஆனால், இதற்காக அமைச்சர் பதவிகளை இவர்கள் கேட்கின்றனர். ஏற்கனவே காங்கிரஸும் தி.மு.கவும், காங்கிரஸும் மம்தாவும் என அமைச்சு பதவிகளை பங்கு போடுவதில் குத்துவெட்டு நடக்கையில் இவர்களுக்கு எங்கிருந்து அமைச்சர் பதவி பெறுவது என்ற பிரச்சினை உள்ளது.

இந்திய அரசமைப்புச் சட்டபடி மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் 15 சதவீதத்தை மட்டுமே அமைச்சர்களாக நியமிக்கலாம். இலங்கையில் போன்று ஆளும் கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் அமைச்சர்களாக முடியாது. எனவே, கடந்த தடவை இருந்ததைவிட கடுமையான சிக்கலுக்குள் காங்கிரஸ் உள்ளது எனலாம். இதிலிருந்து தப்ப ராஜ்யசபா எம்.பிக்களை வென்றாக வேண்டும்.

இதற்கு இந்த வருட இறுதியில் மஹாராஷ்டிரா, அடுத்த வருட நடுப்பகுதியில் பீஹார் ஆகிய மாநிலங்களில் நடக்கவுள்ள சட்டசபைத் தேர்தல்களில் வென்றாக வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




அமரர் சிவஸ்ரீ
## கணபதிப்பிள்ளை அழகேந்திரம்

(ஓய்வுபெற்ற இ.போ.ச.உத்தியோகத்தர் - யாழ்.சாலை)

*திதி: பூரணை (07.06.2009)*

பாரினில் பாரி வள்ளல் போல் வாழ்ந்திட்ட அழகனே!
பாமர மக்களுக்குப் பணிபுரிமை மீந்த வீரனே - மேலாம்
பேசும் பொற்செல்வம் ஈசன் தாள் என்றாயே - நல்ல
பாசமும் பற்றும் நீங்கி மாண்புடைத் தெய்வ மானாயே ஐயா!

அன்புசால்
குடும்பத்தினர்.

'திருப்பரங்குன்றம்',
பிரான்பற்று, பண்டத்தரிப்பு.

## செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 7

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் புண்ணிய கிராம வேலைத் திட்டத்தைச் செயல்படுத்தும் ஒரு நாள் நற்பண்பு செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு பன்னாலை சிவபூதராயர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், வலி.வடக்கு பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் பிரதம விருந்தினராகவும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கணக்காளர் ஜி.காண்டீபன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார். (204)

## உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 7

உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் 2008ஆம் ஆண்டில் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது.

தகுதியுடைய மாணவர்களை எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி நிறுவன பதிவாளருடன் தொடர்பு கொள்ளுமாறு நிறுவனப் பணிப்பாளர் க. கதிரமலை அறிவித்துள்ளார். (204)

உறுதியும் நம்பிக்கையும் பெற்ற
விவசாய மற்றும் மரவேலை உபகரணங்கள்



வியாபார தொடர்புகளுக்கு:
KAMSON HARDWARE
Direct Importers
235, Old Moor Street, Colombo - 12
Tel: 2435413, 2332834, 2337353

## காணவில்லை

அழகிய சிறிய பிறவுண் நிற பொமரேனியன் நாயைக் காணவில்லை. அதை கண்டவர்கள் கீழ்க் கண்ட முகவரியில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

ப.சிவலிங்கம்
78/TC, கஸ்தூரியார் லேன், யாழ்ப்பாணம். (85905)

# மரண அறிவித்தல்கள்

## கதிர்காமு கந்தசாமி



துன்னாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு கந்தசாமி (05.06.2009) வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான முருகேசு, ஆறுமுகம் மற்றும் கற்பகம் ஆகியோரின் சகோதரரும் சீதாலட்சுமி, சாரதா (கனடா), விஜயலட்சுமி (கனடா), ஸ்ரீரங்கநாதன் (கனடா), ரவீந்திரன் (கனடா), வசந்தகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராசா (ஆய்வுகூட உதவியாளர், சாவ.இந்துக்கல்லூரி), செல்வநேசன் (கனடா), மோகனதாஸ் (கனடா), சறோஜினி (கனடா), ஜெர்மினா (கனடா), ரதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் கௌரி (கனடா), கௌரிதாசன் (கனடா), உமாசுதன் (கனடா), விஜயஸ்ரீ (கனடா), சுதாகிரி (கனடா), அமுதினி (கனடா) ஆகியோரின் பாசமிகு பெரிய தகப்பனாரும் டியூட்ஸ் (கனடா), டீலான் (கனடா), டிலூசி (கனடா), நிகிர்தன் (கனடா), தர்ச்சனா, சாருபாலன், அர்ச்சனா, அர்ச்சுதன், ஜெனீஸ் (கனடா), டெனிஸ் (கனடா), சுரேன் (கனடா), சுரேக்கா (கனடா), ஜாதவன் (கனடா), ஜஸ்விதா (கனடா), செனிஸ்ரன் (கனடா), ரெனுஸ்கா (கனடா), ஸ்ருதி (கனடா), ஆஷ்லி (கனடா), சுவேதா (கனடா), ப்ரீத்தா (கனடா), அகிஷா (கனடா), சுவின்ரன் (கனடா), அஷ்மிதா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.06.2009) திங்கட்கிழமை கனடாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பெரியபாதி, மகள்
வதிரி, கரவெட்டி. சீதாலட்சுமி (சந்திரா). (C/556087)

## திருமதி திருநாவுக்கரசு பராசக்தி



ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு பராசக்தி 05.06.2009 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம்- அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பையா- பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திருநாவுக்கரசின் அன்பு மனைவியும் மகேந்திரன் (முன்னாள் யாழ் கூட்டுறவுச் சங்க ஊழியர்), இந்திராணி, செல்வராணி, காலஞ்சென்ற ஜெயராணி,மற்றும் விஜயராணி (ஆசிரியை, துரையப்பா மகா வித்தியாலயம் ), ஜீவராணி, சுரேந்திரன் (கிறீஸ்) ஆகியோரின் அன்புத்தாயும். பிறேமநாயகி (இந்தியா), தேவராசா, பாலசுப்பிரமணியம், நிமலராஜா, சிறிதரன்(சிறி), சாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் பாலசிங்கம், நாகேஸ்வரி, புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், புனிதம், காலஞ்சென்ற கனகசூரியர்,மற்றும் தவராஜசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துணியும், தர்சிகா (லண்டன்), மயூரன் (இந்தியா), மகிந்தன் (இந்தியா), தயாழினி (ஜேர்மனி), தயாளன் (யாழ் எலக்ரோனிக்), தர்மிலன், தாட்சாயினி,தனுசாயினி, சதீஸ் (பிரான்ஸ்), சகிலா, சத்தியா, சர்மிளா (லண்டன்), சாலினி, சாருஜன், நிறோஷஜ், சரண்யா, வினோயினி (லண்டன்), லிதர்சன், கஜிந்தன், அஜிதா, சுஜிதா, சுகன்யா, சுஜந்தன், சிந்துஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.06.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இல.94/4, மகேந்திரன் (மகன்),
ஈச்சமோட்டை, மருமக்கள்மார்.
யாழ்ப்பாணம். (சி/558876)

## மெய்கண்டான் ம.வியின் ஸ்தாபகர் நினைவாக நூல்

யாழ்ப்பாணம், ஜூன் 7

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் ஸ்தாபகர் ஏழூர் இராஜரட்ணத்தின் அறுபதாவது நினைவு நாளை ஒட்டி நூல் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி நூல் வெளியிடப்படவுள்ளதால் பாடசாலையின் பழைய மாணவர்கள் அதிபருடன் தொடர்புகொண்டு தகவல்களைத் தந்துதவுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(204)

# மரண அறிவித்தல்

## சண்முகநாதன் விஜயநாதன் (விஜயன்)



பிறவுண் வீதி, நீராவியடியைப் பிறப்பிடமாகவும் கனடா Toronto ஐ வதிவிடமாகவும் கொண்ட சண்முகநாதன் விஜயநாதன் (05.06.2009) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விஜயரட்ணம் சண்முகநாதன் மற்றும் தெய்வானைப்பிள்ளை (கனடா), தம்பதியரின் அன்பு மகனும் இருபாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற அருணாச்சலம் உலகநாதன் மற்றும் கெங்காதேவி தம்பதியரின் அன்பு மருமகனும் உஷாதேவியின் பாச மிகு கணவரும் விஷ்ணிகா, சரணிகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திரபிரேமா (தாதிய உத்தியோகத்தர் - யாழ்.போதனா வைத்தியசாலை), காலஞ்சென்ற சந்திரகாந்தன் மற்றும் லோகேஸ்வரன் (அவுஸ்திரேலியா), தில்லேஸ்வரன், Dr.நிசாளினி (பொது வைத்தியசாலை - திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவானந்தன் (கிராம சேவையாளர் - யாழ்.பிரதேச செயலகம்), ஸ்ரீராணி (காந்தன் Computer System), சந்திரிகா (அவுஸ்திரேலியா), சுபோதினி (யாழ்.மாநகரசபை) Dr.சேந்தன் (பொது வைத்தியசாலை - திருகோணமலை) மற்றும் கெங்காநாதன் (பாபு), கைலைநாதன் (நோர்வே), காசிநாதன், கதிர்காமநாதன் (கனடா), உமாதேவி, உமிலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (08.06.2009) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இருபாலைச் சந்தி, கோப்பாய். குடும்பத்தினர். (85908)


# யாழ்ப்பாணத்திற்கு பிறவிப் பலசாலிகளான விநியோகஸ்தர்கள் தேவை

பிறவிப் பலசாலியென்ற நாமத்தை தன்னகத்தே கொண்டுள்ள சியெட் ஸ்ரீலங்கா நிறுவனமானது பல்வேறு உயர்தர டயர்களைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. 3.5 பில்லியன் ரூபாவை வருடாந்தப் புரள்வாகக் கொண்டுள்ள சியெட் ஸ்ரீலங்கா நிறுவனம் கார், வான் ரேடியல் டயர்களை உள்நாட்டில் தயாரிப்பதற்காக அண்மையில் 350 மில்லியன் ரூபாவை முதலீடு செய்துள்ளது. சியெட் ஸ்ரீலங்கா நிறுவனம் **cross ply** டயர் தயாரிப்புத் துறையில் முன்னணியில் திகழ்ந்து வருகிறது.

நிறுவனத்தின் விரிவாக்கல் திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் தனது விநியோக நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்கு சியெட் ஸ்ரீலங்கா திட்டமிட்டுள்ளது. அதன் கீழ் நாடளாவிய ரீதியில் **மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி டயர்களை** விநியோகிப்பதற்கான தனது விநியோக வலைப்பின்னலை மிகப் பாரிய அளவில் விஸ்தரிப்பதற்கு அந்நிறுவனம் தீர்மானித்துள்ளது.

- நிலையான நிதி நிலைமை
- களஞ்சிய வசதி
- வாகன வசதி

ஆகிய தகுதிகளை நீங்கள் கொண்டிருந்தால் இலங்கையில் துரிதமாக வளர்ச்சியடைந்துவரும் வியாபாரத்தில் பங்குதாரராகும் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளலாம். சந்தையில் **cross ply** டயர் விற்பனையில் 50% த்திற்கும் மேற்பட்ட பங்கினைக் கொண்டு முன்னணியில் திகழும் சியெட் நிறுவனமானது ஐக்கிய அரபு இராச்சியம், சிங்கப்பூர், பிலிப்பீன்ஸ், எகிப்து, ஆபிரிக்கா மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுக்கான முக்கிய டயர் ஏற்றுமதியாளராகவும் விளங்குகிறது.

உங்கள் பாதையின் முன்னிருக்கும் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய பிறவிப் பலசாலியாக நீங்கள் இருப்பின் உங்கள் விண்ணப்பத்தை 10 தினங்களுக்குள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கடிதவுறையின் இடதுபுற மூலையில் விநியோகஸ்தருக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடவும்.

பொது முகாமையாளர்-விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்
சியெட் களனி இன்டர்நெஷனல் (தனியார்) நிறுவனம்,
த.பெ.53
நுன்கமுகொட,
களனி,

CEAT
born tough


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறமையில் குறைந்தவர்களென ஒதுக்கப்பட்ட மாணவர்களை முன்னணி நிலைக்குக் கொண்டுவந்த பாடசாலைகள் பல உண்டு

**யாழ்.** நகரிலுள்ள முன்னணிப் பாடசாலைகள் சிலவற்றில் உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றி சித்தி யெய்தாத மாணவர்களின் விவரங்களை கடந்த வாரம் பார்த்தோம். இந்த வாரம் நகரிலுள்ள ஏனைய பாடசாலைகளின் முடிவுகளைப் பார்ப்போம்.

| பாடசாலைகள் | பரீட்சைக்கு தோற்றியோர் | ஒருபாடமும் சித்தியெய்தாதோர் | ஒருபாடம் சித்தியடைந்தோர் | இருபாடம் சித்தியடைந்தோர் | மொத்தசித்தி எய்தாதோர் |
|---|---|---|---|---|---|
| யாழ் மத்திய கல்லூரி | 191 | 15 | 21 | 24 | 60 |
| திருக்குடும்ப கன்னியர் மடம் | 148 | 04 | 01 | 15 | 20 |
| வைத்தீஸ்வரா | 76 | 05 | 01 | 11 | 17 |
| கனகரத்தினம் ம.வி. | 112 | 11 | 06 | 10 | 27 |
| இந்து மகளிர் | 318 | 15 | 24 | 47 | 86 |
| கொக்குவில் இந்து | 293 | 45 | 24 | 31 | 100 |
| சென்ஜேம்ஸ் | 13 | 0 | 0 | 02 | 02 |
| செங்குந்தா | 26 | 01 | 01 | 04 | 06 |
| பெரியபுலம் ம.வி | 33 | 01 | 0 | 01 | 02 |
| சென்சார்ள்ஸ் | 54 | 0 | 02 | 07 | 09 |
| முத்துத்தம்பி | 11 | 0 | 01 | 0 | 01 |
| | 06 | 0 | 0 | 01 | 01 |

பிரபல பாடசாலைகளுடன் ஒப்பிடும் போது சிறிய பாடசாலைகளில் பரீட்சையில் சித்தியெய்தாதவர்களின் விகிதம் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. கடந்த ஆண்டு உயர்தரப்பரீட்சையில் ஒரு பாடத்திலேனும் சித்தியெய்தாதவர்களின் எண்ணிக்கை பிரபல பாடசாலைகளிலேயே கூடுதலாகக் காணப்படுகிறது.

இதே வேளை பிற பல பாடசாலைகளுடன் ஒப்பிடுகையில் சிறிய பாடசாலைகளில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் வீதம் கூடுதலாகக் காணப்படுகிறது.

**கலைப்பாடங்கள் மட்டுமே போதனை**

சிறிய பாடசாலைகளில் கலைப் பாடங்கள் மட்டுமே போதிக்கப்படுகின்றன. கலைப்பாடங்களில் சித்தியடைவது இலகுவானது என்று யாராவது வாதிடக்கூடும். தனியே கலைப்பிரிவுப் பரீட்சை முடிவுகளை எடுத்துப்பார்த்தாலும் பிரபல பாடசாலைகளின் சித்தி வீதம் குறைவாகவே காணப்படுகிறது. பிரபல பாடசாலைகள் சிலவற்றினதும் சிறிய பாடசாலைகள் சிலவற்றினதும் கலைப்பிரிவு சித்தி வீதம் இங்கு தரப்படுகிறது.

**கலைப்பிரிவு சித்தி வீதம்**

| | |
|---|---|
| யாழ் இந்துக்கல்லூரி | 72.73% |
| வேம்படி மகளிர் கல்லூரி | 82.61% |
| பரியோவான் கல்லூரி | 74.29% |
| சுண்டிக்குளி மகளிர் கல்லூரி | 87.3% |
| சம்பத்திரிசியார் கல்லூரி | 91.84% |
| பெரியபுலம் ம.வி | 92.86% |
| முத்துத்தம்பி ம.வி | 90.91% |
| சென்ஜேம்ஸ் மகளிர் கல்லூரி | 84.62% |
| சன்மார்க்க ம.வி | 83.33% |
| புனித சார்ள்ஸ் ம.வி | 83.33% |
| வைத்தீஸ்வரா கல்லூரி | 83.33% |

கடந்த ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தாத மாணவர்களின் வீதம் வருமாறு:

| | |
|---|---|
| யாழ் இந்துக்கல்லூரி | 34.5% |
| வேம்படி மகளிர் கல்லூரி | 24% |
| பரியோவன் கல்லூரி | 46% |
| சுண்டிக்குளி மகளிர் கல்லூரி | 23% |
| சம்பத்தரிசியார் கல்லூரி | 25.9% |
| யாழ்.மத்திய கல்லூரி | 31% |
| கொக்குவில் இந்து கல்லூரி | 34% |
| திருக்குடும்ப கன்னியர் மடம் | 13.5% |
| இந்து மகளிர் கல்லூரி | 27% |
| வைத்தீஸ்வரா கல்லூரி | 22% |
| கனகரத்தினம் ம.வி | 24% |
| செங்குத்தா இந்து கல்லூரி | 23% |
| சென்ஜேம்ஸ் மகளிர் கல்லூரி | 15% |
| சென்சார்ள்ஸ் ம.வி | 16% |
| பெரிய புலம் ம.வி | 6.1% |
| சன்மார்க்க ம.வி | 6.7% |
| முத்துத்தம்பி ம.வி | 9% |

## குடாநாட்டில் இலவசக் கல்வி படும் பாடு: 02

**க.பொ.த.உயர்தரம் சிறிய பாடசாலைகளின் விகிதம் கூடுதல்**

நடந்து முடிந்த க.பொ.த உயர்தரப்பரீட்சை முடிவுகளைப் பார்க்கும் போது யாழ்.நகரப் பாடசாலைகளில் பெரிய பாடசாலைகளை விட சிறிய பாடசாலைகளில் சித்தியடைந்த மாணவர்களின் வீதம் கூடுதலாகக் காணப்படுகிறது.

பெரிய பாடசாலைகள் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் பரீட்சைத்திணைக்களம் நிர்ணயித்த வெட்டுப்புள்ளியை விட கூடுதலான புள்ளியை தமது பாடசாலை வெட்டுப்புள்ளியாக நிர்ணயித்து திறமைசாலிகளனைவரையும் வடிகட்டிஎடுத்த பின் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி யெய்தாத மாணவர்களை வைத்துக்கொண்டு எதுவித வசதிகளுமில்லாத நிலையில் (பட்டம் பெற்ற ஆசிரியர்கள், ஆய்வுகூடம், நூலகம்) அந்த மாணவர்களைப் பரீட்சையில் சித்தியடையச் செய்த ஆசிரியர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். ஐந்தாம் வகுப்பு வரை பெற்றார் பிள்ளைகளை கண்ணும் கருத்துமாகப் பராமரித்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையச் செய்து பிள்ளைகளை பிரபல பாடசாலைகளில் சேர்க்கின்றனர். பிள்ளைகளைப் பிரபல பாடசாலைகளில் சேர்ப்பதுடன் தமது கடமை முடிந்துவிட்டதாக பெற்றார் நினைக்கிறார்கள் போலிருக்கிறது.

**பக்கச்சார்பான ஆய்வு ஏன்**

மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்தால் தமது பாடசாலையின் பெயரைக் கூறி தம்பட்டம் அடிப்பவர்கள் மாணவர்கள் பரீட்சையில் தோல்வியடைந்தால் மட்டும் தனியார் கல்வி நிலையங்கள் மீது பழியைப் போட்டுவிட்டுத் தப்பிவிடுகின்றனர்.

பரீட்சைப் பெறுபேறுகளிலுள்ள சாதகமான அம்சங்களை மட்டும் வைத்துக்கொண்டு தாம் கல்வி பயின்ற, தமது பிள்ளைகள் கல்வி பயிலும், உறவினர்கள் அதிபர்களாகக் கடமையாற்றும் பாடசாலைகள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளன என்று பக்கச் சார்பாக ஆய்வுசெய்யாமல் ஒழுங்கான முறையில் ஆய்வு செய்ய பேராசிரியர்கள் முன்வருவார்களா?

யாழ்ப்பாணத்தின் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்து வருவதற்கு யார் காரணம்? மாணவர்களா? பெற்றோரா? ஆசிரியர்களா? சந்தர்ப்ப சூழ்நிலைகளா? சமுதாயமா? கல்விமான்களும், புத்திஜீவிகளும் சிந்திக்கவேண்டிய தருணம் வந்துவிட்டது. சிந்திப்பார்களா?

(கடந்த வாரம் உதயனில் பிரசுரமான அட்டவணையில் யாழ்.இந்துக்கல்லூரியிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 304 என்பதற்குப் பதிலாக 432 என பிரசுரமாகி விட்டது. எனக்குக் கிடைத்த பட்டியலில் யாழ்.இந்துக் கல்லூரியிலிருந்து கலைப்பிரிவில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 33 என்பதற்குப் பதிலாக 133 என இடம் பெற்றிருந்ததே இந்த தவறுக்குக் காரணம். தவறுக்கு வருந்துகிறேன்.)

**ந.பரமேஸ்வரன்**

## நற்செய்திப் பணி நம் அனைவரினதும் பணி

இறை அரசின் மதிப்பீடுகள் அன்பு, அமைதி, சமத்துவம், மனிதநேயம் கலந்த மாண்பு ஆகியன. இவை மனங்களை ஒரு மனப்படுத்தி புதிய சமுதாயம் படைக்கும் ஆற்றல் கொண்டவை. நாம் வாழும் சமூகத்திலும் நாளுக்கு நாள் வளர்கின்ற திருச்சபையிலும் இறை அரசின் மதிப்பீடுகளாக வாழ்ந்து கிறிஸ்துவின் நற்செய்தியைப் பறைசாற்றிக்கொண்டு சென்றவர்களின் வாழ்வுபோல் நாம் அனைவரும் நற்செய்திப் பணி செய்ய நற்செய்தியாக மாற தூண்டுதலானவர்களாக வாழ வேண்டும். நம் வாழ்வும் செயலும் நற்செய்தியாக மாறும்போது கிறிஸ்துவின் அன்பையும் அமைதியையும் நாம் வாழும் இடங்களில் பிறருக்குப் பகிர்ந்தளிப்பவர்களாக இருக்கிறோம்.

யேசுக்கிறிஸ்துவின் போதனைகளைக் கேட்டு அவர் செய்த பல புதுமைகளைக் கண்ட திருத்தூதர் நற்செய்தியைப் பரப்ப உலகில் பல நாடுகளுக்கும் சென்றனர். அதே போல் திருமுழுக்குப் பெற்ற நாம் அனைவரும் நற்செய்திப் பணியின் ஊழியராக மாற இன்று அழைக்கப்பட்டிருக்கிறோம். இன்று அறிவியல் பொருளாதாரம் கல்வித்துறைகளில் முன்னேற்றம் காணக்கூடியதாக இருக்கின்றது. இருப்பினும் எமது ஆன்மீகம் வீழ்ச்சியடைகின்றது. அன்புக்காக ஏங்குவோர் எத்தனைபேர் நம் இதயங்களில் நமது குடும்பங்களில் நம் சமுதாயத்தில் நாம் வாழும் உலகில் இருக்கிறார்கள். உண்மையான அமைதி நிலவ வேண்டுமென்றால் நாம் இயேசு ஒருவரிடம்தான் திரும்பவேண்டும். இறைமைந்தன் இயேசுவின் ஆசிர்பெற்ற மக்களாக வாழ்ந்து நற்பணி புரிய எங்களை இறைவனிடம் சமர்ப்பிப்போம்.




பேரிரக்கமுள்ள இறைவா நீர் எமக்குத் தந்த தாலாந்துக்காக நாம் உம்மைப் போற்றிப் புகழ்கின்றோம். நன்றி கூறுகிறோம். உமது அளவற்ற அன்புதான் எமக்கு இக்கொடைகளை வழங்கக் காரணம் என்பதை நாம் அறிவோம். நீர் தந்த தாலாந்தைப் பெருக்கி உமக்கு அர்ப்பணிக்க அருள்புரிவீராக. சோம்பேறிகளாக நாம் இராமல் உமக்குப் பணிபுரியும் ஊழியர்களாக எங்களை மாற்றியருளும். நாம் தளர்ந்து போகாமல் முயற்சி செய்து முன்னேற தேவையான ஆற்றலை எமக்கு அருள வேண்டுமென்று உம்மைக் கெஞ்சி மன்றாடுகின்றோம் ஆமென்.

புனித யாகப்பர் ஆலயம், குருநகர்.

சே.மேரி பற்றிமா


**கார் விற்பனைக்கு**

300-XXXX தொடரிலக்கத்தினையுடைய FB14 சில்வர் கலர் கார் விற்பனைக்குண்டு.
மேலதிக விவரங்களிற்கு:
இல 45, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு: **A.S.S பாம்,**
தியேட்டர் வீதி, இணுவில்


**சாவகச்சேரியில் நாளை பால் விற்பனை நிலையம் திறப்பு**

தென்மராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் சாவகச்சேரி நகர்ப் பகுதி பால் விற்பனை நிலையம் நாளை திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு முன்பாக உள்ள கடைத்தொகுதியில் இந்தப் பால் விற்பனவு கொள்வனவு நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் [illegible] தினராக கலந்து கொள்வார். (1-207)


**நியாய விலையில் CALTEX ஓயில் வகைகள்**

எம்மிடம் சகலவிதமான CALTEX ஓயில் வகைகளையும் என்றுமில்லாதவாறு நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

CALTEX

CALTEX யாழ்.மாவட்டப் புதிய முகவர்கள்:


**ஈஸ்வரன் ரேடர்ஸ்**
69, 115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:0212222813
0212224317





## விழிநீர் சொரியும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தாயின் மடியில் 15 ★ 08 ★ 1945



காலனின் பிடியில் 08 ★ 05 ★ 2009

### அமரர் நாகமுத்து பூர்வீகநாதன்
(பாதுகாப்பு உத்தியோகத்தர், மொனரா)

கொழும்பில் கடந்த 08.05.2009 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர். நாகமுத்து பூர்வீகநாதனின் வீட்டுக்கிரித்திய நிகழ்வுகள் இன்று (07.06.2009) ஞாயிற்றுக்கிழமை 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அவ்வேளை தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும்கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இலகடி,
சங்கானை.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேர்த்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் நன்றியுடன்...

## அன்புக்கினிய அனைவருக்கும்



04.06.2009 வியாழக்கிழமை
இடம்பெற்ற எமது புதிய
கடைத்தொகுதி திறப்பு விழாவிற்கு
வருகைதந்த சிவாச்சாரியர்கள்,
ஆதீனமுதல்வர், அருளாளர்கள்,
வர்த்தகர்கள்,
வாடிக்கையாளர்கள், அரச,
தனியார் வங்கி அதிகாரிகள்,
திணைக்களத் தலைவர்கள், யாழ். செயலக
அதிகாரிகள், மதப்பிரமுகர்கள், பொது
அமைப்புக்களின் பிரதிநிதிகள், வலயக்
கல்விப்பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள்,
நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும்
எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.
குறிப்பாக எமது கட்டடத் திறப்பு விழாவிற்கு
கட்டுரையாக்கம் வழங்கிய முதுநிலை
விரிவுரையாளர் மா. சின்னத்தம்பி அவர்களுக்கும்,
வாழ்த்து விளம்பரம் வழங்கிய யாழ். இந்துக்
கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி,
கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்,
யாழ். சன்மார்க்க மகா வித்தியாலயம்,
சென்ரல் சைக்கிள் ஸ்ரோர்ஸ், சிற்றி சைக்கிள்
இன்டஸ்றீஸ், ஹற்றன் நஷனல் வங்கி, வட்டு. இந்து
வாலிபர் சங்கம், ப. நோ. கூ. சங்கங்கள் மற்றும்
வாழ்த்துப்பா வழங்கிய அன்பர்கள்
அனைவருக்கும் நன்றிகள் பல.

**E.S.P. நாகரத்தினம் சக நிறுவனம்**
52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## கௌரவிப்பு விழா

கரவெட்டி, ஜூன் 7

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தேசிய தமிழ்த்தினப் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கரவெட்டி தச்சை ஐங்கரன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஒன்றியத்தின் போசகர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா பிரதம விருந்தினராகவும், கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.அம்பலவாணர் சிறப்பு விருந்தினராகவும், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் வே.சிவசிதம்பரம், கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய அதிபர் இ.இராகவன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (204)

## பதவி வெற்றிடம்

### விற்பனைப் பிரதிநிதி

உற்பத்தியிலும், வர்த்தகத்திலும் ஈடுபட்டுள்ள கூட்டுக் கம்பனிக்கு மேலே குறிப்பிட்டுள்ள பதவிக்கு யாழ்.மாவட்டத்தில் கடமை புரிவதற்கு உடனடியாகத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

தகைமைகள்:
* க.பொ.த உ/த
* ஹாட்வெயர் (இரும்பு விற்பனை) துறையில் முன் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
* மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரம்

தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்களுடன் ஒருவார காலத்துக்குள் விண்ணப்பிக்கவும்.

**யாழ்.சில்லாகரி**
இல.06, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C/558879)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி விஜயராணி சிறிதரனின் அன்புத்தாய்
**திருமதி திருநாவுக்கரசு பராசக்தி**
அவர்களின் பிரிவினால் கலங்கி நிற்கும்
குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கேற்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

யா/கொழும்புத்துறை
துரையப்பா வித்தியாலயம்,
கொழும்புத்துறை.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
(85907)

## இலவசம்! இலவசம்! இலவசம்!

# K.K. Phone Shop

இன் 5 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு
08.06.2009 ஆம் திகதி தொடக்கம்
31.06.2009 ஆம் திகதிவரை DAILOG சிம்
இலவசமாக Softlogic உத்தரவாதத்துடன்
NOKIA கையடக்க தொலைபேசிகள் குறிப்பிட்ட
காலப்பகுதியில் விசேட கழிவுகள் வழங்கப்படும்.



**K.K. Phone Shop**
இல. 01. மேல் மாடி,
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.



## ஏ-9 தரைப்பாதையூடான யாழ். ⟷ கொழும்பு போக்குவரத்துச் சேவை

# ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்வீஸ்

# ESWARRAN TRANSPORT SERVICE




யாழ். குடாநாட்டுக்கான தரைவழிப் போக்குவரத்துச் சேவையை
(யாழ்ப்பாணம் → கொழும்பு, கொழும்பு → யாழ்ப்பாணம்)
எதிர்வரும் தினங்களில் ஆரம்பிக்கின்றோம் என்பதை
வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.
யாழ். குடாநாட்டிலிருந்து உள்ளூர் உற்பத்தி விவசாயப் பொருள்களைக் குறைந்த
கட்டணத்துடன் கொழும்புக்குக் கொண்டு செல்வதற்கு வசதி செய்துள்ளோம்.
★ எதிர்வரும் 11ஆம் திகதி ஏ-9 வீதியூடான எமது முதலாவது போக்குவரத்துச் சேவை ஆரம்பமாகும்.

**ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்வீஸ்**
201, B, டாம் வீதி, கொழும்பு - 12.
T.P.: 0112433889, 0112435247, 0777874119

**ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்வீஸ்**
69, 115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2813, 021 222 4317

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

## ஓய்வுபெறும் பிரதம நீதியரசரின் எச்சரிக்கை

''நீதி மற்றும் சமூகக்கட்டமைப்புக்கள் மூலம் தமிழ் மக்களுக்குச் சட்டரீதியாக உகந்த பாதுகாப்பு வழங்கப் படாவிட்டால், அவர்கள் மத்தியிலிருந்து மற்றொரு கிளர்ச்சி வெடிக்கும்; அது ஆயுத போராட்டமாகத் தான் இருக்க வேண்டும் என்பதல்ல.''

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஓய்வுபெற்றுச் செல்லும் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா. அவரது கருத்தில் (அதனை எச்சரிக்கை மொழி என்றும் சொல்லலாம்) பல அர்த்தங்கள் ஆழப்பதிந்திருக்கின்றன.

அவற்றில் முதன்மையாகக் கொள்ளப்படக்கூடிய ஒன்று குறித்தே இப் பத்தியில், இப்போதைக்கு, கவனத்தில் கொள்வது பொருத்தம்.

இராணுவ வெற்றிக்களிப்பில் மிதந்துகொண்டிருக்கும் அரசாங்கத்தை நேரடியாக விளித்து சரத் என். சில்வா இந்த எச்சரிக்கை க் குறிப்பை கூறாவிட்டாலும், ஆள்வோர் தரப்பிற்கு சொல்லும் புத்திமதியே இது என்பதில் ஐயம் கொள்ளவேண்டியதில்லை.

விடுதலைப் புலிகளை தோற்கடித்து இராணுவ வெற்றி வாகை சூடியதோடு தமிழர் பிரச்சினை தீர்ந்து விடவில்லை என்பது வெளிச்சம்.

தமிழர்களின் உரிமைப் போராட்டம் தொடங்கப்பட்டதற்கான மூலகாரணங்களை இனங்கண்டு, அவர்களுக்குப் பிறப்பால் உரித்தான ஜனநாயக உரிமைகளை மதித்து, அவர்களும் தனியான ஓர் இனத்தவர், ஆட்சி அதிகாரத்துடன் வாழ்ந்தவர்கள் என்பதனைச் சீரணித்துக் கொண்டு, உகந்த அரசியல் தீர்வு ஒன்று வழங்கப்படுவது உடனடி அவசியம் என்பதனை அரசு கவனத்தில் கொண்டு அதனை நோக்கி இதய சுத்தியுடன் செயற்பட வேண்டும்.

தமிழர்கள் இந்த நாட்டில் சிறுபான்மையினர் தானே. அதனால் பௌத்த - சிங்கள பேரினவாதம் மேலோங்கி நிற்கும் வகையில் பிச்சையாகக் கிள்ளிப் போடும் தீர்வாக ஒன்றை வழங்குவோம் என்ற சிந்தனை ஓட்டத்துடன் செயற்பட அரசு முனையக்கூடாது.

அவ்வாறு செய்யும் பட்சத்தில் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து ஆயுத மோதலுக்குப் பதிலாக மற்றொரு கிளர்ச்சி வெடிக்கும் என்பதனையே ஓய்வு பெறும் நீதியரசர் சரத் என். சில்வா உள்ளார்த்தமாக, பூடகமாக கூறியிருக்கிறார் என்று கொள்ளலாம்.

இவற்றுக்கும் அப்பால், இலங்கையில் சிங்கள அரசியல் வாதிகள், அதாவது அரச தரப்பு அதீத ஆதரவாளர்கள், அரசாங்கத்தோடு சேர்ந்தியங்கும் ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகளும் வெளியில் அரசுக்கு ஆதரவு தேடிக் கொடுக்கும் ஜனதா விமுக்தி பெரமுன, தேசப் பற்றாளர் இயக்கம் போன்ற அதிதீவிரவாத அரசியல் குழுக்களும் தமிழர்களுக்கு அவர்களின் ஜனநாயக உரிமைகளை குறிப்பாக தன்னாட்சி உரிமையை வழங்குவதற்குத் தானும் அரசாங்கத்திற்கு இடம் கொடுப்பார்களா என்ற மிகப் பொல்லாத கள நிலைமை எப்போதும் இல்லாதவாறு யுத்த வெற்றியின்பின் தோன்றியுள்ளது.

இத்தகைய பின்புலத்தை மனதில் இருத்தியே, ஓய்வு பெற்றுச் செல்லும் பிரதம நீதியரசர் மற்றொரு கிளர்ச்சி குறித்து எச்சரிக்கைத் தொனியில் பிரஸ்தாபித்திருக்கிறார் என்று கொள்ளலாம்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் போதிய ஆய்வு செய்தோ, யோசனை செய்தோ இயற்றப்படவில்லை. இந்திய அரசமைப்பை ''கொப்பியடித்து'' தயாரிக்கப்பட்டது. இலங்கைக்கு ஏற்புடையதொன்றல்ல என்ற கருத்தையும் சரத் என். சில்வா முன்வைத்திருக்கிறார்.

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் ஓர் அரசியல் தீர்வே அல்ல என்று அசங்க வெலிகல என்ற சட்ட நிபுணர் உட்பட பலர் கருத்துக்கூறியிருப்பதையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தம்.

ஆனால் 13 ஆவது திருதத்திற்கு உட்பட்டும் தமிழர்களுக்குத் தீர்வு எதுவும் வழங்கப்படக் கூடாது என்ற கருத்துடையவர்களே இன்றைய அரசாங்கத்தை சூழ்ந்திருக்கிறார்கள் என்பதை மறந்துவிடலாகாது.

இந்த நாட்டில் வாழும் சகல மக்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். எதிர்காலத்தில் அதற்கு வழி செய்யாவிட்டால் எதிர்காலத்தில் மோதல்கள் ஏற்படலாம் என்று முன் மொழிவு செய்திருக்கிறார் முன்னாள் பிரதம நீதியரசர். எனினும் பேரினவாதத்தில் மூழ்கித்திளைக்கும் அரசாங்கம் தமிழர்களுக்கு அரசியல் விடிவு தரும் நடவடிக்கைகளில் மனச்சுத்தியுடன் ஈடுபடும் என்று நம்புவதற்கு இடமேயில்லை.

அது ஒருபுறமிருக்க -

ஜே.ஆர். ஜெயவர்த்தனா காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த மாவட்ட நிர்வாக நடைமுறையே இலங்கைக்கு உகந்தது என்பதே தமது சொந்தக் கருத்து என்றும் அவர் தமது கருத்து வெளிப்பாட்டின் இறுதியில் திருவாய் மலர்ந்துள்ளார்.

இது அவரது சொந்தக் கருத்தாக இருந்தாலும் அதனை அவர் செய்தியாளர் மாநாட்டில் பகிரங்கமாக கூறியதால் அது விமர்சிக்கப்படக்கூடியதாகும்.

தமிழ் மக்களின் உள்ளக சுயநிர்ணயச் சுயாட்சி என்ற அரசியல் அபிலாசையை கணக்கில் - கருத்தில் - கொள்ளும் போது மாவட்ட ஆட்சி முறை எந்தளவு தூரத்திற்கு ஈடுகொடுக்கும் என்பது - பென்னம் பெரு இடைவெளியை, வெற்றிடத்தை கொண்டுள்ளது என்பது - விரிவாக ஆராயப்படவேண்டியது. இதனை அரசு தனது பிடியாகப் பற்றிக்கொள்ளும் பட்சத்தில் அதுவும் ஓய்வு பெறும் பிரதம நீதியரசர் ''எதிர்வு கூறும்'' மற்றொரு கிளர்ச்சிக்கு அடியெடுத்துக் கொடுக்கும் என்பதனை அவர் மறந்து போய் விட்டாரே என்னவோ....?

# நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள ஆதரவற்ற சிறார்களை உள்ளூர் தொண்டு நிறுவனங்கள் பராமரிக்க அனுமதி

## பலாலியில் நடந்த கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

வன்னியில் இருந்து வந்து குடா நாட்டில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள ஆதரவற்ற 18 வயதிற்கு கீழ்ப்பட்ட பராயம் அடையாத சிறார்கள் உள்ளூர் நிறுவனங்கள் ஊடாக பராமரிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

பலாலியில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் "இது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா, யாழ் அரச அதிபர் கே. கணேஷ், யாழ் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மொண்டகு சமரசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களில் 297 சிறுவர்கள் ஆதரவற்ற நிலையில் உள்ளனர். அதாவது தாய், தந்தையரை இழந்தவர்களாகவும் தாய், தந்தையர் வேறு நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பதால் அவர்களுடன் தொடர்புகள் இல்லாதவர்களாகவும் உள்ளனர்.

இத்தகைய சிறுவர்கள் ஆயுதக் குழுக்களுடன் தொடர்புடையவர்களா என்று விசாரணை செய்யப்பட்ட பின்னர் அவர்களை கல்வி நடவடிக்கையில் ஈடுபட அனுமதிக்க வேண்டும். அவர்களை வைத்துப் பராமரிக்க உள்ளூர் நிறுவனங்கள் முன் வந்துள்ளன. அதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று மேல் நீதிமன்ற நீதிபதியும் அரச அதிபரும் தளபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாவட்ட நீதிமன்றத்தின் மேலாண்மை பாதுகாவலர் என்ற ரீதி யில் நீதிபதியும் மாவட்ட சிறுவர் நன்னடத்தை திணைக்கள பொறுப்பாளர் என்ற ரீதியில் அரச அதிபரும் இந்தக் கோரிக்கையை வைத்தனர்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட தளபதி, குறிப்பிட்ட சிறுவர்களை விரைவாக ஒப்படைப்பதாகவும் ஏனைய மாவட்டங்களில் உள்ள நலன்புரி நிலையங்களுக்கு முன்மாதிரியாக இத் திட்டம் அமையும் என்றும் தளபதி தெரிவித்தார்.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள இந்துக்குருமார்களையும் விடுவிக்க வேண்டும் என்று தளபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்துக் குருமார்களின் விசாரணைகள் முடிவடைந்த பின்னர் ஆயுதக் குழுக்களுடன் தொடர்பில்லை எனக் கண்டறிந்தால் அவர்களை விடுவிப்பதாக தளபதி பதில் அளித்தார். (அ-1)

## குடாநாட்டில் இன்று மின்சாரம் வழமைக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 7

குடாநாட்டில் இன்று மின் விநியோகம் வழமை நிலைக்கு திரும்பும் என்று மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

சுன்னாகம் பிரதான நிலையத்தில் உள்ள மின் பிறப்பாக்கியின் விநியோகப் பாதையில் ஏற்பட்ட சேதம் காரணமாக நேற்று முன் தினம் தொடக்கம் அடிக்கடி மின்விநியோகம் தடைப்பட்டது. திருத்த வேலைகள் நேற்று மாலையில் பூர்த்தியடைந்துள்ளன. அதன் பின்னர் மின்விநியோகம் வழமைக்கு திரும்பியுள்ளது - என்று மின்சாரசபை அதிகாரி ஒருவர் நேற்று இரவு உதயனுக்குத் தெரிவித்தார் (அ-1)

# பிரதேசத்தின் தேவைகளைக் கண்டறிந்து சமமாக அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட வேண்டும்

## புதிய மேலதிக அரச அதிபர் கருத்து



யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேசங்களில் நிலவுகின்ற தேவைகளை இனம் கண்டு சமமான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

புதிதாக நியமனம் பெற்றுள்ள யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் மேலதிக அரச அதிபர் பதவியினை திருமதி ரூபினி வரதலிங்கம் சம்பிரதாய பூர்வமாக பொறுப்பேற்றார்.

அவரது நியமனம், எதிர்காலச் செயற்பாடுகள் ஆகியன தொடர்பாக கேட்டபோது அவர் உதயனுக்குத் தெரிவித்தவை வருமாறு:

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரை அபிவிருத்தித் திட்டங்கள் அதிகமாக உள்ளன. அத்தகைய திட்டங்களை துரித கதியில் மேற்கொண்டு பிரதேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய தார் மீகப் பொறுப்பு எம்மிடம் உள்ளது.

அத்தகைய தார்மீகக் கடமையினை நாம் ஒவ்வொருவரும் புறந்தள்ளி விடக்கூடாது. பொறுப்புணர்வுடன் எமது கடமைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.

கிராம மட்டங்களில் உள்ள தேவைகளை இனம்கண்டு அவற்றினை உரிய அதிகாரிகள் அதிசிரத்தையோடு உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும்.

பிரதேசத்துக்கு பிரதேசம் அபிவிருத்தி முன்னெடுப்புகளில் வேறுபாடுகளைக் காட்டாமல். சமமான பங்கிடப்பட்ட அபிவிருத்தி முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்தகைய காத்திரமான பணிகளை முன்னெடுக்க உத்தியோகத்தர்கள், திணைக்களத் தலைவர்கள் அனைவரும் சிறந்த முறையில் தமது ஒத்துழைப்புக்களை வழங்கி எமது அபிவிருத்தித் திட்டத்தின் இலக்கினை அடைய வழிசமைக்க வேண்டும்- என்றார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலராக கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் கடமையாற்றிய திருமதி ரூபினி வரதலிங்கம் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச் சால் மேல திக அரசாங்க அதிபராக கடந்த 3 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.

யாழ்.மேலதிக அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய ஆ.சிவசுவாமி வடக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டதன் பின்னர் அவரது இடத்திற்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (1-9)

## பயணிகளின் கப்பல் சேவை காலை 8 மணிக்கு வருமாறு பயணிகளுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 7

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறும் என்று சிவில்நிர்வாக அலுவலகம் தெரி வித்தது.

ஒன்று விட்ட ஒருநாள் கப்பல் சேவை இடம்பெறும் என்றும்-

வழமை போல் பயணிகள் காலை 8 மணிக்கு ரயில் நிலையத்துக்கு வருகை தர வேண்டும் என்றும்- சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது.(1)

## பொசன் தினத்தை ஒட்டி இன்று இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜூன் 7

பொசன் போயா தினத்தை ஒட்டி இன்று இரவு 7.30 மணி தொடக்கம் யாழ்.நாகவிகாரைக்கு சமீபமாகத் தமிழ் மற்றும் சிங்கள பக்திப்பாடல் இசைக் கச்சேரி நிகழ்வு நடைபெறவுள்ளது. யாழ். 51 ஆவது படையணித் தலைமையகம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

பகலில் விகாரையில் போசன தான சாலையும் அமைக்கப்பட்டு அன்னதானம் வழங்கப்படவுள்ளது. இரவு நடைபெறும் இசை நிகழ்சியில் யாழ்.கலாமன்றம், யாழ்.பல்கலைக்கழக அழகியல் பிரிவு, பலாலி ஒலிபரப்புச் சேவை மற்றும் இராணுவத்தினரின் பக்தி இசைக் குழு ஆகியன பங்குபற்றும் என்றும் 51ஆவது படையணித் தலைமையகம் தெரிவித்தது. (அ-1)

# வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் 5 ஆயிரம் பேருக்கு நாளை பயிற்சிகள் ஆரம்பம் கையடக்க தொலைபேசி; 'சிம்' இலவசமாக சகலருக்கும் கிடைக்கும்

வலி.வடக்கு, ஜூன் 7

வடக்கின் வசந்தம் 180 நாள் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் பதிவு செய்து கொண்டுள்ள முழு நேர மாணவர்களுக்கான வகுப்புக்கள் நாளை காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

நாளை ஆரம்பமாகவுள்ள மூன்று மாதகாலத்திற்கான பயிற்சி நெறிகளில், சிறு கைத்தொழில் முகாமைத்துவம், மேசன், ஒட்டுநர் (வெல்டிங்), பொருத்துதல் (பிளம்பர்), மோட்டார் சைக்கிள் திருத்துதல், உழவுயந்திரம் திருத்துதல் ஆகியன அடங்குகின்றன.

இந்தப்பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதுடன், வெளிநாடுகளில் வேலைவாய்ப்புக்களை பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் ந.யோகராஜன் தெரிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறிகள் பூர்த்தி அடைந்ததும் இரண்டாம் தொகுதியினர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளார்கள் எனவும் அவர் கூறினார்.

அதே வேளை-

இந்த விசேட பயிற்சி நெறிகளுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள 5 ஆயிரம் மாணவர்களுக்கும் கையடக்க தொலைபேசிகளுக்கான டயலொக் 'சிம்' அட்டைகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாளை திங்கட்கிழமை காலை 8 மணி முதல் குறிப்பிட்ட 'சிம்' அட்டைகளை கல்லூரியில் வைத்து வழங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் நவீன சந்தையில் அமைந்துள்ள கே.கே.போன் நிறுவனம் இந்த 'சிம்' அட்டைகளை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கவுள்ளது.

இத்துடன் இரண்டாயிரத்தி எழுநூறு ரூபா விலையில் கையடக்க தொலைபேசியும் 600 ரூபா பெறுமதிக்கு 'ரீலோட்' செய்து வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (1-86)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 25 08.06.2009 | |
| | திங்கட்கிழமை |
| திதி: | பிரதமை |
| | பி.இ. 01.47 வரை |
| நட்சத்திரம்: | கேட்டை |
| | பி.ப. 01.46 வரை |
| சுபநேரம்: | 11.52 - 01.22 |
| ராகுகாலம்: | 07.22 - 08.52 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்



## இனப்பிரச்சினைத்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வாறெனினும் அரசமைப்புச்சட்டத்தில் உகந்த, உரிய திருத்தம்செய்யாமல் மூதவையை நிறுவுவது சாத்தியமில்லையென்று நீதித்துறை வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

இதேவேளை- இனப்பிரச்சினைத் தீர்வுக்கான யோசனைகளை விரைவாகச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சகல கட்சிகளையும் கேட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை ஜனாதிபதி அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் கட்சிகளையும் ஏனைய கட்சிகளையும் சேர்ந்த பிரதிநிதிகளுடன் நடத்திய கலந்துரையாடலின் போது இக் கோரிக்கையை விடுத்தார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக சகல கட்சிகளும் சமர்ப்பிக்கும் யோசனைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அங்கு விவாதிக்கப்பட்டு இறுதித்தீர்வை எட்டவேண்டும் என்றும் ஜனாதிபதி பிரதிநிதிகளிடம் தெரிவித்ததாக கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

## தமிழ்த் தேசியக்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பாலும் இச்சந்திப்பு எதிர்வரும் புதன்கிழமை நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சென்னையில் தமிழக முதல்வர் மு. கருணாநிதியை இக்குழு கடந்த சனிக் கிழமை சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியி ருந்தது.

சென்னையில் தங்கியுள்ள இக்குழு பிரதமரைச்சந்திப்பதற்காக நாளை புதுடில்லி புறப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தியையும் இக் குழுவினர் சந்திக்கக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## அரச சார்பற்ற.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச சார்பற்ற நிறுவனங்களும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டிற்குக் கீழ் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டு வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இதன் பிரகாரம் அரச சார்பற்ற நிறுவனங்களின் சகல நடவடிக்கைகளும் பாதுகாப்பு அமைச்சினால் மிக உன்னிப்பாக அவதானிக் கப்படுவதுடன், அவற்றுக்கான கண்காணிப்பு சட்ட விதிகள் மிகவும் தீவிரமாக்கப் பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் உயர்மட்ட அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி சிங்கள வாரப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கான பிரதான காரணம் 'விசா' விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று புலிகள் இயக்கத்தின் மூலமாக அரச உயர் அதிகாரிகள் சிலருக்கு மரண அச்சுறுத்தல் விடுத்திருந்தமையை தொடர்ந்தே அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் பாது காப்பு அமைச்சிற்கு மாற்றப் பட்டுள்ளதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "வணங்கா மண்"..... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தது.

பொருள்களை இறக்கிய பின்னர் கப்பல் திரும்பிச் செல்ல அனுமதிக்கப்படும் என்றும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு வழங்கவென, புலம்பெயர்ந்த தமிழ் உறவுகள் வழங்கிய உதவிப் பொருள்களுடன் வந்த இந்தக் கப்பல் இலங்கைக் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் தடுக்கப்பட்டது.

கப்பலில் இருந்தவர்களை விசாரணை செய்து கப்பல் ஆவணங்களை பரிசீலனை செய்ததன் பின்னர் கப்பலில் கொண்டுவரப்பட்டுள்ள பொருள்களை இறக்குவது என்றும், கப்பலைத் திரும்பிச் செல்ல அனுமதிப்பது என்றும் முடிவுசெய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளது.

## மயிலிட்டி.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

நேற்று காலை 9.30 மணியில் இருந்து பிற்பகல் ஒரு மணிவரை அந்தப்பகுதியில் ஆயுதக் கிடங்கு வெடித்துச் சிதறும் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்ததாக அப்பகுதியிலிருந்துகிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

அதேவேளை தென்மராட்சிப்பகுதி முகாம்களில் இருந்து காங்கேசன்துறை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் கூறப்பட்டது (அ-1-207)

## மஹிந்த,..... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்

பாதுகாப்பு செயலாளரும் இராணுவத் தளபதியும் விமானம் மூலம் பலாலி செல்வதற்கு ஒழுங்குகள் நடைபெற்றுக்கொண்டிருந்த போது பலாலி விமானத்தளம்மீது விடுதலைப்புலிகள் பீரங்கித் தாக்குதல் நடத்தியமை பின்னர் நடைபெற்ற புலன் விசாரணைகள் மூலம் தெரியவந்தது. எனவே உயர்மட்ட இராணுவ அதிகாரிகளின்மூலமே இத்தகைய மிக இரகசிய தகவல்கள் புலிகளுக்குக் கிடைத் திருக்கின்றனவென்பது தற்போது ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதாக அந்த பத்திரிகைச் செய்தியில் விவரிக்கப்பட்டுள்ளது.

## தனியார்.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் உள்ள வர்த்தகர்கள் குழு ஒன்று கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதியுடன் நடத்திய பேச் சுக்களை அடுத்து இந்த வாகன அணிக்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து நாளை புறப்படும் லொறிகளின் வாகன அணி அனுராதபுரத்தில் வைத்துச் சோதனை செய்யப்படும். அதன் பின்னர் நேரடியாக யாழ்ப்பாணத்துக்குச் செல்ல அனுமதிக்கப்படும்.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரின் ஏற்பாட்டில் கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்தின் (சி.டபிள்யு.ஈ.) ஸ்தாபனத்தின் லொறிகள் பொருள்களைத் தமது களஞ்சியத்தில் வைத்து ஏற்றிக்கொண்டு வாரம் ஒரு தடவை ஏ - 9 பாதையூடாக யாழ்ப்பாணம் வந்து திரும்பிச் செல்வது இப்போது நடமுறையில் உள்ளது.

தனியார் வர்த்தகர்களின் லொறிகள் எதிர்வரும் 11 ஆம் திகதி முதல்முறையாக ஏ - 9 பாதையூடாக யாழ்ப்பாணம் வருகின்றன. (அ-1)

## முல்லைத்தீவு, .... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார், முல்லைத் தீவு, கிளிநொச்சிப் பிரதேசங்களைச் சேர்ந்த சகல தனியார் மற்றும் அரசாங்க நிலங்களும் அவசரகாலச்சட்டத்தின் கீழ் உடனடியாக அரசுடைமையாக்கப்படவுள்ள தாக சிங்கள வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. யுத்தத்தினால் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறியுள்ள மக்களின் நிலங்கள் மற்றும் உடைமைகளை வெளியார் அபகரித்துக் கொள்வதை தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக,அரச வட்டாரங்கள் தெரிவித்திருப்பதாக அச் செய்தியில் விவரிக்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் அரசாங்கத்தின் இந்த ஏற்பாட்டின் மூலம் விரைவாகவும், பாதுகாப்பாகவும் தத்தமது சொந்த இடங்களில் மீள்குடியேறுவது சாத்தியமாகும் எனவும் அவர்களது அநாதரவான நிலையை வெளியார் துஷ் பிரயோகம் செய்வதை முற்றாகத் தடுக்கும் பொருட்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் சம்பந் தப்பட்ட அமைச்சரை மேற்கோள்காட்டி குறிப்பிட்ட சிங்களவாரஇதழ்செய்திவெளியிட்டுள்ளது.

## இலங்கைப் போர்க்.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதிக்க வேண்டும், அங்கீகரிக்க வேண்டும் என்றும் கூறிய பான் கீ-மூன் - எங்கு, எப்போது மனித உரிமைச் சட்டங்கள் மீறப்பட்டதாக நம்பத்தகுந்த குற்றச்சாட்டுக்கள் கிடைக்கப்பெற்றாலும் அங்கு உரிய முறையிலான விசாரணை நடத்தப்படவேண்டும் - என்றும் வலியுறுத்தினார்.

யுத்தத்தின் இறுதி நாள்களில் பொதுமக்கள் பெரும் எண்ணிக்கையில் உயிரிழந்தமை தொடர்பான குற்றச்சாட்டுக் குறித்து முறைப்படியான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

### கொண்டாட்டங்களுக்கு பதிலாக பாதிப்புற்றோரை குணப்படுத்த வேண்டும்

கடந்த இரு தசாப்த காலமாக இடம்பெற்று வந்த யுத்தத்தின் முடிவில் விடுதலைப்புலிகளைத் தோற்கடித்தமைக்கான வெற்றிக் கொண்டாட்டங்களுக்குப் பதிலாக யுத்தத்தால் பாதிப்புற்றோரை குணப்படுத்த ஒற்றிணைந்து செயற்படுமாறும் ஐ.நா. சபைச் செயலாளர்நாயகம் இலங்கை அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்புக்கு எதிரான கடைசிக் கட்டப் போரில் 20 ஆயிரம் வரையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டதாக மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் ஊடகங்களின் அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

விடுதலைப்புலிகளைத் தோற்கடித்த தனது யுத்த வெற்றியை இலங்கை அரசு பெரிய அளவில் கொண்டாடி வருவதை ஐ.நா. செயலாளர் நாயகம் கடுமையான வார்த்தைகளில் விமர்சித்துள்ளார்.

### அரசின் செயற்பாடு பாதிப்பை ஏற்படுத்தும்

வெற்றிக்களிப்பை கொண்டாடிவரும் அரசின் செயற்பாடு அரசு மற்றும் சர்வதேச சமூகம் ஆகிய தரப்புக்கள் போரினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு உதவுவதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமையும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

'போரின் பாதிப்புக்களால் ஏற்பட்ட வடுக்களைக் குணமாக்க ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தருணம் இது' எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுக் கூறினார்.

போரின் பாதிப்பால் அகதிமுகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள உதவிக்காக ஏங்கும் லட்சக் கணக்காக பொதுமக்களுக்கு வேண்டிய உதவிப் பணிகளை மேற்கொள்ளுமாறு தாம் இலங்கை அரசைக் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரித்தானியாவுக்கான பிரதிநிதி மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற மனித உரிமை அமைப்புக்களும் இலங்கையில் போரின் கடைசி நாள்களில் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் உயிரிழந்ததாக வெளியான தகவல்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென வலியுறுத்திக் கூறின. (அ-03)


Diploma புதிய பிரிவு ஆரம்பம்
Web Development
6 Month Duration Unlimited practical
XHTML, CSS, JavaScript, PHP, MySQL, XML (RSS,Maps)
Dreamweaver, Photoshop, Flash, Server(Apache and IIS)
Domain Registration,Hosting,Control panel,SearchEngine optimize,Google™ (WebMaster tools, AdSense, Adwords)
E-mail marketing, Affiliate marketing, Merchant tools.
Extra: Introduction ASP, JSP
New Batch :10.06.2009 09.00 AM
Class Time: Tue,Wed,Thu,9-10 AM
MCS விபரங்களுக்கு நேரில்
Supported By UNDP/JRRP
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Root - 764



நெடுவலையில்
37 லட்சத்திலிருந்து...





# 37, பீற்றஸ் லேனில்
1150 Sqft, 850 Sqft, 800 Sqft, 750 Sqft, 700 Sqft
ஆடம்பரத் தொடர்மாடி மனைகளை உங்களதாக்க...
0777592935, 0714457244
From - Lovely home Providers
SIRA CIVIL ENGINEERS (PVT) LTD.



லாவா வைத்தியசாலை
90/7, பொற்பதி வீதி, கொக்குவில்.
★ யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்களின் சிகிச்சைகள்.
★ உடல் பருமனைக் குறைப்பதற்கான சிகிச்சைகள்.
★ சகலவிதமான இரத்த சல பரிசோதனைகள்.



இரவு முகாமையாளர் தேவை
45 வயதுக்கு மேற்பட்ட ஆங்கிலம், சிங்கள மொழிக ளில் உரையாடக் கூடிய இரவு முகாமையாளர் உடன் தேவை.
(உல்லாசப் பயணிகள் விடுதி அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)
விளம்பர இல. 3906,
C/O உதயன், யாழ்ப்பாணம்.



உள்நாட்டு வெளிநாடுகளிற்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
FedEx Express
(யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்)
வாடிக்கையாளரின் நலன்கருதி
லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750/= ரூபா வீதமும்.
கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION
MMBL Money Master
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவை பெற்றுக்கொள்ளலாம்
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)



YOGI'S
(Academy of Beauty Culture, Hair Dressing & Home Science)
Cakes And Sugar Craft
Exhibition 2009
யாழ்.பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ் ஆதரவில் எமது அக்கடமி மாணவிகள் வழங்கும் கேக், மாச்சீனி மலர் அலங்காரக் கண்காட்சி 12.06.2009 முதல் ஆரம்பம்.
யாழ்.அரச அதிபர் திரு. K.கணேஷ் அவர்கள் இக்கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார்.
இடம்: 75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
காலம்: 12.06.2009 மு.ப.10மணி முதல் இரவு 7மணி வரை
*13 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை காலை 9 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை
தொ.பே: 222 2796, 060 221 0077.
நிர்வாக இயக்குநர்





பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லையா ! நீங்களும் பட்டதாரி ஆகலாம் .....
அனைத்து துறைகளிலும்
இந்தியாவில் பட்டப்படிப்பு
July 1st week கல்வி ஆண்டு ஆரம்பம்
HINDUSTAN COLLEGE OF ARTS AND SCIENCE
Affiliated To MADRAS UNIVERSITY
A/L அனைத்து துறை மாணவர்களுக்கு...
UNDER GRADUATE PROGRAMME (Full time - 3yrs)
B.Sc. - Biochemistry,
B.Sc. - Electronics & Communication Science,
B.Sc. - Microbiology,
B.Sc. - Biotechnology,
B.Sc. - Computer Science,
B.Sc. - Information Systems Management,
B.Sc. - Electronic Media,
B.Sc. - Visual Communication)
B.Com. (General)
B.C.A
B.B.A
POST GRADUATE PROGRAMME
M.Sc. (Information Technology, Computer Science, Applied Microbiology, Biotechnology, Bioinformatics, Electronic Media)
M.A Public Relations
10 நாட்களில் அனுமதி பெற்றுத்தரப்படும்.
A/L Arts படித்த மாணவர்களும் வர்த்தக (BBA, B com) கணனி (BCA) துறைகளில் பட்டப்படிப்பைத் தொடரும் வாய்ப்பு
SONA COLLEGE OF TECHNOLOGY
Sona Nagar, Salem - 636005, Tamilnaadu, India
APPROVED BY AICTE, AFFILIATED TO ANNA UNIVERSITY & ISO CERTIFIED
A/L கணித துறை மாணவர்களுக்கு பொறியியல் கற்கைகள்...
COURSES OFFERED
B.E / B. Tech. Degree [Full time – 4 yrs]
B.E. - Civil Engineering
B.E. - Mechanical Engineering
B.E. - Computer science & Engineering
B.E. - Electrical & Electronics Engineering
B.E. - Electronics & Communication Engineering
B.Tech - Information Technology
B.Tech - Fashion Technology
M.E. Degree [Full time – 2yrs]
MBA - Master of Business Administration
MCA - Master of Computer Applications
ELIGIBILITY 3 PASS IN A/L
ADMISIONS ARE GIVEN IN COLOMBO & JAFFNA
August 1st week கல்வி ஆண்டு ஆரம்பம்
V4 Educational Consultancy(Pvt)Ltd
Head Office- #7-1/1, W.A.Silva mawatha, Wellawatte, Colombo-06.
Branch- #274, Pointpedro Road, Aanaippanthi Junction, Jaffna.
Web: http://www.v4edu.com Email: mail@v4edu.com
T.P- 0773867257, 0775936343, 0212228374


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.06.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.